முரசொலி

அண்ணா மலர்

1972 - ரூ 1



நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச விட்டுமனை!
நிலப்பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு
மறுவாழ்வு!
குடிசை மாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்



இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்ப நலத் திட்டம்



பெருகிடும்
மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை
எனவே
திட்டமிட்ட குடும்பம்–
நமக்கும் நல்லது!
நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்.
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.









புன்னகை விழா!

அண்ணு பிறந்து 64 ஆண்டு கள் காலக்கணக்கில் ஓடி விட்டன.

நமக்கோ அவர் திரு முகத்தைக் காண முடியாமல் நான்கு ஆண்டு கள் நகர்ந்து விட்டன.

இன்று அவர் இருந்திருந்தால் அவருக்கு வாழ்த்துக்கூற – அவர் புன்னகையின் பசுமை காண எத்தனை விதப் பறவைகள் அந்தச் சரணாலயம் நோக்கிச் சிறகடித் திருக்கும்!

எந்த ஊரில் அவர் பிறந்த நாள் விழா எழிற் கோலம் பெற் றிருக்கும் –

பிறந்த நாள் செய்தியாக எத்தகு முத்தாரம் கிடைத்திருக்கும்.

அந்தக் குறை தவிர –
அவர் பிறந்தநாள் விழா–67ல், 68ல் 69-ல் நடைபெற்றது போலவே இன் றும் நடைபெறுகிறது.

அவர் விட்டுச் சென்ற பணி அவர் அமைத்துத் தந்த அரசு–

அவர் தடத்தில்–அவர் நிழலில்– மானசிகமான அவர் தலைமையில் நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

கடமை, கண்ணியம், கட்டுப் பாடு இதயத்தில் என்றென்றும் அவர் வடிவாய் நிற்கிறது.

அண்ணு பிறந்த நாள் விழா–

ஏழைகளுக்குப் பட்டா வழங்கும் விழாவாக பாட்டாளித் தோழனுக்கு வீட்டு மனை வழங்கும் விழாவாக– கண்ணொளி கொடுக்கும் கவின்மிகு விழாவாக நடைபெறுகிறது.

ஏழை பட்டாப் பெறும் போதும், வீட்டு மனை அடையும் போதும் அவன் முகத்தில் மலரும் புன்னகை யில் அண்ணனின் திருமுகம் தெரி கிறது. அதில் புன்னகை மலர்கிறது.

அந்தப் புன்னகை ஒவ்வொரு இல்லத்திலும் சுடர் விட இன்று உறுதி கொள்வோம்.



உன்னை நீ எண்ணிப்

உடன் பிறப்பே!

பூமிக்கடியில் தங்கம் இருக்கிறது. அனி மணிகள் செய்து ஆரணங்குகளுக்குப் பூட்டி அழகோவியமாக்குகிறார்களே; அந்தத் தங் கத்தையல்ல நான் குறிப்பிடுவது!

மழலே சிந்தும் குழவிகளுக்கு மணிமார் பிலே உருண்டிட பதக்கம் செய்யப் பயன் படுத்துகிறார்களே; அந்தத் தங்கத்தையல்ல நான் உனக்கு நினைவூட்டுவது!

நமது தங்கம் – தமிழ்த் தங்கம் – காணக் கிடைக்காத தங்கம் – ஏழைக்கும் எளிதில் கிடைத்திட்ட தங்கம்! இன்னுமா உனக்குப் புரியாமல் இருக்கும்?

வங்கக் கடலோரம் புதைந்திருக்கும் அந் தத் தங்கம் – புறவொளி காட்டிப் பொன்முறு வல் செய்யும் தங்கமல்ல! அகவொளி வழங் கிடும் அறிவுத் தங்கம்!

அந்தத் தங்கத்தைப் பறிகொடுத்து ஆண்டு கள் நான்கு ஓடி விட்டன.

இல்லே! இல்லே! பறி கொடுக்கவில்லே. யாராலும் நம்மிடமிருந்து அந்த ஒளிப் பிழம் பைப் பறித்துக் கொள்ள முடியாது.

நகைமுகம் காட்டி நம்மை அரவணைத்த தங்கம் அது!

பகைவர்க்கும் அருள்புரிந்து ஆதரவு நல் கும் தங்கம் அது!

நம்மை ஒரே குடும்பமாக ஆக்கிய தங்கம் அது!





பார்!

நம் மொழிக்கு ஆக்கமளித்த தங்கம்!

நம் உணர்வுக்கு ஊட்டம் தந்த தங்கம்!

புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிய தமிழர்தம் தரணி, புழுதியில் மூழ்கிப் புய லிடை உருமாறியது கண்டு உள்ளம் வெதும் பிய தங்கம்!

வாட்டம் நாட்டைக் காக்காது எனக்கூறி, வலிவிழந்த தாயகத்தை நிமிர்ந்து நிற்கச் செய்த தங்கம்!

அந்தத் தங்க ஒளி தமிழகமெங்கும் நின்று நிலவிட ஆண்டுதோறும் என்றல்ல; அணுப் பொழுதும் வீணுக்காமல் பணி புரிகின்றோம்.

நம் பணியின் வெற்றி விளைவுகளைக் கணக் கிட்டு, மேலும் தொண்டாற்ற இதயத்தில் தெம்பு ஏற்றிக் கொள்ளத்தான் இந்த ஒரு நாளில் விழா எடுக்கிறோம்.

ஒளியுமிழும் இந்நாளில் உன்னிடம் ஒன் றிரண்டு கேட்டிட விழைகிறேன்; உரிமை யின் காரணமாக! உனக்கும் எனக்குமுள்ள "ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை" என்ற உற வின் அடிப்படையில்!

உடன் பிறப்பே, நீ ஒவ்வொரு நாளும் காலை யில் கண் மலர்ந்து எழும்போது என்ன புதிய சிந்தனையோடு எழுகிறாய்?

என்ன பொலிவுமிகு திட்டங்களோடு எழு கிறாய்? கொஞ்சம் எண்ணிப் பார்!

"உன்னையே நீ எண்ணிப் பார்" என்று












உலகச் சிந்தனையாளன் சாக்ரடீஸ் உறக்கக் கூவினனே; அதற்கொப்ப உன்னையே நீ எண்ணிப் பார்!

நீ ஒரு அமைச்சராக இருந்தால், இன்றைக்கு மக்களுக்கென என்னென்ன திட்டங்கள் தீட்டுவது என்று எண்ணிடுவாயா?

அல்லது நேற்று எடுத்த முடிவுகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற கணக்கினை அறிந்திடுவாயா? இதில் எதனை முதலில் செய்வாய்?

நீ ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால்; உன் தொகுதியில் இணைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் – மேலவை உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு டெல்லியில் எதிரொலிக்க வேண்டிய கருத்துக்களைச் சேகரிப்பாயா? அல்லது அவர்கள் நம்மோடு தொடர்பு கொள்ளட்டும் என்று எதிர்பார்த்து இருப்பாயா?

நீ ஒரு சட்டமன்ற உறுப்பினராகவோ, மேலவை உறுப்பினராகவோ, நகராட்சித் தலைவராகவோ, ஒன்றியத் தலைவராகவோ; ஊராட்சித் தலைவராகவோ, மாநகராட்சித் தலைவராகவோ, உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினராகவோ இருந்தால் – இன்றைக்கு நம் பகுதி மக்களின் பொதுத் தேவைகள் என்ன என்பதைக் கவனித்து அதனை நிறைவு செய்ய ஓடியாடிப் பணியாற்றுவாயா? அல்லது தேடி வரும் சிபாரிசுகளை கவனித்தால் போதுமென வீட்டுக்குள் முடங்கியிருப்பாயா?

நீ, தலைவர்களிலே ஒருவனாக இருந்தாலும், தகுதி மிக்கப் பதவிகளிலே இருந்தாலும், இது தொண்டர்களின் உழைப்பால் கிடைத்த வாய்ப்பு என்று கருதுவாயா? அல்லது கிடைக்க வேண்டிய இடம் கிடைத்தது என்று கித்தாப்பு மொழி பேசுவாயா?

உடன் பிறப்பே, என்னைப்போல் நீ ஒரு தொண்டனாக இருந்தால்–உன் கூட்டத்தில் ஒருவன் தான் உன் கட்டளைப்படி உன்னை வழி நடத்திச் செல்ல முன்னால் போய்க்கொண்டிருக்கிறான் என்று என்னைப் பற்றி எண்ணிக் கொள்வாயா? அல்லது, தூண்டி விடுவோர் தூண்டில் மீனைத் துள்ளிடத் துடிப்பாயா?

உடன் பிறப்பே! ஒற்றுமைக்கு வழி வகுப்பாயா?
வேற்றுமைக்கு விதை தெளிப்பாயா?
கடமையாற்றக் கண் விழிப்பாயா?
கயமை புகுந்திடக் கதவு திறப்பாயா?
அண்ணன் பெயரால் இந்த ஐயப்பாடுகளை எழுப்புகிறேன்; அண்ணன் பிறந்த நாளில்!

அன்பே! ஆருயிரே! அருமை உடன் பிறப்பே! இதற்கு உன் மனச்சாட்சி அளிக்கும் விடையைப் பொருத்ததே நமது இலட்சியத்தின் வெற்றி!

அன்புள்ள

மு. க.












அண்ணாவோடு வாழ்ந்த

1953-ம் ஆண்டு சூலைத் திங்கள் 14-ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் மும் முனைப் போராட்டத்தில்குதித் தது. கழகத்தின் ஒப்பற்ற ஒரு பெரும் தலைவராகவும், சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் அறப்போர்க் கட்டளைகளைத் தாங்கிக் கொண்டு கழகத்தின் கட் டிளங் காளையர் ஆயிரமாயிர மாக அணி அணியாக ஆங் காங்கு திரண்டனர். கழ கத்தின் முன்னணியினர் ஆங் காங்கு அறப்போர்ப் படை களுக்குத் தலைமை தாங்கினர். அந்த ஒரு நாளிலே மட்டும் தமிழகம் முழுவதிலும் பதி னாயிரத்திற்கு மேற்பட்ட கழக வீரர்கள் சிறைப்பிடிக்கப் பட்டார்கள்.

சூலைத் திங்கள் 14-ஆம் நாள் தான் பிரஞ்சுப் புரட்சி நொறுக்கிய நாள்!—ஆணவ அரசும், ஆதிக்க அதிகாரிக ளும்,சர்வாதிகார மன்னனும், யதேச்சாதிகார பிரபுக்களும் விரட்டியடிக்கப்பட்ட நாள்!- அடிமை விலங்கு ஒடிக்கப் பட்டு 'சமத்துவம் -சகோதரத் துவம் - விடுதலை' என்ற முழக் கம் வெற்றிக் களி கொண்ட நாள்! - பிரான்சு நாட்டில் வல்லரசு வீழ்ந்து நல்லரசு ஏற்படக் காரணமாக விளங் கிய நாள்!

வரலாற்றுச் சிறப்பு பெற்று விளங்கிய அந்த சூலை 14-ஆம் நாளைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் மும் முனைப் போராட்டத்திற்கு உரியதாகத் தேர்ந்தெடுத் தார்கள்.

ஒரே நாளில் மூன்று முனை களில் போராட்டங்கள் நடத் திக் காட்டப்பட்டன. ஒரு முனை அப்பொழுது முதல மைச்சராக இருந்த ஆச்சாரி யார் அலுவலகத்திற்கு முன் னால் நடைபெற்ற குலக் கல்வி எதிர்ப்பின் சார்பான மறியல் போராட்டம் ஆகும்; மற்றொரு முனை தி. மு. கழ கத்தின், உரிமை வேட் கையை 'முட்டாள் தனமா னது' என்று இழித்துக் கூறிய பண்டித நேருவுக்குப் பாடம் கற்பிப்பதற்காகவும், கழகத்தின் வலிமையை உணர்த்துவதற்காகவும் மேற் கொள்ளப்பட்ட இரயில்நிறுத் தப் போராட்டம் ஆகும்; மூன்றுவது முனை வடநாட் டான் ஆதிக்கத்தை நிலை நாட்டும் வகையில் வடநாட் டான் பெயரைத் தாங்கி நின்ற —'டால்மியாபுரம்'— என்ற புகைவண்டி நிலையத் தின் பெயரைக் 'கல்லக்குடி' என்ற உரிய தமிழ்ப் பெய ராக மாற்றி அமைக்கும் போராட்டமாகும்.

போராட்டம் நடைபெறு வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே, போராட்டத்தை



அந்தச் சிறைவாசம்

கல்வி அமைச்சர்



வெற்றி கொண்ட நாளாகும்! அந்த நாள்தான் பிரெஞ்சுப் புரட்சிப் படை வெகுண்டெ முந்து வீறு கொண்டு பாய்ந்து கொடுஞ் சிறையாக விளங்கிய பாஸ்டிலி சிறையைத் தகர்த்தும

தூண்டி விட்டோம் என்ற குற்றம் சுமத்தப்பட்டு அறிஞர் அண்ணு அவர்களும், நானும், தோழர் என். வி. நடராசன் அவர்களும், — தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும், தோழர் சம்பத்து அவர்களும் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப் பட்டோம். நாங்கள் ஐவரும் சிறைக்குள்ளே அடைபட்டுக் கிடந்த நேரத்தில் தான் கழக முன்னணியினரும், கழக வீரர்களும் ஊக்கத்தோடும், உள்ளக் கிளர்ச்சியோடும் மூன்று முனைகளிலும் நின்று அறப்போர் புரிந்தார்கள்.

மாநில முதல் நடுவர் நீதி மன்றத்தில் எங்கள் மீது போடப்பட்ட வழக்குகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. நாங்கள் எங்களுடைய நோக்கங்களையும், நடந்தவைகளையும் கூறி எதிர் வழக்காடினோம். இரண்டு தினங்களுக்குப் பிறகு எங்கள் வழக்குகள் முடிவுற்று எங்களுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. எங்களுக்கு மூன்று திங்கள் சிறைவாழ்வு தண்டனையாக அளிக்கப்பட்டது. தண்டனை பெறுவதற்கு முன்பே, அதாவது வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே நாங்கள் ஈட்டுறுதி கொடுத்து விட்டு வெளியே வர மறுத்துவிட்டு இரண்டு திங்கள்களுக்கு மேல் சிறை வாழ்வைப் பெற்றேன். தண்டனைக்குப் பிறகு மூன்று திங்கள்கள் சிறை வாழ்வைக் கழிக்க வேண்டி நேரிட்டது.

சென்னை மத்திய சிறையில் நானும் அறிஞர் அண்ணு அவர்களும் ஒரே கொட்டடியில் அடைக்கப் பட்டோம். மற்ற நண்பர்கள் தனித்தனி கொட்டடிகளில் அடைக்கப் பட்டார்கள். பேரறிஞர் அண்ணு அவர்களோடு நான் சிறையில் கழித்த அந்த நாட்கள் என்றென்றும்எனது மனதை விட்டு அகல முடியாத நாட்களாகும்.



அந்த நாட்களில் நானும், ஏனைய நண்பர்களும் அறிஞர் அண்ணு அவர்களிடமிருந்து பெற்ற அறிவுரைகள்—விளக்கவுரைகள் தெளிவுரைகள்—கனிவுரைகள்—கருத்துரைகள்—அரசியல், பொருளியல், சமூகவியல் பற்றிய உண்மைகள் மிகப் பலவாகும்.

நாள்தோறும் மாலை 4—30 மணியிலிருந்து மாலை 6 மணி வரையில் (அதாவது எங்களைக் கொட்டடிக்குள் அடைக்கும் நேரம் வரையில்) சிறையிலுள்ள பெரிய அரச மரத்தடியின் மேடையில் அமர்ந்து அறிஞர் அண்ணு அவர்களோடு அளவளாவுவோம். நாங்கள் எழுப்புகிற ஐயங்கள், வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தெள்ளத் தெளிவாக நாங்கள் மறுப்புரை கூற முடியாத வகையில் விளக்கங்கள் அளிப்பார்கள். சில நேரங்களில் ஒரு திங்கள், இரண்டு திங்கள் தண்டனைப் பெற்றுச் சிறைப்பட்ட கழகத் தோழர்களும் மாலை நேரங்களில் அறிஞர் அண்ணுவிடம் வந்து உரையாடி மகிழ்வார்கள்.

தண்டனை பெற்ற மும்முனைப் போராட்ட வீரர்களெல்லாம் வெளியேறிய பிறகு நாங்கள் ஐவர் மட்டும் இரண்டு திங்களுக்கு மேல் தனியே இருக்கும்படி நேர்ந்தது. சிறையிலுள்ள பிற குற்றக் கைதிகளைக் காணும் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் அறிஞர் அண்ணு அவர்கள் அவர்களின் தனிப்பட்ட சமூகச் சூழ்நிலைகளை அறிந்து கொள்வதிலும், குற்றம் புரிந்ததற்கான காரணங்களைத் தெரிந்துகொள்வதும், அவர்களின் உளப்பாங்கைப் புரிந்து கொள்வதிலும் தனி ஆவல் காட்டி வந்தார்கள்.

மாலை 6-00மணிக்கு எங்களை யெல்லாம் எங்களுக்குரிய கொட்டடிகளில் அடைத்துவிடுவார்கள். அறிஞர் அண்ணுவும் நானும் ஒரே கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்ததால் இரவு நெடுநேரம் வரையில் அவர்களோடு உரையாடி மகிழும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. அறிஞர் அண்ணு அவர்கள் இரவு மூன்று மணி வரையில் தூங்கமாட்டார்கள். அதற்குப் பிறகு தான் அவர்கள் தூங்க முயலுவார்கள். என்னால் இரவு பதினேழு மணி அல்லது பன்னிரண்டு மணி வரையில் தான் தூங்காமல் சமாளிக்க முடியும். பிறகு என்னையுமறியாமலேயே தூங்கிவிடுவேன். அண்ணுவுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போதே தூங்கிவிடுவேன். எனக்குத் தூக்கக் கலக்கம் ஏற்பட்டவுடனே கொட்டாவி வந்துவிடும். நான் கொட்டாவி விடத் தொடங்கும்போது அண்ணு அவர்கள் ''தூக்கத்திற்கு முதல் மணி அடித்தாகிவிட்டது!'' ''இரண்டாவது மணி அடித்தாகிவிட்டது!'' என்று கேலி செய்துகொண்டே இருப்பார்கள். நான் முடிந்த வரையில் சமாளித்துப் பார்த்துவிட்டுப் பிறகு என்னை அறியாமலே தூங்கிவிடுவேன். அறிஞர் அண்ணு அவர்கள் அறைக் கதவின் கம்பிகளுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு, கம்பிகளுக்கு இடையில் வெளித் தாழ்வாரத்திலிருந்து வரும் மின்விளக்கு வெளிச்சத்தில் ஏதேனும் அவர் விரும்பிய ஒரு நூலைப் படித்துக்கொண்டிருப்பார்கள். இடையிடையே நான் விழித்துக்கொண்டு பார்க்கும்போதும் அவர்கள் படித்துக்கொண்டே இருப்பார்கள். சில இரவு நேரங்களை அறிஞர் அண்ணு அவர்கள் கட்டுரைகள் எழுதப் பயன் படுத்தியிருக்கிறார்கள்.

'பிரெஞ்சுப் புரட்சி', 'பிரான்சு நாட்டை ஆட்டிப் படைத்த ரிஷ்லு', 'ஜியார்டனே புருனே', 'ரஸ்புடீன்' போன்ற வரலாற்றுக் கட்டுரைகளை அறிஞர் அண்ணா அவர்கள் சிறையில்தான் எழுதினார்கள். பின்னர் அவற்றைத் 'திராவிட நாடு' ஏட்டில் வெளியிட்டார்கள். சில நாட்களில் அண்ணா அவர்கள் அகநானூறு, கலித்தொகை, புற நானூறு, திருக்குறள் போன்ற இலக்கியங்களின் சிறந்த பகுதிகளைப் படிக்கச் சொல்லி விளக்கவுரையும், கருத்துரையும் கேட்பார்கள். நான் அவற்றிலுள்ள, நயங்களை எடுத்துச் சொல்லும் போது நயங்களைப் பெரிதும் வியந்து மகிழ்வதோடு, புலவர்களுக்குத் தோன்றாத சில நயங்களையும் சுட்டிக்காட்டுவார்கள். அண்ணா சுட்டிக் காட்டும் நயங்கள் எண்ணி எண்ணி மகிழத்தக்கவையாக இருக்கும்.

சில நேரங்களில் அண்ணா அவர்கள் தம்முடைய இளமைப் பருவக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், கல்லூரியில் படிக்கும்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகள், நீதிக் கட்சியில் சேர்ந்து தொண்டாற்றியபோது ஏற்பட்ட அனுபவம், பெரியாரோடு சேர்ந்து பணியாற்றியபோது நிகழ்ந்த விளைவுகள் போன்ற வற்றைக் கதை கதையாகச் சொல்லுவார்கள். அவையெல்லாம் கேட்கக் கேட்க வியப்பூட்டுவனவாகவும், சுவை பயப்பனவாகுகவும், தெளிவுதருவனவாகவும் இருக்கும்.

சில வேளைகளில் அவர் படிக்க விரும்புகிற ஆங்கில நூல்களை என்னிடத்தில் தந்து சிறைக் கதவு அருகில் உட்கார்ந்து படிக்கச் சொல்லி அவர்கள் படுக்கையில் படுத்தவாறே கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

பெரும்பாலும் இரவு நேரங்களில்தான் அண்ணா அவர்கள் உற்சாகத்தோடும், உள்ளக் கிளர்ச்சியோடும் காணப்படுவார்கள். இரவு நேரத்தில் அதிகம் சாப்பிடமாட்டார்கள். நான் டீயாவது காப்பியாவது போட்டுத் தருவேன். அதைக் குடித்துவிட்டு நீண்ட நேரம் விழித்துக் கொண்டிருப்பார்கள். இரவு மூன்று மணிக்கு மேல்தான் தூங்க முயலுவார்கள். பகல் 10 மணி வரையில் தூங்குவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதி வாய்ப்புகளையும், பணிகளையும் முறைப்படி ஒழுங்காகச் செய்வதில் நான் கண்ணுங் கருத்துமாக இருப்பேன். சிறையில் தரும் உணவுகளையும், காணவரும் நண்பர்கள் தரும் பழங்கள், ரொட்டி போன்றவைகளையும் வாங்கிப் பக்குவப்படுத்தி வைத்து அண்ணா விரும்பும் நேரத்தில் விரும்பும் அளவுக்கு விருப்பமானவைகளை வழங்குவதில் என்னை நானே பழக்கப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தேன்.

பகல் நேரங்களில் தோழர் என். வி. என். அவர்களைக் கிண்டல் செய்வதிலும், வேடிக்கைப் பேச்சு பேசுவதிலும் பொழுதைக் கழிப்பார்கள். தோழர் என். வி. என். அவர்



கள் முகச்சவரம் செய்து கொண்டிருந்த நேரத்தில் அவரது மீசையைச் சரிசெய்வதாகக் கூறிக் கத்தரிக்கோலை வாங்கி அவரது அரை மீசையை அடியோடு எடுத்துவிட்டார். தோழர் என். வி.என். அப்படியே பதறிப் போய் விட்டார். அரை மீசை போய் விட்டதே என்று மிகவும் கவலைப்பட்டு வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். அண்ணாவும், நாங்களும் அவரைக் கேலி செய்து விழுந்து விழுந்து சிரித்து மகிழ்ந்தோம். தோழர் என்.வி.என் அவர்கள் வேறு வழியில்லாமல் மற்றொரு பாதி மீசையையும் எடுத்துவிட்டார். இப்படிச் சிறுவிளையாட்டுக்கள் புரிந்து மகிழ்வதிலே அண்ணாவுக்குத் தனி விருப்பம் உண்டு.

சிறைச்சாலையில் எங்களுக்குக் குறிப்பிட்ட சில நாள் இதழ்களை மட்டும் அன்றாடம் தருவார்கள். அவற்றில் எங்களுக்குத் தெரியக் கூடாத செய்திகளும், சுழகச் செய்திகளும் கறுப்புமையால் அடிக்கப்பட்டிருக்கும். கிடைக்கும் செய்திகள் முழுவதையும் அண்ணா அவர்கள் ஒன்று விடாமல் படித்து முடித்து விடுவார்கள்.

சிறைச்சாலையில் எவ்வளவு வசதிக் குறைவு இருந்தாலும் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்கிற உள்ளத்தோடுதான் ஒவ்வொருவரும் சிறை வாழ்வை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துவார். சிறைப்பட்ட கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் சிறை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று எல்லோர்க்கும் அடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள். சிறையில் வசதிகள் கேட்பதையோ அல்லது வசதிகளைக் கோரி போராடுவதையோ அண்ணா அவர்கள் அறவே விரும்புவதில்லை. ஒரு நாள் 'சி' வகுப்பிலே இருந்த கழகத் தோழர்கள் ஆரம்பத்தில் சிறு நீர்ப் பானையை அறையிலிருந்து வெளியேற்ற மறுத்து விட்டனர். 'சி' வகுப்புக் கைதிகள் சிறுநீர்ப் பானைகளை அவரவரேதான் அகற்றவேண்டும் என்பது சிறையில் கடைப் பிடிக்கப்பட்டு வரும் பழக்கமாகும். சிறை யதிகாரிகள் எவ்வளவோ சொல்லியும்

கழகத் தோழர்கள் சிறுநீர்ப் பானைகளை அறையை விட்டு விடியற்காலையில் அகற்ற மறுத்துவிட்டனர். பகல் 10 மணி வரையில் அதிகாரி களுக்கும் கழகத் தோழர் களுக்கு மிடையே சச்சரவு நடந்து கொண்டிருந்தது. பிறகு சிறை அதிகாரி ஒருவர் இந்த நிலைமையை அண்ணு விடம் தெரிவித்து, அண்ணு வின் உதவியை நாடினார். அண்ணு அவர்கள் என்னை அனுப்பிக் கழகத் தோழர் களைச் சிறை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி அறிவுரை கூறிவிட்டு வரும் படி சொன்னார்கள். நான் போய் அண்ணுவின் கருத்தைக் கூறினேன். அவர்கள் கேட்க வில்லை. நிலைமையை அண்ணு விடம் வந்து கூறினேன். அண்ணு அவர்கள் உடனே தாம் வந்து எல்லாச் சிறு நீர்ப்பானைகளை வெளியே அகற்றுவதாகவும், கழகத் தோழர்கள் அனைவரும் ஒதுங்கி உட்கார்ந்துகொள் ளட்டும் என்று சொல்லச்



சொல்லி என்னை மீண்டும் அனுப்பினார். நான் அண்ணு அவர்கள் கூறியதை அப்படியே வெளியிட்டேன். கழகத் தோழர்கள் உடனே தங்கள் செயலுக்காக வருந்திக் கட மையை ஆற்றினர். பின்னர் அண்ணுவிடம் வந்து கண்ணீர் சிந்தியவண்ணம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

சிறையதிகாரிகளும், சிறை காவலர்களும் அறிஞர் அண்ணு அவர்களின் மீதுதனி அன்பும், தனிமதிப்பும் வைத் திருந்தனர். கைதி செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங் குறச் செய்வதில் அண்ணு அவர்கள் ஒருபோதும் தயங் கியதில்லை.

அறிஞர் அண்ணு அவர்க ளோடு நாங்கள் வாழ்ந்த சிறை வாழ்வு எங்களுக்கெல் லாம் சிறந்த பண்பினையும், பயனையும் வளர்க்கும் பணி களுக்கு ஊக்கம் தருவதாக அமைந்திருந்தது. எவ்வள வோ நிகழ்ச்சிகளைச் சிறை வாழ்வைப் பொறுத்து அடுக் கடுக்காய்ச் சொல்லலாம் என்றாலும் ஏடு இடந் தராது என்று அஞ்சி அவற்றைச் சொல்லாமல் விடுக்கிறேன்.

அன்புக்கும், அறிவுக்கும், ஆற்றலுக்கும், பண்புக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய பேரறிஞர் அண்ணு அவர் களின் பெரும் புகழ் என் றென்றும் வாழ்க! அவரது புகழொளி நமக்கெல்லாம் வழிகாட்டுவதாக!

∴

literon

பேரறிஞர் அண்ணுவின் நினைவுக்கு எமது அஞ்சலி!

எரியாத வீடுகளுக்கு எரியாத கூரைச் சாதனங்களைத் தயாரிப்பது

லட்ரூப்பிங்ஸ் லிமிடெட்.



இந்தியாவிலேயே முதன் முறையாக மாறு பட்ட நவீன கூரைச் சாதனங்களை வெளி நாட்டுத்தொடர்புடன் தயாரிப்பது எங்கள் நிறுவனம். லட்ரூப்கூரைச்சாதனம் வசீகர மானது,நவீனமானது இலேசானது, எல்லா பருவக் காலங்களுக்கும் ஏற்றது. எளி தில் தீப் பிடிக்காதது, மேலும் மலிவானது,

குடிசை மக்களுக்கு, கோழிப் பண்ணைகளுக்கு மாட்டுக் கொட்டகைகளுக்கு தொழில்பட் டறைகளுக்கு. ஏன் எல்லாவற்றிற்குமே சிறந்தது **லட்ரூப்.**

விலை:— ஷீட் ஒன்றுக்கு ரூ. 4—50.

தயாரிப்பாளர்கள் — **லட்ரூப்பிங்ஸ் லிமிடெட்**

6, கஸ்தூரிரங்க ஐயங்கார் சாலை சென்னை 18.

அண்ணா எடுத்த நடவடிக்கைகள்...



அமைச்சர்

என்.வி.என்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இந்த மூன்று தாரக மந்திரங்களை வழங்கிய அண்ணா அவர்கள் அது கழகத் தொண்டர்கள் மட்டுமே கடைப்பிடிக்கக்கூடியது - கழக முன்னோடிகள் மட்டுமே பின்பற்றத்தக்கது என்றில்லாமல் அந்த லட்சிய முழக்கத்தின் மொத்த உருவமாக நடந்து காட்டினார்.

கட்டுப்பாட்டை மீறுபவர்கள் யாராயினும் - அவர்கள் அண்ணாவுக்கு நெருங்கிய நண்பராக இருந்தபோதிலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்திட அவர் தயங்கியதில்லை.

கழகத்தினுடைய அஸ்திவாரமே கட்டுப்பாட்டின் மேல் தான் அமைக்கப்பட்டுள்ளது.

1949-ல் கழகம் துவக்கப்பட்ட இரண்டாண்டு காலத்திலேயே சேலம் சித்தையன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1951-ல் சேலம் மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு நடைபெற்றது. சேலம் மாவட்டச் செயலாளரும், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினருமான சேலம் சித்தையன் தான் மாநாட்டுப் பொறுப்பாளராக இருந்தார்.

மாநாடு முடிந்து அவரிடம் கணக்குக் கேட்டபோது - ''கமிட்டியிடம் கணக்குக் கொடுக்க முடியாது நான் அண்ணா அவர்களிடம்தான் கொடுப்பேன்'' என்றார்.

சேலம் சித்தையன் மிகவும் நாணயமானவர் - நேர்மை தவறாதவர். இத்தனைக்கும் மேலாக தந்தை பெரியாருக்கு மிகவும் வேண்டியவர் -அண்ணாவுக்கு நெருங்கிய நண்பர். தி. க.விலிருந்து தி. மு. கழகம் உருவாகியபோது அதன் எல்லா நிலைகளிலும் ஈடுபாடு கொண்டவர். கழகப் பொறுப்புகள் அனைத்தையும் வகிப்பவர்.

ஆனால் கொஞ்சம் பிடிவாதம் உடையவர். அதனால் தான் மாநாட்டு கணக்கு விவகாரங்களைக் கமிட்டி கேட்டபோது - நான் அண்ணாவிடம்தான் கொடுப்பேன் - கமிட்டியிடம் கொடுக்க முடியாது என்று பிடிவாதமாகக் கூறினார்.

மாநாட்டுக் கமிட்டியினர் அண்ணாவிடம் முறையிட்டனர்.

அண்ணா சித்தையனை அழைத்துக் கேட்டார். ''உன்னை யாரும் தவறு சொல்லவில்லை. உன் நாணயத்தில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் நாமே





'' பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சரியாக மூன்றே மூன்று முறைதான் கல்லூரி முதல்வரைச் சந்தித்திருக்கிறேன் நான்; அந்த மூன்று முறையும்கூட எனது பேராசிரியர்கள் — அவர் ஒன்றும் செய்துவிடமாட்டார் போ' என்று தைரியம் சொன்ன பிறகுதான் போனேன்

அப்போ தெல்லாம் கல்லூரி முதல்வரைப் பார்த்துப் பேசுவ தென்றாலே பெரும் பாக்கியம் செய்ததைப் போலக் கருதுவோம். ஆனால் இப்போதோ, கல்லூரி முதல்வர் மாணவர்களைத் தேடி வகுப்பறைக்குப் போக வேண்டி யிருக்கிறது. அந்த அளவுக்குக் காலம் மாறி விட்டது. இந்த மாற்றத்தை அருமை — பெருமை மிக்க தென்று யாராவது கூறுவார்களானால் அதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

— அறிஞர் அண்ணா

அமைத்த கமிட்டி கணக்குக் கேட்கும்போது அதனிடம் ஒப்படைப்பதுதான் ஜனநாயகம்'' என்றார்.

''நான் உங்களிடம் இப்போதே கணக்குத் தருகிறேன் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றார் சித்தையன்.

தனி மனிதனல்ல முக்கியம். ஒரு அமைப்புக்கு மரியாதை வேண்டும் என்பதால்தான் தி. க.விலிருந்து பிரிந்து வந்துள்ளோம். அங்கு பெரியார்தான் கணக்குக் கேட்பார் - அவரிடம்தான் தர வேண்டும். ஆனால் இங்கு ஜனநாயக முறைப்படி கமிட்டியிடம் கொடுப்பதுதான் முறை - இந்த ஜனநாயக அமைப்பு முறை பிடிக்கவில்லையென்றால் நீ தி. க.விலேயே இருந்திருக்கலாம் என்றார்.

இத்தனைக்குப் பிறகும் சித்தையன் பிடிவாதம் தளராததால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அண்ணா உத்தரவிட்டார்.

அவர் பொறுப்புக்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு ஆறுமாத காலம் தள்ளி வைக்கப்பட்டார். அதே முறையை கூலஞர் இன்று கடைப்பிடித்து வருகிறார்.

ஃ ஃ ஃ

மறைந்த தூத்துக்குடி கே. வி. கே. சாமியும் மிகவும் முக்கியமானவர் - ஐயா பெரியாரின் அன்புக்குப் பாத்திரமானவர். அண்ணாவின் இதயத்தில் இடம் பெற்றவர்.

தூத்துக்குடியில் தி. க. மாநாட்டை சாமி சிறப்பாக நடத்தினார் என்பதற்காக பெரியார் சொன்னார்—

..'திராவிடநாடு கிடைத்தால் அதில் நிர்வாகத் திறமை படைத்த நீதான் கவர்னராக வருவாய் என்று பாராட்டினார். அத்தகைய திறமையாளர் கே. வி. கே. சாமி.

50-51-ல் தூத்துக்குடியில் இரு சோஷ்டிகள் இருந்தன. அதில் கே. வி. கே. சாமி ஒரு கோஷ்டி. அண்ணா எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்டபாடில்லை.

கே. வி. கே. சாமியை அழைத்து அண்ணா அவர்கள் நீ சிறிது காலத்திறகு பொறுப்புகளிலிருந்து விலகியிரு - இரண்டு ஆண்டுகளில் இந்தப் பூசல்கள் சரியாகிவிடும், நீ திரும்பவும் பொறுப்புகளுக்கு வரலாம் என்றார். அதன்படி கே. வி. கே. நடந்துகொண்டார்.

அதன்படி கே. வி. கே. சாமி கழகக் கூட்டங்களில் கூட வந்து தலைவர்களைச் சந்திப்பதில்லை - கூட்டத்தோடு கூட்டமாக இருந்துவிட்டுப் போய்விடுவார்.

ஃ ஃ ஃ

அண்ணா பொதுச் செயலாளராக இருந்து விலகி, நாவலர் அவர்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டநேரம். நான் துணைப் பொதுச் செயலாளர்.

அப்போது சிதம்பரத்தில் செயற்குழு நடைபெற்றது. செயற் குழு நடை பெறற இடத்தில் தலைவர்கள் அமர்வதற்கு மேடை அமைத்திருந்தார்கள். மேடையில் அண்ணா பொதுச் செயலாளர் நாவலர், துணைப் பொதுச் செயலாளர் ஆகிய மூவருக்கும் மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

செயற்குழு கூடுவதற்கு முன்பு உள்ளே நுழைந்த அண்ணா அவர்கள், மேடையிலிருந்த மூன்று நாற்காலிகளில் ஒன்றை கீழே எடுத்துப் போடுமாறு கூறியிருக்கிறார்

செயற்குழு ஆரம்பமான போது அண்ணா உறுப்பினர்கள் வரிசையில் கீழே இருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

மேடையில் அமருங்கள் அண்ணா என உறுப்பினர்கள் கூறியபோது, முறைப்படி அங்கு பொதுச் செயலாளரும், துணைப் பொதுச் செயலாளரும் அமர்ந்துதான் கூட்டத்தை நடத்தவேண்டும். இப்போது நான் அவர்களு

டன் அமருவது கூடாது எனக் கூறினர். உறுப்பினர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் இறுதிவரை மேடைக்கு வரவில்லை.

அது மட்டுமல்ல - கூட்டம் நடைபெற்றபோது அண்ணு எழுந்து - ''பொதுச் செயலாளர் நாவலர் அவர்களே எனக்கு ஒரு ஐந்து நிமிடம் பேச அனுமதி தாருங்கள்'' எனக் கேட்டு எங்கள் இருவரது விழிகளிலும் நீர் மல்கச் செய்துவிட்டார்.

செயற்குழுக் கூட்டம் முடிந்து சென்னை திரும்பிக் கொண்டிருந்தபோது ''ஏன் அண்ணு செயற்குழுவில் மேடைக்கு வராமல் அப்படிச் செய்தீர்கள்?'' என்று நாவலர் கேட்டார்.

''நானே ஒழுங்கை மீறி மேடையில் அமர்ந்தால்- இன்னும் நாலுபேருக்குநாமும் ஏன் மேடையில் அமர்ந்து கொள்ளக்கூடாது என்ற எண்ணம் வரும். ஒழுங்கு குலைவதற்கு நானே கருவியாக இருக்கலாமா? நான் கீழே அமர்ந்து ஒழுங்குமுறைகளை கடைப்பிடித்தால்தான் அண்ணுவே இத்தனை கட்டுப்பாடாக இருக்கிறார் நாமும் அதனைப் பின்பற்ற வேண்டும் என்ற உணர்வு மற்றவர்களுக்கு வரும். அதனால்தான் அவ்வாறு செய்தேன்'' என்றார்.

அண்ணு கட்டுப்பாட்டின் மொத்த உருவமாகத் திகழ்ந்தார் என்பதற்கு இதைவிட வேறு நிகழ்ச்சியிருக்க முடியாது.

ஃ ஃ ஃ

தந்தை பெரியார் அனைவரும் கறுப்புச் சட்டை அணிய வேண்டும் என்று கட்டளையிட்ட நேரத்தில் பெரியாருடன் தி. க.விலிருந்த அண்ணு அவர்கள் 24 மணி நேரமும் கறுப்புச் சட்டை போடுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்தார்.

எல்லாரும், எல்லா நேரத்திலும் கறுப்புச் சட்டை போட்டால் - அதைப் போட்டுக்கொண்டு யாரேனும் தவறு செய்ய நேரும் - அப்போது கறுப்புச் சட்டைக்காரன் தவறு செய்கிறான் என்று பிறர் கூறுவதற்கு இலக்காகி விடும். ஆகையால் கருஞ் சட்டையை மேடையில் பேசும்போது அணியவேண்டும் - அல்லது குறிப்பிட்ட இன்ன நேரத்தில்உடுக்கமுறை வைத்தால் முறையாக இருக்கும் என்றார் அண்ணு.



எம்மைக் கவர்ந்த அண்ணன்
உன்னையும் கவர்ந்தாரோ ?

பெரியார் அதில் பிடிவாதமாக இருந்தார். முழு நேரமும் கருஞ் சட்டை அணியாதவர்களை மேடையில் பேச அனுமதிக்கக்கூடாது என்று கூறினர்.

அதற்கொப்ப அண்ணு அவர்கள் மேடைக்குச் செல்லாமலே இருந்தார்கள்.

தோழர்கள் வந்து எவ்வளவோ வற்புறுத்திஅழைத்த நேரத்திலும்,

''ஐயா கட்டளையிட்டிருக்கிறார். அதை நான் மீற மாட்டேன் - கட்டுப்பாட்டை குலைக்கமாட்டேன் என்று கூறிவிடுவார்.

1946-ல் மெமோரியல் ஹாலில் கருஞ்சட்டை மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு அப்போது போலீஸ் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் தடை போட்டார்.

தந்தை பெரியார் - கழகத் தோழர்கள் அனைவரும் கறுஞ்சட்டை அணிந்து தடை உத்தரவை மீறி மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்று அறிக்கைவிட்டார்,

பெரியார் அறிக்கையைக் கண்ணுற்ற அண்ணு அவர்கள் தடையை மீறி கறுஞ்சட்டை அணிந்து மாநாட்டிற்குச் சென்றார். அண்ணு கருஞ் சட்டை அணிந்து தடையை

மீறி வந்ததைக் கண்ட பெரியார் அவர்கள் வாசலுக்கு வந்து அண்ணுவைக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

அவர் அவ்வாறு தழுவி கண்ணீர் சொரிந்ததற்குக் காரணமும் இருந்தது.

அண்ணு கருஞ்சட்டை அணிவதற்கு விதி முறைகள் கூறியபோது யாரெல்லாம் அண்ணு பிற்போக்குவாதி என்று பெரியாரிடம் குறை கூறி தங்களைத் தீவிரவாதி யாகக் காட்டிக்கொண்டார் களோ அவர்கள் கருஞ்சட்டை அணிந்து தடையை மீறுவதற்கு அஞ்சி மாநாட்டிற்கு வராமல் இருந்தார்கள்.

வரமாட்டார் என எதிர் பார்த்த அண்ணு வந்ததும் - வரவேண்டியவர்கள் ஒளிந்து கொண்டதும் பெரியார் அவர்கள் உண்மையை உணர ஒரு சந்தர்ப்பத்தை யும் - அண்ணு அவர்களின் கட்டுப்பாட்டிற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் இருந்தது.

ஃ ஃ ஃ

அண்ணு அவர்கள் கடைப் பிடித்த அதே கட்டுப்பாடு - ஒழுங்குமுறையைக் கலைஞர் அவர்களும் செயல்படுத்தி வருகிறார்கள்.

கண்ணபிரான் மாவட்டச் செயலாளராக இருந்த நேரத்தில் அவரைக் கேட்காமல் கலைஞருக்கு வேண்டியவர் ஒருவர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து கலைஞரை அணுகியபோது கலைஞர் மறுத்துவிட்டார். மாவட்ட செயலாளர் சொல்லட்டும் வருகிறேன். நட்பு வேறு கட்சிக் கட்டுப்பாடுகள் வேறு. உங்கள் வீட்டுச் சொந்த விழாவிற்கு அழையுங்கள். நானே வருவேன். கட்சிக் கூட்டம் என்னும் போது மாவட்டச் செயலாளர் கூறாமல் நான் வரமாட்டேன் என்று கண்டிப்பாகக் கூறி விட்டார்.

இதைப் போலவேதான் அண்மையில் நடைபெற்ற ஜெயங்கொண்டம் நிகழ்ச்சி.

ஜெயங்கொண்டம் வட்டச் செயலாளருக்கும் -நகரச் செயலாளருக்கும் தகராறு. அவர்கள் இருவரும் தங்கள் தனிச் செல்வாக்கைப் பயன் படுத்தி கலைஞரை கூட்டத் திற்கு அழைக்கிறார்கள். ஆம் கலைஞரோ முடிவு செய்யும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்.

நான் இருவருக்கும் கடிதம் எழுதினேன். - அவர்களிடமி ருந்து பதில் வந்தது. நாங்கள் இருவரும் சேர்ந்தே அழைக் கிறோம் என இருவரும் இணைந்து அச்சடித்த துண்டுப் பிரசுரம் அனுப்பியிருந்தார் கள். அதன் பிறகுதான் அங்கு கலைஞர் சென்றார். ஆனால் ஏ. கே. மூர்த்தி திடீரென கலைஞர் வருகையை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தார். அதன் பிறகுதான் கழகக் கட்டுப்பாட்டைக் காப்பாற்ற அண்ணு வழியில் கலைஞர் நடவடிக்கை எடுத்தார்.

இதிலிருந்து நான் கழகத் தோழர்களுக்கு சொல்லிக் கொள்வது என்னவென்றால் மேடையில் மாலை போடு கிறார்கள் - வாழ்த்துத் தெரி விக்கிறார்கள். அது அவர் களின் உள்ளன்பைப் பிரதி பலிப்பதாகும்.

ஆனால் அதைக் காட்டி லும் - கழகத் தலைவருக்கு நாமே அமைத்த அந்தத் தலைமையின் அன்புக் கட்டளைக்கும், கட்டுப்பாட்டிற்கும் கட்டுப்பட்டு கடமையை நிறைவேற்றுவதுதான் கலைஞ ரின் தலைமைக்கு நாம் செலுத் தும் உண்மையான அன்பா கும் அது மட்டுமல்லாமல் அண்ணு வழியை நாமும் பின் பற்றுகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் அமை யும்.

1949-லிருந்து நான் அமைப்புச் செயலாளராக இருந்து வருகிறேன். இந்தக் காலத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறவேண் டும்.

கழகத்தில் யார் தவறு செய்தாலும் தலைமைஅவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறது. அப்படி நடவடிக்கை எடுப் பவர்களுக்காக பிறர் வாதிட்டு சிபாரிசுக்கு வருகிறார்கள். இதன் மூலம் தவறு செய் பவர்கள் திருந்த வழியில்லா மல், நமக்குப் பாதுகாப்பு உள்ளது என்ற துணிச்சலில் மேலும் தவறு செய்கிறார்கள்.

இப்படி தவறு தொடர்ந் தால கடைசியில் தண்டனை யைத் தவறு செய்பவர்கள் பெறுகிறார்கள். சிபாரிசுக்கு வந்தவர் முடிவில் வர முடிய வில்லை. ஆகையால் சிபாரி சுக்கு வருகின்றவர்கள் முத லில் அவர்களின் தவறைக் சண்டிக்கவேண்டும். அப் போதுதான் கழகத்தில் கட்டுப்பாடு வளரும். அவர் களும் சரியான பாதையில் செல்ல துணை செய்வதாக இருக்கும்.

அண்ணு, இதனை கடைசி வரையில் கடைப்பிடித்தார். சிபாரிசுக்குச் சென்றால் - முத லில் கட்டுப்பாடு - பிறகு பார்க்கலாம் என்பார்.

அண்ணுவுக்கு விழா எடுக் கிறோம். எத்தனையோ சிறப் புச் செய்கிறோம்.

ஆனால் எனக்குத் தோன்று வது நமக்குள் சில கருத்து வேறுபாடுகள் ஒவ்வொரு அமைப்பிலும் இருக்கிறது; இது அரசியல் கட்சியில் சாதாரணம். ஆனால் அண்ணு பிறந்த நாளன்றும், அதற்குப் பிறகும் - அவருக்கு மாலை அணிவிக்கும்போது—

''நாங்கள் கருத்து வேறு பாடுகளை ஒழித்துவிட்டோம்' என்று சபதம் எடுத்தால் அதுவே பெரிய விழா - அண்ணுவிற்குப் பிடித்தமான விழா! அதை நாடு முழுதும் உள்ள கழகத் தோழர்கள் செய்யவேண்டும்.

அண்ணு பிறந்த நாளில் கழகத்தோழர்களுக்கு இதுவே என் தாழ்மையான வேண்டு கோள்.

———



ஓவ்வொரு நகழ்ச்சியும் ஓவ்வொரு இலக்கியம்

அமைச்சர் பேராசிரியர் அன்பழகன்

1942-ல் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள வெள்ளிக்குடியில் முருகேசன் என்பார் திருமணத்திற்கு தலைமை வகிக்க அண்ணா அவர்கள் இசைந்திருந்தார்கள்.

அப்போது நெருக்கடி காலம் - காஞ்சியிலிருந்து புறப்பட்டு - செங்கற்பட்டில் வந்து வண்டியேறி சிதம்பரம் வரவேண்டும்.

மூன்றும் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்த அண்ணா விடியற்காலை நான்கு மணிக்கு சிதம்பரத்தில் இறங்கவேண்டியவர்கள் பயணக் களைப்பில்உட்கார்ந்தபடியே உறங்கி விட்டார்கள்.

அவருக்காக சிதம்பரம் புகை வண்டி நிலையத்தில் நாங்கள் காத்திருந்தோம்.

அண்ணா வண்டியிலிருந்து இறங்கவில்லை. மூன்றும் வகுப்புப் பெட்டியில் அதிக நெரிசல் இருந்ததால் அண்ணா அவர்களை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அண்ணா வரவில்லை என்ற ஐயத்தோடு வெள்ளிக்குடி திரும்பினேம்.

பிறகு நானே திருமணத்தையும் நடத்தி வைத்தேன்.

சிதம்பரம் தாண்டி விழித்துக்கொண்ட அண்ணா அவர்கள் மாயூரத்தில் இறங்கி நிலையத்திலேயே தங்கியிருந்து அடுத்த புகை வண்டியைப் பிடித்து 10 மணிக்கு சிதம்பரம் வந்தடைந்து -ஒரு குதிரைவண்டிமூலம் வெள்ளிக்குடி வந்து சேர்ந்தார்கள்.

எதிர்பார்த்திருந்த அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சி. மணமகன் முருகேசன் அவர்கள் அண்ணா வந்துவிட்ட மகிழ்ச்சியில் மறுபடியும் மணவறையில் தன் மனைவியோடு உட்கார்ந்து இரண்டாவது முறையாகத் தாலி கட்டினர்.

அண்ணாவே வந்து நடத்த வேண்டும் என்ற அவருடைய எண்ணம் நிறைவேறியது.

ஆனால் அண்ணா அவர்களோ அந்த ஒரு திருமணத்திற்கு வருவதற்கும் போவதற்கும் பல இடர்பாடுகொண்டார்கள் என்றாலும் இலட்சிய பயணத்தில் ஈடுபட்டுள்ள நாம் எல்லா இடர்பாடுகளையும் தொல்லைகளையும் தாங்கித்தான் வெற்றி நடைபோடவேண்டுமென்ற அண்ணாவின் கருத்திற்கு அவரே இலக்கியமாக அமைந்தார்.

1940 முதல் தமிழ்நாட்டில் திராவிடர் கழக வளர்ச்சிக்கும், சுயமரியாதைக் கொள்கையைபரப்புதற்கும், தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்து சிதம்பரம் பகுதி ஒரு குறிப்பிடத்தக்க இடமாக அமைந்தது.

பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையாளர்கள் இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலேயும், சுயமரியாதைக் கொள்கையைப் பரப்புவதிலேயும் ஆர்வம் காட்டி வந்



தனர். அண்ணு அவர்களுக்கு சிதம்பரத்துல் பேசுவதிலும், நிகழ்ச்சிகள் அமைக்கச் சொல்லுவதிலும் தனி மகிழ்ச்சி.

'திராவிடநாடு' பத்திரிக்கை வளர்ச்சி நிதிக்காக அண்ணு அவர்கள் 'சந்திரோதய' நாடகத்தை நடத்த இசைந்தார்கள். அந்த நாடகத்திற்கு திருவெற்றியூர் டி. சண்முகம் தலைமை வகித்தார். .

என்னுடைய தந்தையாரும், சிதம்பரம் நகர கழக முன்னணியினரும் தீவிரமாக ஏற்பாடுகள் செய்தோம். அந்த நாடகத்தில் அண்ணு அவர்கள் போலி மடாதிபதியாகவும், போலி சமீன்தாராகவும் நடிப்பார்கள்.

சமீன்தாராக நடிக்கும் கட்டத்தில் அண்ணு அவர்கள் பல நல்ல கருத்துக்களையும், கொள்கைகளையும் வழங்குவதற்காக சமீன்தார் வேடத்தில், தான் செய்த கொலை, முதலிய குற்றங்களுக்காக தான் தண்டனை பெறுவதிலே யிருந்து தப்ப விஷம் அருந்தி உயிர் விட முன்வருகிறார். அந்தக் கட்டத்தில் அவர் நடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் அனைவரும், ஒருவிதமான அச்சத்திலுல் பீடிக்கப்பட்டு அண்ணுவிற்கே அப்படி ஒரு முடிவு ஏற்படுவது போல நினைத்துக் கண்கசிந்து கொண்டிருந்தார்கள்.

அண்ணு அவர்கள் நச்சுக் கோப்பையைக் குடிக்க முனையும் தருவாயில் நாடகத்திற்குத் தலைமை வகித்த சண்முகம் எழுந்து உணர்ச்சி ஆவேசத்தோடு, ''நீங்கள் எதற்காகத் தற்கொலை செய்து கொள்ள வேண்டும், அண்ணு அவர்கள் உயிரை விடக் கூடாது. விஷம் அருந்தக் கூடாது, என்று கூச்சல்போட்டார். அத்தகைய உணர்ச்சியலைகள் மக்களிடம் எழும் வண்ணம் அண்ணு அவர்கள் நடிப்புக் கலையில் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்ததை யாரும் என்றும் மறக்க முடியாது.

அந்த நாடகத்தில் அண்ணு சமீன்தாராக நடிக்கும் காட்சியில் பலர் அவரைச் சந்தித்துப் பொதுக் காரியங்களுக்கு நன்கொடை கேட்பார்கள். அப்போது அருள் நெறி மன்றச் சார்பாக ஒரு நாள் நாடகத்தில் வேடமிட்ட நான், நன்கொடை கேட்க வந்து. மக்களுக்கு உணவு வழங்க வேண்டும், எங்கள் சங்கத் திருப்பணிக்கு தங்களுடைய ஆதரவு வேண்டுமென்று கேட்டேன்.

சமீன்தார் நூறு, இரு நூறு என்று சுயமரியாதை சங்கத்திற்கு வழங்குவார். ஆனல் அருள் நெறி மன்றத் தாரிடம் சோறு போடத் தானே என்று கேட்டு அரிசி ஒரு பிடி போட்டு அனுப்புஅல்லது அதிகம் கேட்டால் ஒரு படி போட்டு அனுப்பு என்று தன்பணியாளருக்கு ஆணையிடுவார்.

இந்தக் காட்சியில் மக்கள் எல்லோரும் அண்ணுவின் நகைச்சுவையை ரசித்துச் சிரித்து மகிழ்வார்கள்.

ஃ ஃ ஃ

1958 அல்லது 59 என்று நினைக்கிறேன். சட்ட மன்றத்தில் ஒரு நாள் முன் வரிசையிலிருந்த அண்ணு அவர்கள் வெளியே எழுந்து செல்ல வேண்டியிருந்தது. அவைத் தலைவருடைய பார்வையில் அவையில் பேசிக்கொண்டிருப்பவர்கள் எப்பொழுதும் அவருடைய பார்வையில் பட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக அவைத் தலைவரின் பார்வையின் குறுக்கே யாரும் செல்லக்கூடாது என்பது மரபு. எந்த மரபையும் மீறி நடக்காத அண்ணு அவர்கள் வெளியே செல்வதற்கு என்னிடம் வழி கேட்டார்.

அவைத் தலைவரின் பார்வையில் குறுக்கிடாமல் மற்றொரு பாதையில் போவதற்கு நான் வழி சொன்னேன். ஆனல்கூச்ச உணர்வுகொண்ட அண்ணு அவர்கள் அந்த உறுப்பினர் பேசி முடிக்கும் வரை காத்திருந்து அவர் உட்கார்ந்த உடனே எழுந்து செலறார்.

பெரிய சிந்தனை ஆற்றல் படைத்த அண்ணு அவர்கள் தன்னுடைய பொருள்கள் நூல்கள், இவைகளை பெரும் டாலும் பாதுகாத்தே பழகிய தில்லை.

ஃ ஃ ஃ

முதுகுளத்தூர் சம்பவம் மிகப் பெரிதாகி, அரசியல் பிரச்னையாகி சட்ட மன்றத்திற்கு வந்தது. பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாகவும, அரசாங்க அடக்குமுறைக்கு ஆளான முக்குலத்தோர் சார்பாகவும், கொதிப்புணர்ச்சி மேலோங்கி நின்றது. தென்பாண்டி மண்டலத்தைச் சார்ந்த மற்ற வகுப்பினரும் தம்தம் சார்பு நிலைக்கு ஏற்பவும், தாம் சார்ந்த அரசியல் கட்சிக்குத் தலைவருக்குத் துணையாகவும் வேண்டி, கட்சி கட்டி நின்றனர். அன்று சட்ட மன்றத்தில் எழுப்பப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது அண்ணு அவர்கள் ஆற்றிய உரை அற்புதமானது. வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதவர்க்கு என்ன காரணமென பதை சிலர் புரிந்துகொள்ளவில்லை. கட்சியிலிருந்து, இரண்டு தோழர்கள் மாற்றுக் கருத்துக் கொண்டிருந்ததால்தான் விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. அண்ணு அவர்கள் அந்தப் பிரச்னையை நுணுகி ஆராய்ந்து, வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டால், அதனல் ஏற்படக்கூடிய கொடுமை மிகப்பெரிய அளவு என்பதால், போதும் அந்தப் பகையுணர்ச்சி, வரலாறு அதற்குத்தானே, தன் கட்சியோ காரணமாகக் கூடாது என்பதாலும், தி. மு. கழகம் மக்கள் எலலோரும் ஓர் குலம் என்ற இலட்சியத்தை உணரச் செய்கிற இடத்தைக் கொண்டதாலுமே இந்த ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

அரசு நீதி விசாரணை நடத்த முன்வரவில்லை என்பதை

அவசியம் கண்டித்தாகவேண்டும் எனக் கருதிய அண்ணா அவர்கள் தம்முடைய கண்டனம் ஒரு தனித்தன்மை உடையது என்பதை உலகிற்குக் காட்டும் வகையில் சட்ட மன்றத்திலிருந்து வெளி நடப்புச் செய்தார். அண்ணா அவர்களின் உயர்ந்த குறிக்கோளும், பொது நோக்கமும், அரசியல் தெளிவும் அனைவரும் வியக்கும் வண்ணம் அமைந்தது இந்த நிகழ்ச்சி.

ஃ ஃ ஃ

ஒரு முறை தந்தை பெரியார் அவர்கள், அண்ணா அவர்களையும், அவரைச் சார்ந்தவர்களையும் மிகக் கடுமையாகத் தாக்கிப்பேசி வந்தார். அவரின் பேச்சைக் கேட்டவர்கள் மிகவும் வருத்தப்பட்டு அண்ணா அவர்களிடத்தில் அதைக் கூறி, தாங்களும் பெரியாரைப் பதிலுக்குப் பதில் கண்டித்துப் பேசப் போவதாகத் தெரிவித்தார்கள். அண்ணா அவர்கள் அதனை பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்து விட்டு சிரித்துக்கொண்டே சொன்னார்கள். ''பெரியார் என்னை எவ்வளவு கண்டித்தாலும் நான் வருத்தப்படமாட்டேன் அவர் என்னை எவ்வளவோ வாழ்த்தியிருக்கிறார். அதிலே இந்தத் திட்டுதலைக் கழித்துப் பார்த்தால் அவரின் வாழ்த்துத்தான் மிச்சமிருக்கும்'' என்று பதிலுரைத்தார்.

ஒரு முறை புரட்சிக் கவிஞர் மிகக் கடுமையாக அண்ணா அவர்களைப் பற்றிப் பேசியதாகக் கேள்விப்பட்டார். அதை நண்பர்கள் சொன்னபோது அண்ணா அவர்கள் ''கவிஞர்களே எப்பொழுதும் அப்படித்தான். கோபம் வந்தால் பேசத்தானே செய்வார்கள். நம்மைப்பற்றி மட்டுமா அப்படிப் பேசுகின்றார்கள் என்று எண்ணிக் கொள்ள வேண்டும்.''

அவர் இயல்பிலேயே தம்மை ஒரு தனித் தன்மை படைத்தவராகக் கருதாமலும், தாம் ஒரு தலைவரென்ற செருக்குக் கொள்ளாமலும் இருந்தார். என்றுலும் தமக்கு ஒரு தனிப் பொறுப்பும் கடமையும் இருக்கின்றதென்பதை என்றும் மறவாதிருந்தார். ஆகவேதான் பண்பின் சிகரமாகவும், பொறுமையின் உருவமாகவும் வள்ளுவர் குறளின் கருத்தாழமுடையவராகவும் அண்ணா திகழ்ந்தார்.

———



1965 இந்தி எதிர்ப்புப் போரின் போது காஞ்சியிலிருந்து வந்த அண்ணாவை பூந்தமல்லிக்கருகில் போலீஸ் வழி மறித்துக் கைது செய்து அழைத்துச் சென்ற காட்சி

பணி புரிவதே எமது கடன்

* ஏழைகள் இன்பமாக வாழ . . .
* பணிபுரியும் இடத்துக்கருகே வசிக்க . . .
* எல்லோருக்கும் இடம் கிடைக்க . . .

பூங்கா * விளையாட்டுத்திடல் * மாட்டுக்கொட்டில் *
தண்ணீரேற்றுத்தொட்டி * நூல் நிலையம்.
* ஆகிய வசதிகளும் உண்டாக்க . . .
* மாடிவீடுகள் * கூட்டுறவுத்திட்ட வீடுகள் *



குடிசை வாழ்வோர் விருப்பம் கேட்டு!
வல்லுநர்கள் கருத்து அறிந்து!
பல் நாடுகளின் திட்டம் உணர்ந்து!
பம்பரம் போலச்சுழன்று!

பணிபுரிவதே எமது கடன்

எல்லோரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கும்
தலைவர் — பொறியாளர்கள் — அலுவலாளர்கள்,

குடிசை மாற்றுத் திட்ட வாரியம்

''சிக்கனம். சீக்கிரம்'' எமது குறிக்கோள் *
ஆலோசனைகள் வரவேற்கப்படும் * முடிவுகள் நடத்தப்படும்.

ELEGANT

காஞ்சிபுரத்தில்



ஒருநாள்.... அமைச்சர் மன்னாராயணசாமி

'அண்ணு இருக்கின்றார் என்று அண்மையில் 'முரசொலி'யில் முதல்வர் கலைஞர் அவர்கள் கட்டுரை எழுதியிருந்தார்கள். அதுதான் உண்மை.

அண்ணு மீது பற்றும் பாசமும் வைத்திருக்கும் லட்சோப லட்சம் அன்பு உள்ளங்களுக்கு அண்ணு மறையவில்லை. அவர் இருக்கின்றார்.

ஊனில், உயிரில், ஒவ்வொரு செயலிலும் அண்ணு இருக்கின்றார்.

கோட்டையில் முதல்வர் கலைஞர் அமர்ந்திருக்கின்ற இருக்கையைப் பார்க்கின்ற போதெல்லாம் அண்ணுவே நம் கண்களுக்குத் தெரிகின்றார்.

நல்ல தமிழைக் கேட்கின்ற போதெல்லாம் - அவர் நடமாடும் காலடி ஓசை கேட்கிறது.

யாரெல்லாம் நம் மீது கள்ளமில்லா அன்பைப் பொழிகின்றார்களோ அவர்கள் அண்ணுவின் திரு உருவங்களாகவே தென்படுகின்றனர்.

அவரைச் சில வடிவாய்ப் பார்க்கின்ற போதெல்லாம் நம் சிந்தையில் அவர் பேசிய கருத்துகள் கூறிய நகைச் சுவைகள் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

நம்மையே நாம் மறந்தால் தவிர அண்ணுவை நாம் மறக்க முடியாது.

அவரோடு இணைந்து பணியாற்றிய காலத்தில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும் - கல்வெட்டுக்களாக அழியாத இலக்கியமாக மனதில் பதிந்து நிற்கிறது.

ஒரு சமயம் கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

..'அவர் பேசிக் கொண்டிருந்தார் நல்ல கூட்டம் - மழை வந்துவிட்டது. ஆனாலும் யாரும் கலைந்து செல்லவில்லை. அப்படியே இருந்தது' என்று பெருமையாகக் கூறினார் பேச்சாளரின் நண்பர் ஒருவர்.

அவரைக் கிண்டல் செய்ய விரும்பிய அண்ணு அவர்கள்--

''கடற்கரையில் திடீரென மழை வந்துவிட்டால் எங்கே ஓடி ஒதுங்குவார்கள்-நனைந்தது நனைந்துவிட்டோம்-முழுதும் நனைந்துவிடுவோம் என்றுதான் உட்கார்ந்திருப்பார்கள் என்றார் அண்ணு.

ஃஃ ஃஃ ஃஃ

அண்ணு அவர்களும், நானும், ப. உ. ச.வும் ஒரு திருமணத்திற்காக காரில் போய்க் கொண்டிருக்கிறோம். வழியில் ஒரு பாலத்துக்கு அருகே ரோடு ரிப்பேர் நடந்து கொண்டிருக்கிறது. சூப்பர்வைசர் கவனமாக ரிப்பேர் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

டிரைவர் ஹாரன் அடிக்கிறார் - சூப்பர்வைசர் அதைக் கவனிக்கவில்லை. மூன்றும் முறையாக ஹாரனை நிறுத்தாமல் அடித்தபோதுதான் சூப்பர்வைசர் திரும்பிப்

பார்த்து எங்களுக்கு வழி விடுகிறார்.

ப. உ. ச. அவர்களுக்கு கோபம் வருகிறது. ''ஹாரன் அடித்தது காதில் விழவில்லையா என்று கொஞ்சம் கோபமாகக் கேட்கிறார்.

காரைச் செலுத்துமாறு அண்ணா டிரைவரிடம் கூறுகிறார்.

கார் கொஞ்ச தூரம் சென்றதும் - ப. உ. ச. அவர்களிடம் அண்ணா கூறுகிறார்.

''நீ அந்த சூப்ரவைசரிடம் கோபமாகப் பேசியிருக்கக் கூடாது. என்னைக் கேட்டால் நான் அவரைப் பாராட்டுவேன்.

''அதிகாரிகள் இப்படி வேலை செய்யவில்லை என்றால் தான் கவலைப்படவேண்டும். ஹாரன் ஒலியைக் கூடக் கவனியாமல் வேலை மீது கவனம் செலுத்தும் அதிகாரியை அழைத்துப் பாராட்டியிருக்க வேண்டும்'' என்றார்.

ப. உ. ச. அண்ணாவின் கருத்தை சிறிய விவாதத்திற்குப் பிறகு ஒப்புக்கொண்டார்.

அந்த சூப்ரவைசர்தான் இன்று என் செயலாளராக இருக்கிறார்.

ஃ ஃ ஃ

அண்ணாவை எதிர்த்த ஒருவருக்கு அண்ணாவே முக்கிய பதவி கொடுக்கப்போவதாக அறிந்த நான் - அண்ணாவைப் பார்க்கச் சென்றேன்.

அண்ணா என்னை வரவேற்கிறார். அண்ணியிடம் கூறி சிற்றுண்டி காபி தரச்சொல்லுகிறார்.

நான் கேள்வியை நேரடியாகக் கேட்காமல் சுற்றி வளைத்து முடிவில் கேட்டுவிடுகிறேன்.

''அவரையா அண்ணா அந்தப் பதவியில் அமர்த்த சம்மதிக்கப் போகிறீர்கள்?''

''ஆமாம்!'' அண்ணா அமைதியாகப் பதில் சொன்னார்.

'உங்களை? வேதனைப் படும்படி நடந்த சம்பவங்களை



யெல்லாம் நினைவூட்டுகிறேன்,

''தெரிந்துதான் கொடுக்கிறேன் - நாம் அப்படி நடந்து கொண்டோமே என்று அவர் வெட்கப்படுவதற்கு இதுதான் நல்ல வழி'' என்றார் அண்ணா.

கடலினும் விரிந்து பரந்த அந்த உள்ளத்தை நினைத்து நான் கண்களில் நீர் ததும்பத் திரும்பினேன்.

ஃ ஃ ஃ

நீண்ட நாட்களுக்கு முன் கவிஞர் ஆனந்தம் அவர்கள் திருமணத்திற்காக மாயவரத்திற்கு ரயிலில் வந்த அண்ணா அவர்கள் - இரவு 11-30 மணிக்கு மன்னார்குடியில் இறங்கி புகை வண்டி நிலையத்திலிருந்து தனியாக நடந்தே என் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள்.

நாங்கள் யாவரும் உறங்கி விட்டதால் - எங்கள் தூக்கத்தை கலைக்க வேண்டாம் என்று எண்ணி திண்ணையில் துண்டை விரித்து தூங்கிவிட்டார்கள்.

ஒரு மணி சுமாருக்கு எழுந்து வந்து நான் திண்ணையில் அண்ணா உறங்குவதைப் பார்த்து அதிர்ச்சியடைந்து போனேன்.

அண்ணா அவர்களை எழுப்பி ''என்ன அண்ணா இப்படிச் செய்துவிட்டீர்கள் - சாப்பிட்டீர்களா இல்லையா என்றேன்.

'எனக்காக மீன் குழம்பு செய்து வைத்திருப்பாய் என்று வந்தேன். நீங்கள் யாவரும் தூங்கிவிட்டதால் உங்களுக்குத் தொல்லைவேண்டாம் என்று படுத்துவிட்டேன். இப்போதும் வீட்டில் பெண்களை எழுப்பி தொல்லை கொடுக்க வேண்டாம். பேசாமல் போய் படுவிடிந்து பார்த்துக் கொள்ளலாம் என்றார்.

என் மனம் தாங்கவில்லை- தோசை சுடச் செய்து அண்ணாவை வற்புறுத்திச் சாப்பிடச் சொன்ன பிறகே நிம்மதியடைந்தேன்.

அன்று நடைபெற்ற அந்த நிகழ்ச்சியை இன்று நினைத்தாலும் என் இதயம் விம்முகிறது.

ஃ ஃ ஃ

திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாடு முடிந்ததும்- மறுநாள் மாயவரத்திற்கு வந்தார்.

அன்று இரவு என்னை தனியே அழைத்து இரண்டு மணி நேரத்திற்கு மேல் கலைஞரின் ஓயாத உழைப்பைப் பற்றியும், துடிப்பான செயல்கள் பற்றியுமே பேசிக் கொண்டிருந்தார்.

சென்னை மாநகராட்சி வெற்றிக்கு கலைஞர்தான் காரணம். அவர் இல்லையென்றால் அந்த வெற்றி கிடைத்திருக்காது என்றார். ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் கலைஞர் கூறும் முடிவே சரியாக இருக்கிறது என்று மனம் திறந்து கூறினார்.

போராட்ட நேரங்களிலும் சிக்கலான பிரச்சினைகளின் போதும் நான் என்ன முடிவு எடுக்கிறேனோ அதே முடிவு கருணாநிதிக்கும் தோன்றும். நான் பல முறை பார்த்துவிட்டேன் என்று கலைஞரின் ஒவ்வொரு செயலையும் பாராட்டினார்.

இந்தி எதிர்ப்பு மாநாடு கோடம்பாக்கத்தில் நடைபெற்ற நேரத்தில் கழகத்தை விட்டு ஓடிப்போன ஒருவர் கழகத்தில் இருந்தபோது ''அவர் சொல்லும் எந்த யோசனையும் கட்சி வளர்ச்சிக்

குப் பயன்படுவதே இல்லை. என்பார். கலைஞர் கூறும் யோசனைகள்தான் கட்சிக்கு பாதுகாப்பாக இருக்கின்றன இதனை வெளிப்படையாகச் சொன்னால் வருத்தப்படுகிறார் கள்''-அதற்காக நான் கருணை நிதியின் கருத்தை புறக்கணிக் கப்போவதில்லை என்றார்.

கலைஞரின் நிர்வாகத் திற மையையும் - கட்சி வளர்ச் சிக்கு அவர் ஆற்றும் பணி களையும் அண்ணா அன்றே மதிப்பீடு செய்து வைத்திருந் தார். அந்த மதிப்பீடு இன்று வீண்போகவில்லை என்பதை இன்று நாம் கலைஞர் உருவில் கண்டு கொண்டிருக்கிறோம்.

ஃ ஃ ஃ

கட்சிப் பணிகளுக்காக நான் வாங்கிக் கொடுத்த 'வேன்' ஒன்று ரிப்பேர் ஆகி விட்டது. அதைப் பழுது பார்க்க 10 ஆயிரம் ஆகும் என்று அண்ணாவிடம் கூறி யிருக்கிறார்கள்.

அண்ணா எனக்குத் தகவல் தெரிவித்தார் - நான் காஞ்சி புரம் சென்றேன் - அவ்வளவு செலவு வருமா என்றார் - நான் வண்டியைப் பார்த்துவிட்டு வந்திருந்ததால் நியாயமான தொகைதான் எவ்வளவு செலவு வரும் செய்துகொடுக் கிறேன் என்றேன்.

அப்போது மதிய நேரம் ஆகிவிட்டதால் வீட்டிலேயே உணவருந்திப் போகுமாறு அண்ணா கூறினார்.

மணி 12-க்கு மேல் ஆகி விட்டது. அண்ணா பேசிக் கொண்டே இருந்தார் எனக் குப் பசி.

''அண்ணா சாப்பிடலாமா? என்றேன்.

திண்ணையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த அண்ணா வாசலில் வந்து நின்றுகொண்டு சாப்பிடலாம் இரு - என்று கூறிவிட்டு மீண் டும் பல பிரச்சினைகள் பற்றிப் பேசினார்.

எனக்கோ பசி அதிகம் ஆகி யது. அண்ணா அவர்களோ



வாசலில் வழியை மறித்துக் கொண்டு நின்றார். எப்படி வெளியே போவது?

''அண்ணா சாப்பிடலாமா என்றேன்.

''இரு சாப்பிடுவோம்'' என்று எட்டிப் பார்த்தார். ஒரு பையன் சைக்கிளில்வந்து இறங்கினான்.

''ஏண்டா.... இவ்வளவு நேரமா?''....சரி சரி உள் ளே கொண்டுபோய் வை என்று சாடை காட்டிவிட்டு- 'வா சாப்பிடலாம்' என்றார்.

சாப்பிட உட்கார்ந்த போதுதான் தெரிந்தது. அண்ணா எனக்காக மட்டன் வாங்கி வரும்படி பையனை ஹோட்டலுக்கு அனுப்பி - அவனை எதிர்பார்த்து கால் கடுக்க வாசலில் நின்றிருக் கிறார்.

முரசுக் கட்டிலில் படுத்து கண்ணயர்ந்துவிட்ட புலவனை எழுப்ப மனமில்லாத மன் னன் - அவர் நிம்மதியாகத் தூங்கவெண்சாமரம் கொண்டு வீசினான் என்று இலக்கியத் தில் படித்திருக்கிறேன்.

ஆனால் எனது அண்ணனே எனக்காக கால்கடுக்க நின்று விருந்தோம்பல் செய்த பண் பை இன்று நினைத்தாலும் என் விழிகள் மட்டுமல்ல இதயமே கண்ணீர் பெருக்கு கிறது.

பையன் மட்டன் கிடைக்க வில்லை என்று முட்டை மட்டும் நான்கு வாங்கி வந்திருந் தான். அந்த நான்கையும் எனக்கே வைக்கும்படி அண்ணாவிடம் வற்புறுத்தி னார் அண்ணா.

நான் அண்ணாவுக்கும் வையுங்கள் என்று வற்புறுத் தியபோது சொன்னார்—

''நான் உன் வீட்டிற்கு வந்தால் மட்டனும் -மீனும் சுவையாக சமைத்துப் போடு கிறாயே - உனக்கு நன்றாகச் செய்ய வேண்டாமா-என்றார்.

என் தாயும், மனைவியும் தேவையறிந்து உணவு சமைத் திருக்கிறார்கள்.

ஆனால் அண்ணா....

அதனால்தான் அவர் குடும் பத் தலைவரானார் - அவர் மறைந்தபோது நம்மைப் பெற்ற தாயும் அழுதாள் - நாம் பெற்ற சேயும் அழுதது.

ஃ ஃ ஃ

அண்ணா சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லும் முன் கழகத் தலைவர்களோடு மருத்துவமனையில் உரையா டிக் கொண்டிருந்தார். நான் சற்றுத் தூரத்தில் நண்பர்க ளுடன் அமர்ந்திருந்தேன்.

அண்ணா ஏதோ 'மன்னா' என்று சொல்லும் குரல் கேட்டு உள்ளே போனேன். என்னைப் பார்த்ததும் —

''உனக்கு என்ன வேண் டும் கேள்'' என்றார்.

திடீரென அண்ணா இப் படிக் கேட்டதும் எனகு ஒன்றும் புரியவில்லை.

'என்னண்ணா' என்றேன்.

''உனக்கு ஏதாவதேனும் பதவி வேண்டுமா?'' என்றார்.

''வேண்டாம் அண்ணா - உங்களிடம் நான் பதவி கேட்டு - அடடா மன்னையுமா இப்படி என்று உங்கள் மன தை சஞ்சலம் அடையச் செய்ய மாட்டேன்'' என்று கூறினேன்.

அண்ணா புன்னகை புரிந்த வாறு என் பதிலை மௌனமாக ஏற்றுக் கொண்டார்.

அண்ணாவிடம் நான் இறுதி யாகக் கண்ட செழுமை யான புன்னகை அதுதான்!

அதற்குப் பிறகு..




கடன்படாத கடமைத் தலைவர்

கவிஞர் வேழவேந்தன் எம்.எல்,ஏ.

வாராமல் வந்துதித்த அண்ணு வுக்கே
வந்திட்ட பாழ்நோயைப் போக்கு தற்கு
நீரோடும் விழியோடு விமானம் மூலம்
நியூயார்க்கு நகருக்கே அனுப்பி வைத்தோம்!
சீராளர் சீரோடு திரும்ப வேண்டித்
தினந்தினமும் ஏங்கிநின்றோம்; அறுவைக்குப்பின்
ஓரிரண்டு வாரத்தில் தாய்நாட் டிற்கு
ஒப்பற்ற நம்மண்ணன் திரும்பி வந்தார்!

திருநாட்டை வாழவைத்த தலைவர் மீண்டும்
திரும்பிட்டார் நோய்மனைக்கே! அந்த நாளில்
அருங்கலைஞர். நாவலரை அழைத்தார் ஓர்நாள்;
'ஆம். என்னை அமெரிக்கா அனுப்பு தற்கே
உருவான செலவென்ன?' என்றார். கேட்ட
உயிரான தம்பியரோ துடித்தார்;'நாட்டின்
பெருநிதியே நீங்களண்ணு, செலவைப் பற்றிப்
பேசுதற்கா இதுநேரம்?' என்றே கேட்டார்.

''நெஞ்சத்தின் அடித்தளத்து வேட்கை சொல்வேன்;
நெடுநாட்கள் பழகியதன் பெயரால் சொல்வேன்.
கொஞ்ச மும்இந் நாட்டுவரிப் பணத்தில் என்றன்
குறைபோக்கச் செலவழிக்க ஒப்ப மாட்டேன்.
தஞ்சைவளக் கோபுரம்போல் வளர்ந்தி ருக்கும்
தாழாத நம்கழகம் செலவை ஏற்க
நெஞ்சார வேண்டுகிறேன்,'' என்றார் அண்ணு.
நெகிழ்ந்தார்கள் இதைக்கேட்ட தம்பி மார்கள்.

ஊர்ஊராய் உண்டியலைக் குலுக்கி போய்
ஒன்றேகால் இலட்சத்தைத் திரட்டிச் சென்று
சேர்த்தோம்நாம் கருவூலக் கணக்கில்; இந்தச்
சேதியினைக் கேட்ட அண்ணு மகிழ்ந்தார்;சேர்த்த
கீர்த்தியினைக் காத்திட்ட தம்பியர்க்குத்
திரும்பியிங்கே நன்றிசொல்ல வந்திட்டாரா?
யார்அழுதும் வாரத திக்கை நோக்கி
அவர்மறைந்தார்; மறைந்ததுண்டா அண்ணுநேர்மை?

வரலாற்றுத் தலைமகனும் 'சாக்ர டீஸ்'தான்
வாங்கியதோர் கடனை கோழிக்குஞ்சை
இரக்கமில்லாச் சாவுவந்து நின்ற போதும்
ஈடுசெய்து தரச்சொல்லி மடிந்தார் என்பார்;
திருமண்ணைச் செழிக்கவைக்க வந்த தோன்றல்
திராவிடத்தின் விடிவெள்ளி இறக்கும்போதும்
பெருமைதரும் கடமையினை மறந்திட்டாரா?
பேசுகின்ற சரித்திரமும் உணர்த்தி டாதா?





அவரை எழுப்பாதே!

கவிஞர் முருகுசுந்தரம்

வீங்கும் கடலலையே!
வேதனைத் தீக்காட்டில்
ஏங்கும் தமிழர்
இதயச் சருகெரியத்
தூங்கும் தலைவன்
தூங்கட்டும்; அவனருகில்
வீங்கும் கடலலையே!
வீணிரைச்சல் செய்யாதே!

மேலேறும் செங்கதிரே!
மிக்க களைப்போடு,
சேலேறிப் பாயும்
சென்னைக் கடற்கரைக்குக்
காலாற வந்து
கண்ணுறக்கம் கொள்ளுகின்றான்.
மேலேறும் செங்கதிரே!
மேனியின்மேல் காயாதே!

கார்முகிலே! எங்கள்
காஞ்சி நகர்த்தலைவன்
பார்முழுதும் சுற்றிப்
பட்டம் பலபெற்றே
ஊரின் கிழக்கே
ஓய்வெடுத்துக் கொள்ளுகின்றான்
கார்முகிலே! ஒங்கிக்
கனைத்தவனை எழுப்பாதே!

கொட்டும் பனியே!
கொஞ்சும் தமிழ்த்தலைவன்
பட்டுடம்பு புண்ணுகிப்
பளிங்குத் தளமமைத்த
தொட்டில் நடுவே
தூங்குகிறான்; அவனுடம்பைக்
கொட்டும் பனியே!
குளிரால் நடுக்காதே!



வேலூர் கூட்டுறவு மையவங்கி லிமிடெட்,

வேலூர்.



பேரறிஞர் பிறந்த நன் நாளில் தமிழக மக்களுக்கும் வேளாண்மை பெருங்குடி மக்களுக்கும் எங்கள் உளமார்ந்த வணக்கங்கள்.



சேமிப்பு. சிறந்த பழக்கம். சேமிப்பதோ சிக்கலான பணி. உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்தாருக்காகவும் மட்டுமின்றி. நாட்டின் நலனுக்காகவும் சேமிப்பு மிகவும் அவசியம்.

நாட்டின் நல் அபிவிருத்திக்காகவும் உழவர் பெருங்குடியினருக்காகவும் நல்ல சில பல பணி செய்து முடித்திட கூட்டுறவு மைய வங்கிகள் ஈடுபட்டுள்ளன. அவைகள் உங்கள் சேமிப்பை நல்ல திட்டங்களில் முதலீடு செய்கின்றன.

வேலூர் கூட்டுறவு மையவங்கி

வட ஆற்காடு மாவட்டத்தின் எல்லா பகுதிகளையும் ஒருங்கிணைத்து. 29 கிளைகளின் மூலமாக அவரவர் வருமானத்துக்கும், பழக்கத்துக்கும் ஏற்ற வகைகளில் பல சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயலாற்றி வருகிறது.

உங்கள் சேமிப்பை, எங்கள் வங்கியில் ஏதாவதொரு திட்டத்தில் சேர்வதின் மூலம் முதலீடு செய்யுங்கள். அது உங்கள் நிலையினை உயர்த்திட உதவுவதுடன் வங்கியின் நிலையினையும் மாவட்ட உழவர் பெருங்குடி மக்களின் நிலையினையும் அதன் மூலம் தமிழகத்தின் நிலையினையும் உயர்த்திட வழி கோலும்.

உங்கள் தேவைக்கு உதவிட காத்திருக்கும் எங்கள் வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளில் பணியாற்றிடும் பணியாளர்களை யவு செய்து அணுகுங்கள்.

மைய வங்கியின் சேமிப்பு திட்டங்கள்

	விவரம்.	வட்டி விகிதம்.
அ.	நடப்புக் கணக்கு	½%
ஆ.	சேமிப்புக் கணக்கு	4%
	ரூ. 25 குறைந்தபட்ச நிலுவை வைத்திருந்தால்	4½%
இ.	ரெக்கரிங் டெபாசிட்	7% முதல் 7½% வரை
ஈ.	நிரந்தர வைப்புத் தொகை	5¼% முதல் 8% வரை
உ.	சீசன் டெபாசிட்	4½
ஊ.	மினி டெபாசிட்	5%
எ.	கேஷ் சர்ட்டிபிகேட்டுகள்	4% கூட்டு வட்டி
ஏ.	இரட்டைச் சலுகை திட்டம்	
ஐ.	பரிசுக் காசோலைகள்	
ஒ.	தவணை முறையில் திருப்பி செலுத்தும் திட்டம்	
ஓ.	கியுமிலேடிவ் டெபாசிட்	

ஆர். செல்வின், பி.எஸ்சி. பி.காம்.,
காரியதரிசி

முல்லை பொ. வடிவேல்,
பெருந்தலைவர்.

கே. நடராசன், பி. காம்,
தலைமை நிர்வாக அதிகாரி

பி.எஸ். சந்தானம்
துணைத் தலைவர்.

தாய்க்கும் தாயாவார்



அமைச்சர் சுத்தியவாணிமுத்து

அண்ணை அவர்களின் தாய்மைப் பண்பிற்கும், தகைமைசால் குணத்திற்கும் எத்தனையோ சம்பவங்களைக் கூறலாம்.

அண்ணைவைத் தலைவராக ஏற்றுக்கொண்டு பழகிய நாட்கள் ஒவ்வொன்றும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாட்கள்தான்.

அவருடைய பரந்த உள்ளமும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் ஏழைஎளியோர் மீது காட்டும்அன்பும் அவரை அரசியல் உலகில் மட்டுமல்லாது அதற்கு அப்பாலும் இறைத் தன்மையைத் தேடித் தந்தது.

என்னைப் பொறுத்தவரை தாயன்பை முழுமையாக அனுபவித்தவள் மட்டுமல்ல. தாயன்பை வழங்கும் நிலையிலும் உள்ளவள் நான். ஆனல் தாயன்பில் காண முடியாத ஒரு பேற்றை நான் அண்ணை அவர்களிடம் பல முறை கண்டு மெய்சிலிர்த்துப் போயிருக்கிறேன்.

அண்ணை அவர்களைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம். சொல்லியுமிருக்கிறேன்

ஒரு சமயம் அண்ணைவுக்கு மிகவும் வேண்டிய ஒருவரின் பேத்தி மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள் - அதே கல்லூரியில் எம். பி. பி. எஸ். மூன்றும் ஆண்டு படித்துக் கொண்டிருந்த மாணவரும் அந்தப் பெண்ணும் ஒருவரை ஒருவர் நேசித்து மணம் செய்து கொள்ளவும் முடிவு செய்தனர்.

ஆனல் அவர்களின் காதலை பெண்ணின் தாத்தா கடுமையாக எதிர்த்தார். குடும்பத்தாரும் ஒப்புக்கொள்ளவில்லை.

பையனைப்பற்றி அண்ணை நன்கு விசாரித்தறிந்தார். அவரைப்பற்றி நல்ல தகவல்கள் கிடைத்ததால் அண்ணை அவர்களே பெண்ணின் தாத்தாவிடம் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கலாம். தடையில்லை என்று கூறியபோது - அண்ணைவின் சொல்லை என்றும் மறுக்காத அந்தக் குடும்ப நண்பர் இதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை.

அந்தப் பெண் அண்ணை அவர்களிடம் வந்து கண்ணீர் விட்டது. எங்களுக்குத் திருமணம் இல்லையென்றால் நாங்கள் இருவருமே வாழப்போவதில்லை யென உருக்கமாக முறையிட்டது.

அண்ணை அவர்கள் அந்தப் பெண்ணை சமாதானப்படுத்தி, அவர்கள் திருமணத்திற்கு உடனடி முயற்சி எடுத்தார்.

ஒருநாள் அண்ணை தொலை பேசியில் என்னை அழைத்து அந்த அன்பு உள்ளங்களின் நிலைமையைஎன்னிடம் விளக்கி அவர்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும்படி கூறினர்.

அண்ணை அவர்களின் கருத்துப்படி பெருவாரியான நண்பர்கள் ஆதரவோடு அவர்கள் திருமணம் நடைபெற்றது.

திருமணம் நடைபெற்று ஓரிரு மாதங்களுக்குப் பின் அந்தப் பெண்ணின் தாத்தாவின் பிடிவாதம் தளர்ந்தது. இருவரையும் உள்ளன்போடு ஏற்றுக்கொண்டார். அண்ணைவைப் பார்ப்பதற்கு அவர் மிகவும் வெட்கப்பட்டார்.

அந்தப் பெண்ணின் கண்ணீரை அண்ணை தாய்பாசத்திற்குரிய உணர்வோடு கவனித்த காரணத்தால்தான் படித்த இரு உயிர்களைக் காப்

பாற்ற முடிந்தது. அவர்கள் இருவரும் இன்று சிறப்பாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஒரு சமயம் - சென்னையில் வார்னிஷ் குடியால் பலபேர் இறந்தும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் இருந்தார்கள். இச்சம்பவம் நடைபெற்றபோது திருச்சியில் கலெக்டர்கள் மாநாடு நடைபெற்றதால் அண்ணாவும் மற்றும் அமைச்சர்களும் திருச்சியில் இருந்தோம்.

வார்னிஷ் குடிச் செய்தியைக் கேள்விப்பட்டதும் உள்ளம் பதறிய அண்ணா அவர்கள் கலெக்டர் மாநாட்டை ரத்து செய்துவிட்டு உடனே அனைவரும் சென்னை செல்லவேண்டும் என்றார்.

இதற்காக மாநாட்டை ரத்து செய்ய வேண்டுமா - அதிகாரிகள் கவனித்துக்கொளுவார்கள். மாநாடு முடிந்து நாமும் போய்ப் பார்க்கலாம் என்று கூறியபோது -அண்ணா அவர்கள் அக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஏழைகள் அறியாமையால் ஆபத்தான நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் - இதில் அலட்சியம் காட்டாமல் நாம் அவர்களைக் கவனிக்கவேண்டும்.

நாம் நேரில் பார்ப்பதால் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படுவதோடு, ஆலோசனைகளையும் கூற இயலும் என்று கூறினார் அண்ணா.

அண்ணா அவர்களோ - முதலமைச்சர் பொறுப்பிலிருப்பவர் - இருந்த இடத்திலிருந்து கொண்டே அவர்களைக் கவனிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டு வாளா இருந்திருக்க முடியும்- ஆனால் ஏழை எளிய மக்கள் எந்தச் சூழ்நிலையில் எப்படிப் பாதிக்கப்பட்டாலும் அவைகளை அண்ணா அவர்கள் தாய்மை உணர்வோடு அணுகினார்கள். அவர்களின் துயர் நீங்க நேரடியாக ஈடுபட்டார்கள் - என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டு.

குழந்தை - அறியாமையின் காரணமாக ஆபத்தான நிலைக்கு உள்ளாகிவிட்டால் எந்தத் தாயும் அலட்சியமாக இருக்கமாட்டாள். முதலில் குழந்தையை காக்க முயற்சிப்பாள். பின்னர்தான் புத்தி மதி கூற முற்படுவாள் அந்த அன்னை ஸ்தானத்தில் அன்று அண்ணா அவர்கள் துடிதுடித்துச் செயல்பட்டதை நான் நினைக்கும் தோறும் நெகிழ்ந்து போகிறேன்.

ஃ ஃ ஃ

இதைப் போலவே கீழ் வெண்மணி கிராமத்தில் 40-க்கு மேற்பட்ட பெண்கள், ஆண்கள், குழந்தைகள் உயிரோடு கொளுத்தப்பட்ட கொடுமை மிகு நிகழ்ச்சி நடைபெற்றபோது -அண்ணா உடல் நலமின்றி இருந்தார்.

இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டதும் அண்ணா அடைந்த துக்கத்திற்கு அளவே கிடையாது.

அப்போது நாகர்கோயில் பகுதியில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்த என்னிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அண்ணா அவர்கள் உடனடியாக கீழ் வெண்மணி செல்லுமாறும்- பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறுமாறும் கட்டளையிட்டார்கள்.

அண்ணா தொலைபேசியில் பேசியபோது அவர் குரலில் காணப்பட்ட வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் நான் கண்ணீர் வடித்தேன்—

அண்ணா அரசியல் தலைவராக மட்டும் வாழவில்லை- அந்த எல்லையைத் தாண்டி மக்களிடம் அன்பு காட்டுவதில் பாசமுள்ள ஒரு குடும்பத் தலைவராகவும் விளங்கினார்.

வெண்மணி நிகழ்ச்சி ஏற்படுத்திய சோகத்தால் அண்ணா அவர்கள் இரண்டு நாட்கள் காப்பி கூட அருந்தாது கவலையால் துடித்திருக்கிறார்கள்.

இத்தகு மனிதத் தன்மையின் மாண்பாக விளங்கிய ஒரு அரசியல் தலைவனை வேறு எந்த நாட்டிலும் எந்தக் கட்சியிலும் காண முடியாது. அதனால்தான் அவர் மறைந்தபோதுநாடே திரண்டு அழுது புலம்பியது.

67-ல் மார்ச் 6-ந் தேதி அறிஞர் அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்ற அன்று என்னுடைய தொகுதியில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அன்று அவர்கள் ஆற்றிய உரை நெஞ்சை நெகிழ வைப்பதாக இருந்தது.

''தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்துவிட்டது - நாம் அமைச்சர் பொறுப்பேற்றுள்ளோம் என்கிற மகிழ்ச்சியை விட இந்த நாட்டு மக்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற கவலையே என்னிடம் மேலோங்கியுள்ளது.

நேற்றிரவெல்லாம் நான் தூங்கவேயில்லை. காய்ந்த வயிறுகள், குழிவிழுந்த கண்கள், எண்ணெய் பசையற்ற தலைகள், அழுக்கேறிய ஆடைகள், ஒட்டைக் குடிசைகள் இவைகள்தான் கண்களுக்குள் நிற்கின்றன. நம்மை நம்பி இவர்கள் ஆட்சியை மாற்றி நம்மிடம் தந்திருக்கிறார்கள். அந்த அடித்தள மக்கள் வாழ்வில் ஒளியேற்றவேண்டும் - இந்தப் பிரச்னையே என் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அவர் எண்ணியது போல அவர் காலத்தில் ஏழைகள் வாழ்வு செழித்திட ஏராளமான திட்டங்களை நிறைவேற்றினார். பொற்காலம் சமைத்தார்.

இன்று கலைஞரின் தலைமையில் அண்ணா வழி ஆட்சி நாடு போற்றும் வகையில் நடைபெற்று வருகிறது.

கலைஞரின் சாதனை ஒவ்வொன்றிலும் அண்ணன் புகழ் ஒலிக்கிறது. அவர் விட்டுச் சென்ற பணி தொடர்கிறது.

நமக்குக் கல்விப் பெருமை, பொருளாதாரப் பெருமை, குடும்பப் பாரம்பரியப் பெருமை எது இருந்தாலும அண்ணாவின் காலத்தில் வாழ்ந்தோம் அவருடன் பழகினோம் அவர் அருகிலிருந்தோம், அவர் அன்பினைப் பெற்றோம் என்பதுதான் சிறப்புக்குரியதாகும்.

காட்சிக்கு எளியவராக கடுஞ்சொல் கூறுதவராக - அரசியல் வித்தகராக ஒரு தலைவர் புகழுடன் விளங்கினர் எனில் அது அண்ணா அவர்கள் - அவருக்கு ஈடு வேறு எவருமில்லை.

சினமே வராத ஒரு தலைவரை நாம் பெற்றிருந்தோம்.

'மௌனம்தான்' அவருடைய பெரிய சினம் - அதுதான் அவர் நமக்களிக்கும் தண்டனை. அந்தத் தண்டனையால் திருந்தியோர் பலர்.

அண்ணா அவர்களுக்கு வேண்டிய நண்பர் ஒருவர் சில காரணங்களுக்காக மாதக் கணக்கில் அண்ணாவைப் பார்க்காமலே இருந்தார். அண்ணா கேட்டபோதெல்லாம் 'உடல் நலமில்லை'- அதனால் பார்க்க வரவில்லை என்றே கூறப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு சொந்த வேலையாக அந்த நண்பர் அண்ணாவைப் பார்க்க வந்தார்.



அண்ணா அவரைப் பார்த்தும் - உடல் நலம் எப்படியிருக்கிறது? அடிக்கடி உனக்கு உடல் நலம் கெடும்போது இப்படி அலையக் கூடாது ஓய்வெடுத்துக்கொள் எனக் கூறியதும் - அந்த நண்பர் வந்த வேலை பற்றிப் பேசாது வாயடைத்துச் சென்றார். தன் குற்றத்தை தன்னையே உணரச் செய்வதில் இதை விட அமைதி வழி வேறு எதுவாக இருக்க முடியும்?

ஃ ஃ ஃ

அண்ணா ஆட்சிக்கு வந்தும் - முதல் வேலையாக உணவுக் கஷ்டத்தை நீக்கியது போன்று - குடி தண்ணீர்ப் பிரச்சினையையும் தீர்த்து வைக்க எந்த மாவட்டமும் கோரிக்கை விடுக்காமலே தீர்த்து வைக்க அவர் முனைந்தார்.

வ. ஆ. மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர், ஆம்பூர் வாணியம்பாடி ஆகிய ஊர்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க உடனடி ஏற்பாடு செய்தார்.

தூங்கிக் கொண்டிருந்த ஃபைல்களை வரவழைத்து - படித்து அதிகாரிகளுடன் விவாதித்து நிதி வசதி அறிந்து ஒவ்வொரு பகுதிக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைக்க 35 லட்சத்திலிருந்து 40 லட்சம் வரை ஒதுக்கினர்.

அமைச்சரான முறுக்கு...!

அமைச்சர் சாதிக்பாட்சா

அப்போது பொது நலத்துறை செயலாளராக இருந்த அனந்த பத்மனபன் அண்ணாவின் பணி கண்டு வியந்து பாராட்டினர்.

''வேறு எந்த முதலமைச்சரும் இதற்கு முன் செய்யாத சாதனையை அறிஞர் அண்ணா குறுகிய காலத்தில் செய்து விட்டார் என்று அனந்தபத்மனபன் அடிக்கடி கூறுவார்.

ஃ ஃ ஃ

சம்பத் கழகத்தை விட்டுச் செல்லுவதற்கு முன் அவர் நடத்திய உண்ணாவிரத நாடகத்திற்கு ஆதரவாக ஆங்காங்கு ஒரு சில தோழர்கள் அவருக்கு இருந்தார்கள்.

உடுமலைப் பேட்டையிலும் ஒரு ஐந்தாறுபேர் இருந்தனர்.

அப்போது உடுமலைப்பேட்டைக்கு அண்ணு வருவதாக இருந்தது. அண்ணு வந்ததும் அவரிடம் சம்பத் பிரச்சினை பற்றிக் கேட்கவேண்டும் - அண்ணுவுடன் பேச முடியாவிட்டால் கேள்வியாவது எழுதிக் கொடுத்துவிடவேண்டும் என்று அந்த ஐந்தாறு நபர்களும் துடித்துக் கொண்டிருந்தனர்.

அண்ணு நூற்றுக்கணக்கான மைல்கள் காரிலேயே பயணம் செய்ததாலும், மனச் சோர்வு அடைந்த நிலையிலும் களைப்புடன் வந்து எங்கள் இல்லத்தில் தங்கினர்.

கேள்வி எழுதி வைத்துக் கொண்டு துடித்துக் கொண்டிருந்த நண்பர்கள் அண்ணுவைக் கண்டதும் அனுதாபத்துடன் உடல் நலம் விசாரித்துவிட்டு அண்ணு ஓய்வெடுத்துக் கொள்ளட்டும் மாலை வருகிறோம் எனக் கூறிச் சென்னர்.

அண்ணு உணவருந்திய பிறகு - ''நான் நிம்மதியாகத் தூங்கவேண்டும் ஒரு ஜமக்காளமும் தலையணையும் கொடு'' என்றார். நான் அவருக்காக மெத்தையும் விரிப்புகளும் ஏற்பாடு செய்திருந்த கட்டிலில் படுத்துக்கொள்ளுமாறு கூறினேன். ''இல்லை. இல்லை! ஜமக்காளம் மட்டும் கொடு. நிலத்தில் விரித்துப் படுத்துக் கொள்கிறேன் எனக் கூறி தரையிலே படுத்து உறங்கினர்.

மாலையில் அண்ணுவிடம் கேள்வி கேட்க வந்த நண்பர்கள் அண்ணு படுத்திருந்த நிலைமை கண்டு உள்ளம் நெகிழ்ந்து அவர்கள் பிரச்சினை பற்றிப் பேசாமலேயே அண்ணுவை வழி அனுப்பி வைத்தனர்.

மௌனத்தின் மூலம் குற்றவாளிகளைத் திருத்தும் சக்தி அண்ணு அவர்களுக்கு உண்டு என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாகும்.

❊ ❊ ❊

67-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் - ஏழை எளியோரின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு திட்டத்தைக் கூறி அதை நிறைவேற்ற வேண்டுமென அதிகாரிகளிடம் கூறினர்.

ஓரிரு அதிகாரிகள் அதற்காகும் செலவை மட்டும் கணக்கிட்டு தற்போது அது இயலாது எனக் கூறினர்.

அந்த இலாகா சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அதிகாரியும் அது பற்றி விவாதித்து ஒரு வாரத்தில் நல்ல முடிவு தெரிவிக்குமாறு கூறினர்.

பெரும்பாலான அதிகாரிகள் அண்ணுவின் உள்ளுணர்வை உணர்ந்து அத்திட்டம் செயல்பட பல ஆலோசனைகள் கூறியிருந்தனர்.

ஒரு அதிகாரி மட்டும்-கம்யூட் மன்னன் - கடலின் எதிரே நின்று கொண்டு கடல் அலையே அடங்கு என உத்தரவிடுவது போல் இப்பெரிய திட்டம் உள்ளது இதனை நடைமுறைப்படுத்த தற்போது இயலாது என கருத்துஎழுதியிருந்தார்.

அண்ணு அவர்கள் அந்த அதிகாரியை அழைத்து -ஏழை மக்கள் இதயத்தில் அடித்துக் கொண்டிருக்கும்அலையைநிறுத்தத்தான் இத் திட்டம். இதனை நிறைவேற்ற உடன் ஆவன செய்யுங்கள் என உத்திரவிட்டது மட்டுமல்ல - அதற்கான வழி வகையும் கூறினர்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டிட அண்ணு ஒவ்வொரு திட்டங்களையும் அவர்களுக்காகவே நிறைவேற்றினர். அவர் பணி பாதியிலே முடிந்தாலும் மீதியை முதல்வர் கலைஞர் நிறைவேற்றி வருகிறார்.

அண்ணு விழா எடுக்கும் இந் நன்னாளில் - அவர் வழி நடக்கும் கலைஞர் கரத்தை வலுப்படுத்த - அவர் காரியம் யாவிற்கும் கரம் கொடுக்க உறுதிகொள்வோம்.

—

காங்கிரஸ் சோசலிசம்



ஒரு ஓவியன் வெள்ளைத்திரையைக் காட்டி இதில் பசுவும் புல் தரையும் வரைந்திருக்கிறேன் எப்படி இருக்கிறது பாருங்கள் என்றான். திரையில் பசுவும் இல்லை; புல்லும் இல்லை. ''புல் எங்கே? ''என்று கேட்டதற்கு பசு தின்று விட்டது என்றனும். ''பசு எங்கே? என்று கேட்டதற்குப் புல்லை தின்றதால் பசுவை விரட்டிவிட்டேன் என்றனும். காங்கிரசார் பேசும் சோஷலிசமும் இந்த ஓவியன் பேச்சைப்போல்தான் இருக்கிறது.

— அண்ணா

அண்ணை வெடுத்த அரைசுகூவல்



அமைச்சர் இராமச்சந்திரன்

கோட்டும் மழையில் கண்ணீர்த் துளிகளோடு துவக்கப்பட்ட தி. மு. கழகம் இன்று கோட்டையில் கோலோச்சுகின்ற அளவு வளர்ந்து வனப்புப் பெற்றிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா ஆவார்கள்.

கட்சியிலும் சரி, ஆட்சியிலும் சரி அண்ணா கடைப்பிடித்து வந்த கட்டுப்பாடுகளும் பண்புத் தன்மைகளும் தான் கட்சியும் ஆட்சியும் சீர் பெறுவதற்கு அச்சாணியாக அமைந்தன.

திறமை - நாணயம் இரண்டிற்கும் அண்ணா முதலிடம் தருவார். திறமையாளர் எங்கிருந்தாலும், எந்த முகாமிலிருந்தாலும், அவர்களைப் பாராட்டுவார் - அவர்கள் நாணயமிக்க மனிதர்களாகவும் இருந்துவிட்டால் அண்ணாவின் இதயத்திலே அவர்களுக்கு இடம் கிடைத்து விடும்.

தி. மு. கழகம் ஆட்சி அமைத்த பிறகு உயர் பதவியிலிருந்த அதிகாரி ஒருவரைப் பற்றி சில தகவல்கள் வந்தன. அதை அண்ணா அவர்களிடம் தெரிவித்தோம். அந்தஅதிகாரி அண்ணா அவர்களிடம் நட்புக் கொண்டவருமாவார்.

நாங்கள் கூறியதை கேட்டுக்கொண்ட அண்ணா அவர்கள் கவனிக்கிறேன் என்று சொன்னார். நாங்கள் அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினையை அண்ணாவிடம் வலியுறுத்தவில்லை. ஆனால் அண்ணா அவர்கள் மூன்று மாத கால அவகாசத்தில் அது பற்றித் தகவலறிந்து அதிகாரிபற்றி நாங்கள் சொன்னது உண்மைதான் என ஆதாரபூர்வமாகத் தெரிந்த பிறகு அவரை வேறு ஒரு இலாகாவுக்கு மாற்றம் செய்தார்.

அதிகாரி திறமையானவர் என அண்ணாவுக்குத் தெரியும் இருந்தும் நாணயப் பிசகு நடைபெற இடம் தராமல் தக்க நடவடிக்கை எடுத்தார்.

நற்பண்புகளைக் கடைப்பிடிப்பதில் அண்ணா வேண்டியவர் வேண்டாதவர் பார்க்க மாட்டார் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

ஃ ஃ ஃ

அதைப் போலவே நல்ல ஆலோசனைகள் எங்கிருந்து வந்தாலும் அதை உடன் ஏற்று பரிசீலித்து செயல் படுத்துவார் அண்ணா.

தனியார் மின்சாரக் கம்பெனிகளை அரசுடைமையாக்க வேண்டுமென்ற பிரச்சினை வந்தபோது அது பற்றிய சில கருத்துகளை நான் அண்ணா அவர்களிடம் தெரிவித்தேன். நான் சொன்ன வழிமுறைகள் அவர்களுக்குச் சரியெனப்பட்டதால் விரைவில் முடிவெடுக்கிறேன் எனக் கூறினார்.

இரண்டு நாட்களில் அண்ணா அவர்களின் தனிச் செயலாளரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் அவரைச் சந்தித்தேன்.

அவர் என்னிடம் மின்சாரக் கம்பெனிகள் சம்பந்தப்பட்ட பைல்களை காட்டி தங்களிடம் இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்றார்.

இதில் வியப்பு என்னவென்றால் -ஃபைலில் ஒரு தனித்தாளில் என் பெயரைக் குறிப்பிட்டு என்னிடம் உடனடித் தொடர்பு கொண்டு ஃபைல் சம்பந்தமாக விவாதிக்கவும்' என்று அண்ணா அவர்கள் தன் கைப்பட ஒரு குறிப்பு எழுதி யிருந்தார்கள்.

நான் அண்ணாவைச் சந்தித்து அதுபற்றிக் கூறியதோ இரண்டு நிமிட நேரம் அவ அவரோ அதை நினைவாக வைத்து ஃபைலில் குறிப்பு எழுதி விவாதித்து கருத்தறியும்படி எழுதியிருந்தது என்னை பெருமிதத்தில் ஆழ்த்தியது.

யார் சொல்லுகிறார்கள் என்பதைப் பார்க்காமல் - 'என்ன சொல்லப்படுகிறது' என்பதைக் கவனித்து கருத்துக்களுக்கு மதிப்புத் தரும் பெருந் தன்மை அண்ணா அவர்களிடம்இருந்தது.

அண்ணா அவர்களிடம் காணப்பட்ட அதே பெருந்

தன்மையும், கருத்துக்களை பரிசீலிக்கும் பண்பும் இன்று அவர் வழிக் கலைஞரிடம் இம்மி பிரளாமல் இருக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு என்பது காங்கிரசார் உள்ளத்தில் ஒரு லட்சிய தீபமாக இல்லாமல் போலிப் பிரசார தந்திரமாக இருக்கிறது என்று அண்ணா அடிக்கடி கூறுவார்.

உண்மையில் தேசிய ஒருமைப்பாட்டுணர்வு காங்கிரசாருக்கோ, மத்தியில் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கோ இருக்குமானால் - இலங்கையிலிருந்து அனுப்பப்படும் அகதிகளையும் - பர்மாவிலிருந்து வரும் தமிழர்களையும் தமிழகத்திற்கே அனுப்பி சுமை ஏற்படுத்துவானேன்?

வெளிநாடுகளிலிருந்து குடும்பம், குடும்பமாக வரும் அகதிகள் தமிழர்களாக இருந்தாலும் - அவர்களைப் பரவலாக இந்தியாவின் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பி அவர்களுக்கு புது வாழ்வு தருவதுதானே -முறை அதுதானே ஒருமைப்பாடு.

வருவோர் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை இங்கேயே குடியேற்றி ஒரு மாநில அரசுக்கு மட்டும் நெருக்கடியை - பிரச்சினையை உண்டாக்குவது தமிழகத்தை தனிமைப்படுத்துவது போல் உள்ளது.

மத்திய அரசின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும் - ஜன கன மணப் பாடுவதற்கும் தான் தேசிய ஒருமைப்பாடா?

தேசிய ஒருமைப்பாடென்பது உண்மையான உணர்ச்சி எனில் வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கப்படும் தமிழர்களில் சிலரையேனும் - மத்திய அரசு உத்திரப்பிரதேசத்துக்கும், மத்தியப்பிரதேசத்துக்கும் அனுப்பி அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்து - வாழ்வளிக்கவேண்டும் அதுதான் உயிருள்ள தேசிய ஒருமைப்பாடாகும்.

அது மறுக்கப்படுமானால் வெளியிலிருந்து வரும் அகதிகளை நானே மத்தியப் பிரதேசத்துக்கும் உத்தரப்பிரதேசத்துக்கும் அனுப்பி அங்குள்ள காலி இடங்களில் குடில் அமைத்து அமருமாறு கூறுவேன். அங்குள்ளோர் அவர்கள் குடியமருவதை தடுத்தால் - அகதிகள் அங்கிருந்து கொண்டே 'ஜனகனமண' பாடுவார்கள் - அதைத் தடுக்க முடியாது.

ஆகையால் காங்கிரசார் இத்தகு நிலையை வளரச் செய்யாமல் தேசிய ஒருமைப்பாடு லட்சியத்தை உண்மை உணர்வுடன் - உயரிய நோக்குடன் செயல்படுத்த வேண்டும்'' என அறைகூவல் விடுத்து ஒரு கூட்டத்தில் பேசினர்கள். அது என் மனதில் இப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
உற்பத்தி செய்யும் உயர்ந்த ரக சிமெண்ட்

மிகச் சிறந்த மூலப் பொருள்களையும் நவீன தொழில் நுட்பத் திறனையும் கொண்டு உற்பத்தி செய்யப் பெறும்

அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்

ஐ.எஸ்.ஐ. நிர்ணயித்துள்ள தரத்தைக் காட்டிலும் சிறப்பானது

வலிவும் வனப்பும் வாய்ந்தது
எளிதில் கிடைப்பது.
சிக்கனமானது.
முழு திருப்தியும் உங்களுக்கு அளிக்கவல்லது.



TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, 3-வது மாடி, எல்.எல்.ஏ. கட்டிடம், த.பெ.எண் : 5205, மவுண்ட் ரோடு, சென்னை-2
தொழிற்சாலை, தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம், ராமநாதபுரம் மாவட்டம்

AC-8





விருந்தில் விருந்து

தினகரன்

1957-ல் தி. மு. கழகம் முதன் முறையாகப் பொதுத்தேர்தலில் ஈடுபட்டு 15 உறுப்பினர்கள் தமிழக சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

வெற்றி பெற்ற 15 கழக சட்ட மன்ற உறுப்பினர்கட்கும் அப்போது கழகத்தில் கவிக் குயிலாக இருந்தவர் (பின்னர் காங்கிரஸ் பிரச்சாரப் பீரங்கியாக இருந்து இப்போது அரசியலில் பட்டும் படாமலும் இருப்பவர்) ஆயிரம் விளக்கில் இருந்த அவருடைய 'தென்றல்' பத்திரிகை அலுவலகத்தில் விருந்தொன்று தந்தார்.

அண்ணாவும் சட்டமன்ற உறுப்பினர்களும் விருந்துக்கு வந்திருந்தனர்.

விருந்து முடிந்த பிறகு அண்ணா அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும், முக்கிய கழகத் தோழர்களும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

அண்ணா அவர்கள் திராவிடக் கழகத்தில் இருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், தந்தை பெரியார் அவர்களின் குணாதிசயங்கள் பற்றியும், திராவிட கழகத்தி லிருந்து பிரிய வேண்டிய நெருக்கடி ஏற்பட்ட தன் காரணத்தையும் விளக்கிக் கொண்டிருந்தார்.

அண்ணா விளக்கியதில் பல பிரச்சினைகள் புதிதாகவும், சமையாகவும் இருந்ததால் பேராசிரியர், ஆசைத் தம்பி ஆகியோர் உட்பட கழகத் தோழர்கள் அனைவரும் தங்களை மறந்து சுவைத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வார 'தென்றல்' பத்திரிகையில் 'உலகம் இவ்வளவுதான்' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரையைப் படித்து முடித்த பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அந்தக் கட்டுரையின் பொருள் தவறான விளக்கத்தைத் தருகிறது என்று கட்டுரை எழுதிய கவிஞருடன் விவாதித்தார்.

''இந்த உலகில் தனக்குத் தெரியாதது ஏதும் கிடையாது. எல்லாம் தெரியும் என்று ஒவ்வொரு மனிதனும் எண்ணவேண்டும். அப்படி எண்ணினாலுதான் இந்த உலகம் சிறிதாகவும், நாம் செயல்படத் துணிச்சலும் ஏற்படும். அதை விடுத்து நமக்குத் தெரிந்தது குறைவுதான். நாம் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைத்தால் நம்மிடம் கோழைத்தனமும் - நம்மைப் பயமுறுத்துகின்ற அளவுக்கு இந்த உலகம் பெரிதாகவும் தெரியும். ஆகையால் இந்த உலகம் நம் கண்களுக்குச் சாதாரணமாகத் தோன்ற வேண்டுமென்றால் நமக்குத் தெரியாதது ஏதுமில்லை என்று எண்ணிட வேண்டும்'' என்று அந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருந்தது.

இந்தக் கருத்துத் தவறானது என்று அந்தக் கவிஞரிடம் விவாதித்தார் பேராசிரியர்.



30 ஆண்டுகளுக்கு முன் தஞ்சையில் நடைபெற்ற 'ஓர் இரவு' 100-வது நாடக விழாவில் பேரறிஞர் அண்ணா, கே. ஆர். ஆர். எஸ். டி. சுந்தரம் ஆகியோர்.

'அது சரியானதுதான்' என்று வாதிட்டார் கவிஞர்.

விவாதத்தில் லேசான சூடு பிடித்தது. இருவரின் விவாதங்களையும் அமைதியுடன் கவனித்துக் கொண்டிருந்த அண்ணு அவர்கள் - கட்டுரை ஆசிரியரை நோக்கி ''என்ன இப்படிப் பேசுகிறாய்? உன்கருத்துத் தவறானது'' என்றார்.

''இல்லை அண்ணு, என் வாழ்க்கையில் நான் அப்படித்தான் முன்னேறியிருக்கிறேன்''என்று அண்ணு அவர்களிடமும் வாதிட்டார் அந்தக் கவிஞர்.

''தனக்குத் தெரியாததை யெல்லாம் தெரியும் என்று கருதினால் எப்படி முன்னேற முடியும்? உனக்கு விமானம் ஓட்டத் தெரியுமா? என்று கேட்கிறார்கள் - நீ தெரியும் என்று கூறிவிட்டால் அதைச் செய்ய வேண்டாமா? தையற்கடைக்குப் போகிறாய் - உனக்குச் சட்டை தைக்கத் தெரியுமா என்று கேட்கிறார்கள் தெரியும் என்று கூறிவிடுவாயா? அவ்வளவு ஏன்? உன் பத்திரிகை அலுவலகத்துக்கே ஒருவர் வேலை கேட்டு வருகிறார் —நீ அவரிடம் கவிதை எழுதத் தெரியுமா? என்று கேட்கிறாய் - அதில் பயிற்சி இல்லாத அவர் தெரியும் என்று கூறிவிட்டால்— பின்பு உண்மை தெரிந்த பிறகு நீ அவரை வேலைக்கு வைத்துக் கொள்வாயா?

தனக்குத் தெரிந்ததைக் கூட தன்னடக்கத்தோடு கூறிவிட்டுப் பிறகு சிறப்பாகச் செய்தால்தான் உலகில் முன்னேற முடியுமே தவிர தெரியாததை எல்லாம் தெரியும் என்று கூறிவிட்டால் முன்னேற முடியுமா? அதனால் உலகம் சிறிதாகிவிடுமா என்ன? நீ தவறையே தத்துவமாக்குகிறாய்'', என்று அண்ணு அவர்கள் கவிஞரின் பிடிவாத குணத்தைச் செல்லமாகக் கண்டித்தார்.

''இந்தக் கட்டுரை நான் கோகலே ஹாலில் சில நாட்களுக்கு முன்பு ''உலகம் இவ்வளவுதான்'' என்ற தலைப்பில் பேசியது. பெர்னாட்ஷா சொல்லியிருக்கிறார் எதிரே இருப்பவர்களை எல்லாம் முட்டாள்கள் என நினைத்துக் கொண்டு பேசு என்று அதனால்தான் நான் அப்படிப் பேசினேன்'', என்றார் கவிஞர்.

அதற்கு அண்ணு சொன்னார் - பெர்னாட்ஷா எதிரே இருப்பவர்களை முட்டாள்கள் என்று நினைத்துக்கொண்டு பேசு என்றுதான் கூறினார் - நீயோ நீங்களெல்லாம் முட்டாள்கள் ஆகையால் நான் பேசுகிறேன் என்று கூறிவிட்டுப் பேசியிருக்கிறாய். உன் தவறான விளக்கத்திற்குப் பாதுகாப்பாக பெரியவர்களை இழுப்பது ஆபத்து'' என்று கூறியதும் - ''போங்கண்ணு நீங்க எப்போதும் அன்பழகன் பக்கம்தான் பேசுவீர்கள்'', என்று சிரித்தார் கவிஞர்.

❊ ❊ ❊

அண்ணு எழுதி வெளிவந்த ஒரு திரைப் படத்தைப் பற்றிப் பேச்சு வந்தபோது—

''படம் நன்றாக ஓடியது. சென்னையில் அதனை வெளியிட்டவருக்கு நல்ல லாபம் கிடைத்ததண்ணு'' என்றார் கவிஞர்.

அண்ணு தலையசைத்து மௌனமாக அதை ஒப்புக்கொண்டார்.

''அந்தப் படத்தை நீங்களே ரிலீஸ் பண்ணினால் நல்ல லாபம் வரும் என்று நான் அப்போதே கூறினேன் என் பேச்சை நீங்கள் கேட்கவில்லை'' என்றார் கவிஞர்.

அண்ணு அமைதியாகப் பதில் சொன்னார்—

''நீ எப்போது உண்மை பேசுகிறாய் என்று தெரிந்தால்தானே நீ சொல்வதை நான் கேட்க முடியும்''.

அதைத் தொடர்ந்து பலமான சிரிப்பொலிகள் எழுந்து அடங்கின. ஒருவர் மட்டும் அண்ணுவின் நகைச்சுவையை ரசித்து விடாமல் சிரித்தார். அவர்தான் நகைச்சுவைக்கு ஆளான கவிஞர். —



மேடைப் பேச்சு இலக்கணம்

கதம்ப மாலையில் மலர் குறைவாகவும், தழை அதிகமாகவும் இருப்பின் அதனை மாதர் கொள்ளார். அது போலவே மேடைப் பேச்சில் கருத்து அங்கொன்றும் இங்கொன்றுமாகி கவைக்குதவாதவை அதிகமாக இருப்பின் அதனை எவரும் கொள்ளார்.

• அறிஞர் அண்ணு



எனக்குத் தேவனன்றே!



அமைச்சர் ஓ.பி. இராமன்

தமிழ்ச் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில், கல்லூரி மேடைகளில் முழங்கத் தொடங்கிய பின்புதான் பிரசங்கம்—சொற் பொழிவாகியது. உபநியாசம்—உரையாகியது. அக்கிராசனர்—தலைவர் ஆனார். தேசம்—நாடாகியது. ஜனங்கள் மக்களாயினர் என்று சொல்வதைக் காட்டிலும் தமிழுக்கு. தமிழ் மக்களுக்கு ஓர் மறுமலர்ச்சி ஏற்பட்டதெனக் கூறுவதில் எத்தவறுமில்லையெனக் கருதுகிறேன்.

தமிழ் மக்களுக்குத் தான் ஈந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரந்தான், தமிழ்நாட்டு அரசியலில் நாகரிகத்தை ஏற்படுத்தியதெனக் கூறலாம்.

அண்ணனே நீ பல ஆண்டுகளுக்கு முன் ஆற்றிய உரையை இன்று படித்தாலும், இன்று நிகழ்த்துகின்ற உரை போன்ற இன்பம். பேச்சைக் கேட்கின்ற யாராயினும் வேற்றுமை மறந்து பாராட்டுகின்ற நிலை, உமது பேச்சுக்கே அமைந்த தனிக்குணமாகும்.

ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைத் திரும்பிக் காட்டு என்று சொல்லிய ஏசுகிறிஸ்து;

அன்பே தெய்வமெனப் புகட்டிய புத்த பிரான்.

அஹிம்சையே வெல்லுமெனக் கூறிய காந்தி அண்ணல்— இவர்கள் தத்துவத்தின் ஒரு உருவாய் அமைந்த தென்னகத்தின் எழு ஞாயிறு. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பதன் மூலம் கடவுள் கொள்கைக்கு இலக்கணம் தந்தார்.

நாடு வாழ, மொழி வாழ, நாலரைக் கோடி மக்களின் நாயகனாய் உழைத்து உழைத்து நீ உயிரைப் பிரித்துக் கொண்டாய். நாடே அழுதது.

நீ கொட்டிவிட்ட அன்பிற்காக உமைத் தாயென்பார் பலருண்டு; நீ விட்டுச் சென்ற கருத்துச் செல்வத்திற்காக அறிவுப் பெட்டகமென்பார் பலருண்டு. உமை எளிமையின் தோற்றமென்பார்; இந்நாட்டுக் காந்தி என்பார்.

ஈராயிரம் ஆண்டுகள் முந்தி இந்நாட்டின் செந்நாப் புலவன் தாரக மந்திரமாய், அறம், பொருள், இன்பம் என்றான்.

அவனுக்குப் பின் ஆண்டுகள் பல ஓட
நமையாண்டு கொண்ட காஞ்சி அண்ணன்
கடமை,கண்ணியம் கட்டுப்பாடு கண்டான்.
இந்த அறம் பொருள், இன்பத்திற்கு
அற்புத விளக்கம் சொன்னான்
அறம் செய்தல் கடமை என்றான்
பொருளீட்ட கண்ணியமும்
இன்பத்தில் கட்டுப்பாடும்,
இதுவே இதன் பொருளுமென்றான்.
வையத்தில் குறள் கண்டான்
நம் செந்நாப் புலவன்
குறளுக்குப் பொருள் கண்டான்
எமது காஞ்சித் தலைவன்.

ஆயிர மாயிரம் உமது அன்புத் தொண்டர்களை, பாசக் கயிற்றால் பிணைத்து நீ அரசியல் தந்தையானாய், எம்போன்ற தொண்டருக்கு நீயிட்ட பிச்சையன்றோ 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு. உம் பிச்சையேற்றுக் கற்கின்றோம், நீ கட்டி விட்ட பள்ளியிலே! உனக்கு வாரிசு,

எனக்கு அரசியல் ஆசான்,
உலகத்துக் கவிஞன்
எனக்குத் தலைவன்!
தலைவர் கலைஞரின் தலைவன் நீ!
ஆனால் எனக்குத் தேவனன்றே!

★

சுவைமிக்க உணவு வகைகளுக்கும்
இணையற்ற ஐஸ்கிரீம் வகைகளுக்கும்
குடும்பத்தினருடன் வருகை புரியுங்கள்

புஹாரி



சென்னை.

பிரசித்தி பெற்ற பிரியாணி வகைகள்
உங்கள் அபிமான 'புஹாரிஸ் No. 65 சிக்கன்' தந்தூரி சிக்கன், சிலோன் எக் பரோட்டா, மற்றும் மேலைநாட்டு, வடஇந்திய உணவுகள் மனநிறைவூட்டும் மேன்மையான ஐஸ்கிரீம் வகைகள், மதுரமான மில்க் ஷேக் வகைகள் புஹாரியின் எல்லா கிளைகளிலும் கிடைக்கும்.

கல்யாண பார்ட்டி, வரவேற்பு, விருந்து, உபசாரவிழா போன்ற விசேடங்களுக்கும் தொடர்பு கொள்க.

"புஹாரி ஹோட்டல்ஸ்"
சென்னை.

எங்களின் மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!

தி இந்தியன் இன்ஜினியரிங் அண்டு டிரேடிங் கம்பெனி,

15, வாலஸ் சாலை :-: சென்னை-2.

தொழிற்சாலை: G-3, வியாசர்பாடி, தொழிற்பேட்டை, சென்னை-39.

தொலைபேசிகள்: 88761 - 88762. தொழிற்சாலை: 37963.

தந்தி: பியூல் பம்ப்

—: உற்பத்தியாளர்கள் :—

"DVD" பீல்ட் காயில்கள் & கார்பன், பிரஷ்கள், பியூல்இன்ஜக்ஷன் பைப்புகள், கவர்னர் டயாபார்ம்ஸ் மற்றும் பியூல் இன்ஜக்ஷன் காம்பொனென்ட் பார்ட்ஸ்.

அண்ணாவுடன்.... சில நினைவுகள்



இராம. சுப்பையா, எம்.எல்.சி.

"நீடு துயில் நீக்கப் பாடிவந்த வெண் ணிலவாய்", "காடு கமழும் கற்பூரச் சொற்கோவாய்", "மலராடு சோலையிலே வண்டாடு புதுமலராய்" நாமெல்லாம் சூழ்ந் திருக்க வாழ்ந்திருந்தார் நம் அண்ணா!

முத்தமிழ் போல், எத்திசையும் புகழ் மணக்க வாழ்ந்திருந்த பேரறிஞரோடு பழ கிடக் கிடைத்த வாய்ப்பை நான் பலமுறை எண்ணி மகிழ்வதுண்டு.

அவருடைய நகைச்சுவை கலந்த உரை யாடல், அன்பு கலந்த அறிவுரை, அறிவு கலந்த செயல்வேகம், போன்றவைகளைப் பற்றிய சில சுவையான நிகழ்ச்சிகளை இக் கட்டுரையில் நினைவுகூர்ந்திட விரும்புகிறேன்.

ஒருமுறை அண்ணா அவர்களை சொற் பொழிவாற்றிட எங்களின் ஊரான காரைக் குடிக்கு அழைத்திருந்தோம். அப்போதெல் லாம், பகுத்தறிவுக் கொள்கைகள் எட்டிக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு மூட நம்பிக்கைகள் மலிந்து கிடந்தன.

அந்த நேரத்தில், அதுவும் பக்திமான்கள் நிறைந்த காரைக்குடியில், "பகுத்தறிவுப் பகலவன்" அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றப் போகும் நிகழ்ச்சி ஒரு பரபரப்பையே உண்டாக்கியிருந்தது என்றே கூறலாம்.

அண்ணா பேசத் தொடங்கினார்: "வணிக வேந்தர்களிடத்தில் நான் சரக்கு விற்க வந் திருக்கின்றேன். அவர்களிடத்திலே நல்ல சரக்காஞல்த்தான் விலைபோகும். அவர்கள் பெரு மதிப்பீடுடையவர்கள். வேற்று நாட்டிற் குச் சென்று கொடுத்து வாங்கிப் பெரும் பொருளீட்டி மாட மாளிகை கூட கோபுரம் கட்டினார்கள்" என்று அவர் பேசத் தொடங் கியதும் சலசலப்பே இல்லாமல், மக்கள் கூட்டம் அவருடைய சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தது. சொல்லாற்ற லுக்கு உள்ள மதிப்பை, அன்று அண்ணா அவர்கள் உணர்த்தினார் என்றால் மிகை யில்லை.

எங்கள் செட்டிநாட்டுப்பகுதியில் பல பெரிய பெரிய வீடுகளில் ஒரிருவர் மட்டுமே வாழ் வதைக் கண்ட அண்ணா மிக வேதனையோடு சொன்னார்கள்: "ஒருபுறம், மக்களில்லாத வீடுகள்; மறுபுறம் வீடில்லாத மக்கள்" என்னால் மறக்க முடியாத இந்த வரி நம் நாட்டின் பொருளாதார ஏற்றத் தாழ்வை மிக எளிதாகப் படம்பிடித்துக் காட்டுகிறது

அறிஞரோடு தனித்திருக்கும் நேரங்களில் நகைச்சுவைக்குப் பஞ்சமே இருப்பதில்லை. ஒரு நாள் நானும், அறிஞர் அண்ணாவும், இன்னொரு நண்பரும் ஒரு அறையில் தங்கி யிருந்தோம். அந்த நண்பர் அண்ணாவின் அன்புக்குரியவர் என்பதால் அவரை அண்ணா சில நேரங்களில் கேலி செய்வதுண்டு. அன் ரவு, நாங்கள் மூவரும் தூங்கிவிட்ட சற்று நேரத்திற்குள், நண்பரின் அலறல் ஒலி கேட்டு, இருவரும் விழித்துக் கொண்டோம். நண்பர் தூங்கிக் கொண்டிருந்தபோது, எலி காலைக் கடித்து விட்டது! அப்போது அண்ணா அவர்கள் அந்த நண்பரிடம், "உன்னைக் கடித்த எலியைப் பார்த்தால் விட்டு விடாதே! அதற்குக் கட்டாயம் ஒரு ஊசி போட வேண்டும்; இல்லையென்றால் உன்னு டைய விஷம் அதற்கு ஏறிவிடும்," என்று கூறியதும், அந்த நண்பர், தன் வேதனையை யும் மறந்து, சிரித்து விட்டார்!

சிலரிடத்தில் சில ஆற்றல்களை நாம் காண முடியும். ஆனால், அண்ணாவிடமோ அனைத் தாற்றல்களுமே இருந்தது வியப்புக்குரியதே! எழுத்தாளராக — பேச்சாளராக — நடிக ராக — ஓவியராக, இப்படிப் பல்வேறு துறை களிலும் அவர் சிறந்து விளங்கினார். இந்த ஆற்றல்களைக் கூட, பிறர் பெற்றுவிட இய லும்; ஆனால் அவருடைய பெருந்தன்மை அவரின் தனிச் சொத்து.

ஒருமுறை, நானும் நண்பர்களும் மிக வேகத்தோடும், கோபத்தோடும் வந்து, அண்ணா அவர்களிடம், "அண்ணா, உங்களைப் பற்றித் தவறான செய்திகளையெல்லாம் மிக

மட்டமான முறையில் எழுதி வைத்திருக்கி றீர்கள். எங்களால் பொறுக்க முடியவில்லை'' என்று கூறினேம். அதற்கு அண்ணு அவர் கள் சிரித்துக் கொண்டே, ''இதற்கெல்லாம் நாம் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? அந்தத் தட்டிக்கு அருகில் ஒரு பெட்ரோ மாக்ஸ் விளக்கினைக் கொண்டுபோய் வையுங் கள். இரவிலேயும் படிக்கட்டும்,'' என்று கூறினர்! வியந்து போனேம் — அயர்ந்து போனேம்!

காரைக்குடிக் குறள் விழாவில் கலந்து கொண்ட அண்ணு அவர்கள், ''தேனைத் தொட்டால் இனிக்கும், தேளைத் தொட் டால் கடுக்கும், தேன் போன்றது திருக் குறள்,'' என்று மட்டும் சொல்லி மற்ற தேவையற்ற சில இலக்கியங்களைப் பற்றிச் சொல்லாமலே புரிய வைத்ததின் மூலம், நாவன்மையிலும் ஒரு நளினத்தை உணர்த்தி னர்!

சிவகெங்கையில் நடந்த முதல் மாநாட் டில் அண்ணு ஆற்றிய ஒரு பேருரையும், மறத்தற்கியலாது. ''தம்பிகளே! நம்மை எதிர்ப்பவர்களை விட, மிரட்டுபவர்கள்தான் மிகுதி. நாம் நடந்து செல்ல வேண்டிய பாதை, பள்ளம், படுகுழிகள் நிறைந்தது. மேலே பச்சிலைகளைப் போட்டு மூடியிருப் பார்கள். உள்ளே கொட்டும் வண்டும், கூவும் குயிலும் இருக்கும். கொட்டும் வண் டினை விரட்டி விட்டு, கூவும் குயிலின் இசை யில் மயங்கிக் கடமையை மறந்து விடாதீர் கள்!'' இந்த உரை என்றென்றும் நம் நினைவில் நிற்கும்.

பொதுவாக, 'அறிவு, ஆற்றல், செல்வம், செல்வாக்கு, ஈகை' ஆகிய ஐம்பெருங் குணங்களில், ஒன்றிருந்தால், மற்றொன்றிருக் காது. ஆனால் அண்ணு அவர்களிடம், ஐந் துமே இருந்தன! ''என்ன, அண்ணு அவ்வ ளவு பெரிய செல்வந்தரா?'' என்று கேட் காதீர்கள்; ''செல்வம் என்பது சிந்தையின் நிறைவே'' என்றுதானே நம் சங்க இலக்கி யம் கூறுகிறது!

இத்தகைய மறத்தற்கியலா அண்ணனைப் பிரிந்து, ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் நமக்கு, அண்ணனின் அடியொற்றி நடக்கும் கலைஞரின் ஆட்சி, இன்று போல் என்றும் தொடரட்டும்!

வாழட்டும் — அண்ணுவின் புகழ்!
வளரட்டும் — அவருடைய தொண்டுள்ளம்!
வளம் பெறட்டும் — இந்நாட்டு மக்கள்!

★

THIRU AROORAN SUGARS LIMITED

VADAPATHIMANGALAM.

(TANJORE DISTRICT) (TAMILNADU)

***Manufacturers of*:**

BEST QUALITY

WHITE CRYSTAL SUGARS

REGISTERED OFFICE:

17|4, NUNGAMBAKKAM HIGH ROAD,

POST BOX No. 3328 *MADRAS 34.*

Telephone: 86001 - 3 Lines
Telegrams: "FINESUGAR"

MADRAS.



21 ஆண்டுகளுக்கு முன்.....

1951-ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் சென்னையில் நடைபெற்ற தி.மு.கழக முதல் மாநில மாநாட்டின் முகப்புத் தோற்றமும் – அண்ணா பவனி வரும் எழிற்காட்சியும்.

கழக விழாக்களில் காணும் எழிற்கோலமும்–சீர்மிகு விழாத் தன்மையும் ஊர்வலச் சிறப்பும் இன்று ஏற்பட்டதல்ல என்றும் உரியதே என்பதற்கு இப் படங்கள் ஒரு சான்று.



அண்ணு இருக்கின்ரூர்!

பேரறிஞர் அண்ணு பிறந்த நாளில்
தஞ்சைத் தரணியில் ஒரு லட்சம்
விவசாயத் தொழிலாளர்களுக்கு
குடியிருப்பு மனை பட்டாக்கள்

பன்னிரண்டு ஆண்டுகளில்
வருவாய் இருமடங்காக
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநிலத்திட்டக்குழுவின் பணிகள்

சமதர்ம சமுதாயம் உருவாக
இன்னும் ஐந்து ஆண்டுகளில்
எல்லாப் பேருந்து வழித்தடங்களும்
நாட்டுடமை

நிலச்சீர்திருத்தத்தில் உச்சவரம்பு குறைப்பு!
மேய்ச்சல் நிலங்களுக்கு வரிவிலக்கு ரத்து!

ஆலய அறங்காவலர் குழுவில்
தாழ்த்தப்பட்ட வகுப்பினர்
கட்டாயம் இடம் பெற சட்டம்

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
நலம்பெற தனித்துறை!
உதவிகள்! சலுகைகள்!

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு புதிய அமைப்புகள்
இரத்தப் புரட்சி இல்லாமல்
தமிழகத்தில்

அண்ணு வழியில்

சமதர்ம சமுதாய அமைப்பு உருவாகி வருகிறது
ஏழை எளிய மக்களை வாழவைக்கும்
அந்தப் புனித பணிகளில்
அண்ணு இருக்கின்ரூர்!

★ ★

அண்ணு கனவுகளை நனவாக்க
நமது அரசு ஆற்றும் பணிகளுக்கு
உறுதுணையாக இருப்போம்! ஒத்துழைப்போம்!

செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

நெஞ்சம் மறப்பதில்லை



"எங்கள் தமிழ்ச் சிங்கம் ஈடற்ற சொல்லடுக்கிப் பொங்கும் கருத்தைப் புகுத்திடுவோன்" வங்கக் கடல் ஓரம், இந்நாள் தூங்குகின்றார். எனினும் அவர் நம் நெஞ்சத்தை விட்டு அகலுவதே இல்லை!

அவரைப் போல மொழியை அடுக்கியவர் யாரும் இல்லை; அவரைப் போலச் சொற்சிலம்பம் பயின்றவர் ஒருவரும் இல்லை; சொற்களிலே சிலேடை கையாள்வது அவருக்குக் கைவந்த கலை; நளினமான நகைச்சுவை, அவருடைய பாணி; அவர் உபயோகிக்கும் உவமை, அவருக்கே உடைமை!

சென்னை மாநில மாநாட்டில், மக்களைக் 'கண்ணீர்த் துளிகளே, நாட்டின் கண்மணிகளே' என்றழைத்து நம் இதயங்களையெல்லாம் கவர்ந்தவர் அவர்.

செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில், மொழிப் போர் தொடுத்த காலை, கொட்டும் மழைக் கிடையே, "போர் போர்" என்று போர்ப்பரணியே பாடினார். மாணவர்களே உங்கள் விரல் இடுக்கில் சிகரெட்டைப் பார்க்கிறேன். அது சிகரெட்டாக எனக்குத் தோன்றவில்லை, களத்திலே போர்வீரன் ஏந்திய புகை உமிழும் துப்பாக்கிக் குழல் போலத் தோன்றுகிறது என்றார் அவர்.

மெமோரியல் மண்டபத்தில் டி. செங்கல்வராயன் கலந்து கொண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றிப் பேசினார். இறுதியில் பேசிய அண்ணா — "திட்டங்கள் போட்டுப் பயன் என்ன? அவற்றின் பயன் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமே" என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார். முடிவாக ஒரு உவமை சொன்னார் — "ஓவியத்தில் உள்ள அழகிய கனி, பறந்து வரும் பறவையின் பசியைப் போக்குமா?" — எத்தனைப் பொருள் பொதிந்த கேள்வி அது!

இருதயம் என்ற ஓர் கிறித்தவப் பெண்மணி. அவருக்குப் பள்ளிக்கூடத்தில் இடம் கிடைக்கவில்லை. அவர் பிரசண்ட விகடன் ஆசிரியருக்கும் கடிதம் எழுதுகிறார். அக்கடிதத்தை எடுத்து வைத்துக் கொண்டு அண்ணா திராவிட நாட்டில் ஒரு கட்டுரையே வரைகிறார். பிற்பட்ட சமுதாயத்திற்குச் சம வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்று வாதாடுகிறார். அப்போது அவர் கூறுகிறார்:

"இருதயத்தின் துடிப்பைப் பாருங்கள்—அது அதிவேகமாகவும் துடிக்கக் கூடாது — நிற்கவும் கூடாது." எத்தனை ஆழம் அச்சொற்களிலே!

கட்டுரை — கதைகளின் தலைப்புக்களை அண்ணா தமக்கே உரிய பாணியில் அமைப்பார். அவைகளுக்

குப் பின்னே இந்நாட்டின் அரசியலே தேங்கி நிற்கிறது!

நாமிருவர்—ஏழை படும்பாடு—படமல்ல, பாடம்
பட்டம், பதட்டம்,
லாரென்சுகள், பலவிதம்.
கேட்டது வாழ்வு — கிடைத்தது சாவு
மரண சாசனம்
கோடு உயர்ந்தது — குன்றம் தாழ்ந்தது;
வீடில்லா மக்கள் — மக்களில்லா வீடுகள்
கனபாடிகள் கவசத்தைக் காண்டீபம் துளைக்கிறது
ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர்
நம்பிக்கை நட்சத்திரம்
இரட்டைக் குழல் துப்பாக்கி
கண்ணீர்த் துளிகள்
கண்டனக் கணைகள்
வாழ்க வசவாளர்கள்
வஞ்சிக் கலம்பகம்
கொத்தனர் பிரின்ஸ்பாலாகிறார்!

இன்னும் எத்தனையோ உண்டு. அத்தனையிலும் அண்ணு வாழ்கின்றார். ஆம்; அண்ணு மறையவில்லை. எழுத்தில் — இதயத் துடிப்பில் இருக்கின்றார்.

-தெ. பா. சம்பந்தம் பி.ஏ.,





மத்திய அரசு தயாரா?

"மாநிலம் என்றகுழந்தையை அந்த மாநில அமைச்சர்களே காப்பாற்றிக்கொள்ளட்டும் என்று மத்தியஅரசு கூறுகிறது. அதன் படியே வைத்துக்கொண்டால் என் குழந்தைக்கு நான்என்சொந்த முயற்சியில் ஊட்டம் கொடுக்க முயற்சிக்கும் போது-நீஅதற்குத் தடையாகவோ-பங்குக்கோவரக்கூடாது-இதற்கு மத்திய அரசு தயார் தானு!"

—அறிஞர் அண்ணு


பாசமிகு
அண்ணனின்
பல்வகைப்
புன்னகை






இதயங்களை அழவைத்த
இறுதிப் புன்னகை

விரும்புவதில்லை. மாநிலங்கள் அவை உறுப் பினராக இருந்த காலத்திலும் டெல்லிப் பட்டணத்தில் தொடர்ந்து ஒரு வாரம் தங் கியதில்லை. அவர் எப்படித் தம் மக்களிடத் தில் அன்பு செலுத்தினரோ அதைத் தமி ழக மக்கள் பிரதிபலித்துக் காட்டினர் என் பதுதானே உண்மை! பத்தாண்டுகளுக்குள் ஆட்சி பீடம் ஏற்றி வைத்ததில் மக்கள் தமது நன்றியைத் தம் தலைவன் அண்ணா வுக்கு ஆற்றினர் என்பது ஒருபுறம் இருக்க, அவர் மறைந்தார் எனக் கேட்டதும் அன லிடைப்பட்ட புழுவாய் அவர்கள் அரற் றித் துடித்த காட்சிக்கு உவமை சொல்ல என்னால் இயலவில்லை.

அதிகாலையில் திரண்டதுதான் சென்னை மக்களின் கூட்டம்! நேரம் ஏற ஏற, வெளி யூர்களிலிருந்து சாரி சாரியாக லாரிகள், பஸ்கள், கார்கள் வரத் தொடங்கின. தமிழ் நாட்டில் எத்தனை வாகனங்கள் உண்டோ அவ்வளவும் அன்று சென்னை நோக்கி வந்து விட்டன! ரயில் வண்டிகள் பட்டபாடு! உயிரை மதியாமல் கூரைகளிலும், இணைப்பு களிலும் அமர்ந்து வந்து, சிதம்பரம் அரு கில் அநியாயமாக உயிர்விட்டவர்கள் எத் தனை பேர்! இறுதி ஊர்வலம் புறப்பட்ட நேரத்தில் சென்னை நகரில் இருந்த மக்கள் தொகை உண்மையிலேயே 50 லட்சத்துக் கும் அதிகமாகவே இருக்கும். கண்ணீர் அருவியாகப் பெருக அழுது புலம்பியவர்கள் —நேரில் காண இயலாமல் துடித்தவர்கள்— வீடுகள்தோறும் அண்ணனின் திருவுறுவப் படத்தை அலங்கரித்து, விளக்கேற்றி, மலர் சூட்டி, தெய்வமென வழிபட்டவர்கள்—அநேக லட்சம் பேர்!

அண்ணல் நிரந்தரமாகத் துயில் கொள்ளு தற்குத் தேர்ந்தெடுத்த இடம் மிக மிகப் பொருத்தமானது. அமைதி நாடுவோருக்கு ஏற்ற இடம். அன்பின் மிகுதியால் மக்கள் அணி அணியாய் அங்கு சென்றவண்ணம் இருக்கிறார்கள். அண்ணனை மறக்க மாட் டார்கள் மக்கள்.

அண்ணா மறைந்து விட்டார் என்பதை என்னால் ஒத்துக் கொள்ளவே முடியவில்லை. அப்படி எண்ண என் மனம் மறுக்கிறது. எங்கோ போயிருக்கிறார்! நாம் நேரில் காண முடியவில்லை! என்ற அளவில்தான் நான் கருதிக் கொண்டு வாழ்கிறேன். அவர் எவ் வாறுதான் மறைய முடியும்? அவர் முத் திரை பதியாத இடம் உண்டா? துறை



உண்டா? கலை உண்டா? எல்லாத் துறை களிலும் வல்லவரான அவர் தன் அருமைத் தம்பிமார்களை எல்லாத் துறைக்கும் பயிற்சி அளித்தார். அவரவர் தகுதி திறமை சக்திக்கு ஏற்ப ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் வல்லவராயினர். சிலர் பேச்சாளராயினர்; சிலர் எழுத்தாளராயினர்; சிலர் நடிகராயி னர்; சிலர் நாடகம் இயற்றினர்; சிலர் கவிதை புனைந்தனர்; சிலர் பாடகராயினர்; சிலர் தொண்டராயினர்; சிலர் சட்டமன்ற வல்லுநராயினர்; சிலர் கலைத்துறையில் ஓவி யராயினர், சிலர் சிற்பியாயினர்; சிலர் சிறந்த நிர்வாகியாயினர்; சிலர் நல்ல குடும் பத்தினராயினர்; சிலர் ஆராய்ச்சி நிபுணரா யினர்; சிலர் போராட்ட மறவராயினர்; சிலர் தியாகசீலராயினர்; கல்மீது விதைக்கப் பட்ட விதைகளைப் போல் சிலர் வீணுகிப் போயினர்!

ஆனால் அண்ணாவைப் போன்றே அனைத் துத் துறைகளிலும் அடிநாள் தொட்டு அதே வழியில் அடிபிறழாது பின்பற்றி வந்து தேர்ச்சி பெற்று முதிர்ச்சியுற்ற ஒருவர் நம் மிடையே இருக்கின்றார்; அவர்தான் கலைஞர்!

★



''உணவுப் பஞ்சம் வந்துவிட்டதே என்ன செய்யப் போகிறீர்கள்?''—என்று கேட்டதற்கு ''சோறுகிடைக்காவிட்டால் எலி திண்ணுங்கள்'' என்று கூறினார்கள். ''வருவாய் போதவில்லையே என்று கூறியபோது 'இதுதான் கிடைக்கும். இருந்தால் இருங்கள், இல்லையேல்..' என்றுஆணவமாகக் கூறினார்கள்! அத்தகைய நிலைக்கு நான் வரமாட்டேன். ஏனெனில் நான் மக்களில் ஒருவன். மக்களால் உருவாக்கப்பட்டவன்; என்றும் மக்களில் ஒருவனாகவே இருக்க விரும்புகிறேன்.

—அறிஞர் அண்ணா

With The Best Compliments

from

SATHYANARAYANA BROS PRIVATE LIMITED

Engineers & Contractors

"Mandhra"

25, Edward Elliots Road, Mylapore

MADRAS-4.

Phone: 82172 *(5 lines)*

Telex: *MS.* 7111.

Grams: SATHBROS.

அறிஞர் அண்ணாவிற்கு கனரா பாங்கின் அஞ்சலி

"இமயத்திலிருந்து கல் கொண்டு வந்து இணையிலா
புகழ் பெற்றான் சேரன் செங்குட்டுவன்"

"ஏல்" பல்கலைகழகத்தில் டாக்டர் பட்டம் பெற்று
தமிழனின் பெருமையை மேலும் உயர்த்தினர்

"அறிஞர் அண்ணா"

அண்ணாரின் பிறந்தநாளை கொண்டாடும் இந்த பொன்னாளிலே
ஏழை மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டு வருகிறது
"கனரா பாங்க்"

எளியோரின் வளமான வாழ்விற்கு தரமான
திட்டங்களை வகுத்துள்ளது "கனரா பாங்க்"

விபரங்கட்கு இன்றே உங்கள் அருகாமையிலுள்ள
எங்கள் கிளையை அணுகுங்கள்.

"கனரா பாங்க்"

தலைமை அலுவலகம்: பெங்களூர்-2.

அண்ணாவும் தமிழக வரலாறும்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்வளம் பெறத் தன் எழுத்தாலும், பேச்சாலும் தலைத் தொண்டாற்றிய தமிழன்னையின் தலை மகன் அறிஞர் அண்ணா அவர்கள். தமிழ் ஆராய்ச்சித் துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட செய்தி, தமிழ்கூறும் உலகிற்கு மகரயாழ் இசையாக, மல்லிகைப் பூவின் மணமாக, தேனருவியாகப் பெருமகிழ்வூட்டும் என்பது ஒருதலை. அவர்தம் ஆராய்ச்சி அறிவினையும், ஆராய்ச்சி உணர்வினையும் எடுத்துக்காட்ட இதோ இரு நிகழ்ச்சிகள்.

நான் 1962ஆம் ஆண்டு ஆகஸ்டு மதியம் என் பண்டாரகர் (டாக்டர்) பட்ட இடுநூலை (ஆராய்ச்சி ஏடு) சென்னைப் பல்கலைக்கழகத்தில் அளித்தேன். அளிக்குமுன், தமிழ் வளர இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற தொண்டு புரிந்த தமிழினத்தின் தானைத் தளபதி மூதறிஞர் அண்ணா அவர்களிடம் காட்டிவிட்டுப் பல்கலைக்கழகத்தில் அளிக்கலாம் என்று கருதி அண்ணா அவர்களிடம் அந்த ஆராய்ச்சி ஏட்டினைக் கொடுத்தேன். அது ஆங்கிலத்தில் ஏறத்தாழ முந்நூறு பக்க அளவில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. 'முழுவதையும் படிக்க இயலாது; முடிந்தவரை படித்துவிட்டுத் தாருங்கள் அண்ணா' என்று வேண்டிக் கொண்டேன்.

'பார்த்துவிட்டு' என்று சொன்னதை முதலில் திருத்திக் கொள்; படித்துவிட்டு என்று சொல்' என்று கூறிவிட்டு ஆராய்ச்சி நூலை வாங்கிப் படிக்கத் தொடங்கினார்.

'சங்கமும் அதன் காலமும்' என்ற தலைப்பில் உள்ள கட்டுரை அண்ணாவைப் பெரிதும் கவர்ந்தது. அந்தப் பகுதியைப் படித்து முடிந்தவுடன் அண்ணா சொன்னார் 'தமிழ் இலக்கியத்தில் காலம் பற்றிய ஆராய்ச்சி, காலன் பற்றிய ஆராய்ச்சிபோல் மூடுமந்திரமாக இருக்கிறது. இதுதான் என்று புலவர்கள் தெளிவாக. உறுதியாகக் கூறவில்லை. 'இப்படியும் இருக்கலாம்; அப்படிக் கூறுவாரும் உளர்; இப்படிக் கொண்டாலும் இழுக்கன்று' என்று கூறித் தம் பரந்த மனப்பான்மையைக் காட்டிக் கொண்டனரேயல்லாமல் ஆணித்தரமாக உரைக்கவில்லை. ஆனால் நீ சங்ககாலம் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் தொடங்கி கி. பி. 225ல் முடிவடைகிறது என்று உறுதியாகக் கூறியிருப்பது எனக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது இந்தக் காலம் பிறகு முன்பின்னாகக்கூட மாறலாம். ஆனால் தனக்குக் கிடைத்த சான்றுகளைக் கொண்டு உறுதியாக ஒன்றை நிறுவுவதுதான் ஆராய்ச்சியாளர்களின் இலக்கணமாக இருக்க வேண்டும். புலமை நிறைவும், உள்ளத் துணிவும் ஓர் ஆராய்ச்சியாளனுக்கு இரு கண்களாக இருத்தல் வேண்டும்.

'தமிழக வரலாறு தொடர்ச்சியாக முழுமையாக எழுதப்பெறவில்லை. சங்க இலக்கியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எழுதி முடித்துக் காட்டலாம் என்று நான் கருதவில்லை. அது இயலாததும்கூட. அதற்கு உதவியாக கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள், நாணயங்கள் இருக்கின்றனவா என்று தேடிப் பார்த்துக் கொஞ்சம் கிடைத்தாலும் பரவாயில்லை. அது சங்கிலித் தொடருக்கு வேண்டிய ஒரு இணைப்பாக நின்று பயன்படும். இங்ஙனம் பல இணைப்புக்கள் சேரும் போது சங்கிலியே உருவாகிவிடும். கிடைக்கும் ஒரு சான்று மின்மினியாகக்கூட இருக்கலாம். அதைக் கண்டு சோர்ந்துவிடாதே''

அந்தத் தண்டமிழ்ச் சான்றோன் கூறியது கனவு தானோ? நனவிற்கு வாராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.

அருமை அண்ணாவின் அடியொற்றி வந்த பெருமை மிகு தம்பிகள் அவர்தம் எண்ணத்தை ஈடேற்றுவதுபோல் தமிழக வரலாற்றைத் தொடர்ச்சியாக முழுமையும் எழுத டாக்டர் மு. வ. அவர்கள் சீரிய தலைமையில் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அதுவும் சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றது. இது அருந்தமிழ் அண்ணாவின் கனவை நனவாக்கும் நல்ல திட்டமாம்.

அடுத்து அண்ணா அவர்கள், பாட்டுத் தொடர்பாகக் கூறியது, என்னைப் பெருவியப்பில் ஆழ்த்தியது.

டாக்டர் எம். சுந்தரம்



SHAPE YOUR PLANS IN A CONCRETE WAY.

USE
SANKAR the quality CEMENT

SANKAR I C CEMENT

Accumulated manufacturing experience of more than two decades goes into each bag. Assures quality, strength and durability.

Conforming to ISI Specifications.

SANKAR CEMENT

INDIA CEMENTS LIMITED
MADRAS-2
Factories : SANKARNAGAR & SANKARI

For free-technical advice contact :
CEMENT SERVICE BUREAU
'The Grove', Madras-18.

Criterion-ICT 2339A

பாட்டுக்களைப் பற்றிய பேச்சு வந்த போது அண்ணு சொன்னார்:

'செய்யுள் உறுப்புக்களில் சிறந்தது 'நோக்கு' என்று புலவர்கள் கூறுகிறார்கள். அகநானூற்றில் முதல் பாட்டாகிய முல்லைத் திணைப் பாட்டில் இரு 'நோக்கு' இலக்கியம் அமைந்திருப்பதாக அனைவரும் பாராட்டி வருகின்றனர். இந்த 'நோக்கு' சங்கப் புலவர்களோடு நின்றுவிட்டதா? நோக்கு(எனக்கு ஒன்றும் இல்லையா? என்று நாம் குறைபடும் அளவிற்கு இந்த நூற்றாண்டில் ஒரு கவிஞர் பாட்டில் கூடவா 'நோக்கு' என்ற அழகு இல்லை? அதைத் தேடிப் பார்க்க வேண்டும். தேடியும் தென்படாவிட்டால், புதிய படைப் பொன்றை உருவாக்க வேண்டும்,' என்று இலக்கியச் சுவையோடு கூறினார்கள்.

அண்ணு கூறியதைக் கருத்தில் வைத் துக் கொண்டு சில பாட்டுக்களை ஆராய்ந்து பார்த்தேன். அவற்றில் நோக்கு இல்லை; வேறு போக்குத்தான் தென்பட்டது.

கலைஞர் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் கவியரங்க மேடையில் வலக்காலை முன் னெடுத்து வைத்து வந்தார். இயற்கைப் புலமையும், இலக்கிய உணர்வும் நிறைந்த அவர்தம் பாக்களில் ஒருவேளை இந்த'நோக்கு அமைந்திருக்குமா, பார்க்கலாமே' என்ற விருப்பம் எழுந்தது.

கலைஞர் பல புதிய துறை, திணைகளை உருவாக்கினர். அவற்றில் சிலவற்றில் அவ ரையும் அறியாமல் 'நோக்கு' என்னும் செய் யுள் அழகு இடம்பெற்றது. அவர் தமிழ வேள்; ஆதலால் அவரையும் அறியாமல் தமிழ் அழகு அவர் பாடலில் இடம்பெற்று விட்டது.

அன்று சொன்னது இன்று கலைஞர் பாட்டால் நிறைவேறியது என்பதை எண் ணும்போது அண்ணுவின் தொலை நோக்கைப் (தீர்க்க தரிசனம்) பாராட்டுவதா? அண்ணு வின் விருப்பத்தைக் குறிப்பால் அறிந்து நிறைவேற்றிய அவர்தம் அருமைத் தம்பி தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்களின் புலமை நலத்தைப் பாராட்டுவதா? இரண் டையுமே பாராட்டுவதுதான் ஏற்புடைத் தாகும்.

என்னைப் பொறுத்தவரையில், கால ஆராய்ச்சியில் கண்ணொளி நல்கி, செய்யும் ஆய்வில் ஆற்றுப் படை பாடிய அண்ணு வின் ஆசான் திறத்தை நன்றி நிறைந்த கண்களோடு என்றும் நோக்கிக் கொண்டி ருக்கிறேன்.

அவர் கூறிய மொழிப்படி என் ஆராய்ச் சிப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டி ருக்கிறேன் என்று கூறிக் கொள்வதால் பெருமிதமும், பெருமகிழ்வும் கொள்கிறேன்.

★

அண்ணை ஒரு தாய்

அமைச்சர் கண்ணப்பன்

குடும்பப் பாசத்தோடு லட்சோப லட்சம் தம்பிமார்களை இயக்கத்தோடு இரண்டறக் கலக்க வைத்தவர் அண்ணை! ஒரு இயக்கத்தை குடும்பப் பாசத்தோடு நடத்திச் சென்ற ஒரு தலைவனை இந்த இரு நூற்றாண்டு வரை எந்த வொரு வரலாறும் நமக்குச் சுட்டிக் காட்டவில்லை!



அரசியல் வானிலே விடிவெள்ளியாகத் திகழ்ந்த அண்ணை—தமிழ் மக்கள் உளமெல்லாம் நிறைந்திருக்கின்ற அண்ணை அவர்கள் தாய்ப்பாசத்தோடு நடந்து கொண்ட நிகழ்ச்சி இன்றும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கின்றது!

பிள்ளையிடம் தாய் கோபப்படும் போது குழந்தையைக் கடிவதும், பின் கோபம் தணிந்த பின் குழந்தையை கொஞ்சுவதும், கண் கலங்கிய பிள்ளையை வாரி அணைப்பதுவும் தாய்ப்பாசம்! அதுதான் தாய் உள்ளம்! அதே போல் அண்ணை அவர்களும் ஒரு தாயைப் போலக் கழகத் தோழர்களிடமும் நடந்துகொண்ட நிகழ்ச்சிகள் பல உண்டு.

அண்ணை அவர்கள் 1966ல் தேர்தல் நிதி திரட்டக் கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்தபோது இப்போதையப் பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் உடுமலைப் பேட்டைப் பகுதியில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வரும் அண்ணை அவர்களைத் தாக்கசதி செய்த ஆலை முதலாளி தி.மு. கழகத் தொழிலாளர்களைப் பழி வாங்கும் நோக்கத்தோடு அவரது ஆலையை மூடிவிட்டார்.

தொழிலாளர்கள் அநியாயமாகப் பழி வாங்கப்படுவதை கண்டிப்பதோடுவிரைவில் மில்லைத் திறந்திட வழி வகை செய்ய வேண்டும்என்ற நோக்கத்தோடுமறைந்தநாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் உடுமலை நாராயணன் அவர்கள் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதத்தைத் துவக்கினர். அண்ணை அவர்கள் அறுவைச் சிகிச்சைக்காக அமெரிக்க சென்று சிகிச்சை நல்லபடியாக முடிந்து தமிழகம் திரும்பிட இரண்டு நாட்களே இருந்தன.

அமெரிக்காவிலிருந்து அண்ணை அவர்கள் வந்து சேர்ந்த அடுத்த நாள் நாராயணன் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதறிந்து உண்ணாவிரதத்தை விட்டு விடுமாறு தந்தி கொடுத்தார்கள். ஆனால் நாராயணன் அவர்கள் பிரச்னைக்குத் தீர்வு காணாமல் உண்ணாவிரதத்தை நிறுத்த மாட்டேன் என்று கூறிவிட்டார்.

இதற்குப் பிறகு நிலைமைகளை எடுத்துச் சொல்லிட நானும், கோவை மாவட்ட சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், கழக நண்பர்கள் சிலரும் சென்னை வந்து அண்ணை அவர்களைக் காண அவர் இல்லத்திற்குச் சென்றோம்.

அண்ணை அவர்கள்மெலிந்த தேகத்தோடு, வெற்றுடம்பில் துண்டு ஒன்றைப்போர்த்திக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். உடன் கலைஞர் அவர்களும் இருந்தார்கள்.

அமெரிக்கா போகு முன் அண்ணை எப்படி இருந்தார்! இப்போது எப்படி இருக்கிறார்! அதை எண்ணிப் பார்த்து அண்ணை அவர்களை பார்த்ததும் நானும், உடன் வந்தவர்களும் கண் கலங்க நின்றோம்.

என்னைப் பார்த்த அண்ணை அவர்கள், 'என்ன' என்றுகேட்டார்.

தயங்கித் தயங்கி' ஒன்றுமில்லை,' என்றேன்.

'ஒன்றுமில்லாமல் வரமாட்டாயே, சும்மா

சொல்' என்றார்கள். அப்போதே அவர் குரலில் கோபம் இழையோடியது தெரிந்தது!

'வந்து... நாராயணன் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார் அது பற்றி...' என்றேன்.

பதினெட்டாண்டு காலத்தில் அண்ணா அவர்களுக்கு இப்படிக் கோபம் வந்து நான் பார்த்ததேயில்லை.

'நான் ஒருத்தன் செத்தேனா பிழைத்தேனா என்று கூடப் பாக்காமல் அங்கே உண்ணாவிரதம் இருக்கிறான்! அதை சாக்கிட்டு நீங்க எல்லாம் வந்திருக்கீங்க!' என்று கோபத்தோடு தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார்.

சிகிச்சைப் பெற்று வந்த அண்ணா அவர்கள் அதிகமாகப் பேசக் கூடாது என்று மருத்துவர்கள் கூறியிருந்தார்கள். இருந்தும் அண்ணா அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். உடன் இருந்த கலைஞர் அவர்கள், 'அண்ணா நாளை இதுபற்றி பேசிக் கொள்ளலாம். அதிகமாகப் பேசக் கூடாது' என்றார். ஆனால் மேலும் அண்ணா அவர்கள் பேசிக் கொண்டே இருந்தார்கள். நாங்கள் எதிரில் இருந்தால் மேலும் பேசுவார்கள் என்பதால், கலைஞர் அவர்கள் வெளியே போகும்படி சாடை காட்டினார்கள். நாங்கள் வெளியே வந்து விட்டோம்.

அன்று இரவு கலைஞர் அவர்களை முரசொலி அலுவலகத்தில் நானும் உடன் வந்த நண்பர்களும் சென்று பார்த்து நிலைமைகளைச்சொன்னோம். கலைஞர் அவர்கள் அண்ணா அவர்களுடன்அடுத்த நாள் காலை பேசி ஆவன செய்வதாகக் கூறினார்கள்.

கலைஞர் அவர்கள் மறுநாள் அண்ணா அவர்களிடத்தில் பேசி பிரச்னையை தீர்த்துக் கொள்ளலாம் என்றும்,பேச்சுவார்த்தையில் தொழிலாளர்களுக்கு கிஞ்சித்தும் பாதகம் நேராது என்றும் கூறினார்கள். உண்ணா விரதத்தை முடித்து வைத்திட இப்போதைய பொதுப்பணி அமைச்



அண்ணனின் பெருந்தன்மை

''காங்கிரஸ்காரர்கள் கூட — குறிப்பாகக் காமராசர் எங்களுக்கு நல்ல ஆலோசனைகளை கூறினால் வரவேற்கத் தயாராயிருக்கிறோம்.

தேர்தலைக் களமாக்கிப் போர் புரிந்தோம் அதை மறந்துவிட்டு ஒரு அண்ணனைத் தம்பி கேட்பது போல அவரைக் கேட்கிறேன், 'ஆலோசனை, கள் தாருங்கள்என்று!

பாகப் பிரிவினை நடந்த பிறகு பழையதை மனதில் வைக்காமல் — தம்பியின் வீட்டுக்கு வந்து, ''இதை இப்படிச் செய்யலாம்; அதை அப்படி செய்யலாம்'' என்று அண்ணன் யோசனை கூறினால் தான் அந்தக் குடும்பத்தைப் பண்புள்ள குடும்பம் என்று உலகம் ஏற்றுக் கொள்ளும்.''

— அறிஞர் அண்ணா

சர் சாதிக்பாட்சா அவர்களை உடன் விமானம் மூலம் அனுப்பி வைத்தார்கள்.

உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட அடுத்த நாள் நாராயணன் அவர்களுடன் நானும் அண்ணா அவர்களைக் காண வந்தேன். நாங்கள் அண்ணாவின் வீட்டிற்குப் போனபோது அவர்கள் மாடியில் இருந்தார்கள். உடல் நலமின்றி நாராயணன் அவர்கள் வந்திருப்பதை அறிந்து, படியேறி மாடிக்கு வந்தால் அண்ணன் நாராயணனுக்கு களைப்பு மிகுதியாகுமே என்று எண்ணிய அண்ணா 'நானே கீழே வருகிறேன் உடல் நலமின்றிருப்பவன் மேலே வர வேண்டாம்' என்று கூறி அவர் உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் கீழே வந்தார்கள். வந்ததும் 'உடல் நிலை எப்படி இருக்கிறது?' நீ உடம்பை நன்றாகப் பார்த்துக் கொள். மற்றவற்றை நான் கவனித்துக் கொள்கிறேன்.' என்று கனிவோடு கூறினார்கள். அப்போது கோபமில்லை, பாசம் மிகுந்திருந்தது. என்னுடனும் பாசத்தோடு நிலைமைகளைக் கேட்டறிந்து ஆவன செய்வதாகக் கூறினார்கள். அதே போல் செய்தார்கள்.

ஒரு தாய் தான் உடல் நலமின்றி இருந்தாலும் பெற்ற குழந்தைக்கு ஒன்று என்றால் தன் உடல்நிலையைப் பொருட்படுத்தாமல் மகனுக்கு வேண்டியதைச் செய்கின்றாளே அதைப்போல அண்ணா அவர்களை தாய்ப் பாசம் மிக்க தலைவராக அன்று கண்டேன்.

பாசம் மிக்கதொரு அண்ணனை இழந்து நாம் இன்று தவிக்கின்றோம்! ஏன்...தாய் பாசமிக்க தலைவனை இழந்து தமிழகமே இன்று தவிக்கின்றது. இல்லை, இல்லை; கலைஞர் உருவில் அண்ணாவின் பாசம் நம்மை ஆட்படுத்திக் கொண்டுள்ளது.

★

தமிழ் வாழ்க!



பன்மொழிப் புலவர்

கா. அப்பாத்துரையார்

அ—

புதிய தமிழக வரலாற்றில் தந்தை பெரியார் ஒரு விடிவெள்ளி. வான்புகழ் அறிஞர் அண்ணாவின் வாழ்வு அதில் ஓர் எழு ஞாயிற்றின் எழில்வான வண்ண ஒளி. தமிழக முதல்வர் டாக்டர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதியுடனிருந்து அவ்வண்ண ஒளியில் குளிக்கும் பேறுடையவர்களுக்கு அந்த அமுதப் பொன் வண்ண ஒளியிலும் சிறந்த வரலாற்றுப் படிப்பினை கிடையாது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியை நாம் அறிஞர் அண்ணா ஊழி என்றே கூறலாம். எனது தமிழியக்கப் பணி காரணமாக நான் இவ்வூழியின் பல கட்டங்களிலும் அறிஞர் அண்ணா அவர்களுடனும் பிற அறிவியக்க ஒளிகளுடனும் அடிக்கடி தொடர்பு கொள்ள நேர்ந்ததுண்டு; அவை என் வாழ்வில் மாளாத் தொடர்புகள், ஒளியூட்டும் தொடர்புகள் ஆகும். வான்புகழ் டாக்டர் அறிஞர் அண்ணா அவர்களின் பண்பொளிகளும் உரையாடற் கருத்தொளிகளும் அவற்றிடையே பொற் சலாகைகளாக மிளிர்வன ஆகும்.

அண்ணா அவர்களைப் பற்றிய என் நினைவுகளில் நான் மறுக்க முடியாத ஒன்று, அவர் சிறு குழந்தைகளுடன் குழந்தையாக இருந்து விளையாடும் காட்சி ஆகும். அவரைப் பார்க்கப் புண்ணிய யாத்திரை மேற்கொண்டு காஞ்சிக்குச் சென்று முயன்று அவரைப் பேட்டி காணும் அறிஞர்கள், பெரியார்கள் பலர். அறிஞர் தேடும் அந்த அறிஞர் தாம் ஓர் அறிஞர் என்பதை முற்றிலும் மறந்து, குழந்தைகளிடையே ஒரு குழந்தையாய் விடுவது கண்டு எவரும் இனிய வியப்பார்வம் கொள்ளாமலிருக்க முடியாது. குழந்தைகள் மொழி என்று உலகில் ஒரு தனி மொழி இருக்குமானால், அதில் ஓர் ஒப்பற்ற தனிப் பெரும் புலவர் அறிஞர் அண்ணா என்றே கூறலாம்!

அறிஞர் அண்ணா பண்பென்னும் குன்றேறி நின்ற ஓர் ஒளி விளக்கம் ஆவார். எதிர்ப்பவர்களை நண்பர்களாகவே வரவேற்கும் தூய பண்பினை நாம் அவரிடம் காண்பது போல வேறு எவரிடமும் காண முடியாது. எதிர்ப்பாளர்களே இதனை நன்கு அறிந்து அடிக்கடி பயன்படுத்தக்கூடத் தவறவில்லை. ஒரு தடவை ஒரு பெரிய நடிகர் தொடர்ந்து பல கூட்டங்களில் அறிஞர் அண்ணாவை இழித்தும் பழித்தும் பேசியதைப் பத்திரிகைகளில் படித்து மனம் புண்பட்டிருந்தேன். ஆனால் காஞ்சியில் அறிஞர் அண்ணா அவர்கள் இல்லத்துக்கு நான் சென்றிருந்தபோது, அவ்வாறு பேசியவரே அண்ணாவைக் காண வந்தார். அண்ணா அவரை அரவணைத்து அருகமர்த்தி அளவளாவிக் கொண்டிருந்தார். அதனிடையே சிரித்துக் கொண்டே, 'என்னைப் பற்றி என்னென்னவோ பேசியதாகக் கேள்விப்பட்டேனே! எப்படி மனம் வந்தது, அவ்வாறு பேச!' என்று அண்ணா கேட்டார்.

'ஏதோ உங்களைப் புகழ்ந்து சிலர் பிழைக்கிறார்கள். திட்டியே பலர் பிழைக்கிறார்கள். நல்ல வழி, பிந்திய வழிதான் என்பதை நான் அறிந்து கொண்டிருக்கிறேன். எல்லாம் நேரில் கண்டால் சொல்லிக் கொள்ளலாமே என்றுதான் இப்படி வந்தேன்' என்றார் அவர்.

'காரசாரமாகத் திட்டுபவருக்குக் காரசாரமாகவே காப்பி கொண்டு வந்து கொடு' என்று அண்ணா புன்முறுவலுடன் தன் மகன் பரிமளத்தை அழைத்து உத்தரவிடுவதுகண்டு நான் வியப்பும் மகிழ்வும் ஒருங்கே கொண்டேன். உண்மையில் அந்நாட்களிலெல்லாம் அண்ணாவைப் புகழ்பவர்களுக்கு இகழும் இடரும், திட்டுபவர்களுக்கு வாழ்வு என்ற நிலை இருந்து வந்தது.

இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் புலவர்க்குப் புலவா, கட்சிக்குக் கட்சி காழ்ப்பு மிகுதி. தமிழர்களே நெல்லிக்காய் மூட்டைகள் என்று அன்று தமிழ்த் தலைவர் களே வருணிப்பதுண்டு. அறிஞர் அண்ணு ஊழியில் இது பெரிதும் மாறிவிட்டது. புல வர்கள் ஒரு குடும்பம், அரசியல் கட்சிகள் கூட ஒரு தாயாதிக் குழாம் என்ற நிலை ஏற்பட்டது. இதற்கு அறிஞர் அண்ணு அவர்களின் பண்பே பெரிதும் காரணம் என்பதை நான் அறிவேன். அவர் முயற்சி யால் பல அனைத்துத் தமிழர் மாநாடுகள், பல அனைத்துக் கட்சிப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. மாற்றுரையும் மதித்துப் பாராட்டும் அவர் பண்புக்கு அவரையே உவமையாகக் கூற வேண்டும், வேறுஉவமை கூற முடியாது.

கவிஞர் பாரதிதாசன், நாவலர் சோம சுந்தர பாரதியார் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கோவை முத்தமிழ் மாநாடு அறிஞர் அண்ணுவின் ஒப்பற்ற கைவண்ணத் தின் ஒரு விளைவேயாகும்.

அறிஞர் டாக்டர் அம்பேத்காரின் இந்து மதச் சட்டத் தொகுப்பியக்கத்தின்போது தமிழகப் பெண்கள் மாநாடு, சமீன் இனம் ஒழிப்பு ஆதரவுக்கான அனைத்துக் கட்சிப் போராட்டம் ஆகியவற்றையும் இதற்கு எடுத் துக்காட்டுகளாகக் கூறலாம். காலஞ் சென்ற பொது உடைமைக் கட்சித் தலை வர் ப. சீவானந்தம், தமிழரசுக் கழகத் தலை வர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி., கட்சி சாராத் தமிழ்த் தலைவர் இன்னும் இவர் கள் போன்ற எண்ணற்ற பலரும் அண்ணு வின் இப்பண்பொளிக்கு இலக்காகி, கதிரவ னால் ஈர்க்கப்பட்டு நிலவுலகை அணுகி வந் துள்ள வால்வெள்ளிகள் போன்றவர்கள் ஆவார்கள்.

அண்ணு அவர்கள் இயக்கப் போராட்டங் களின்போது அவர் இயக்கத் தொண்டர்கள் மீது கல்லெறிந்த கூட்டங்களின் தலைவர் பலர் அவர் பண்பாலும் அவர் இயக்கத்தி னர் பண்பாலும் கவர்ந்தீர்க்கப்பட்டு அவர் இயக்க முன்னணி வீரர்கள் ஆகியுள்ளனர்!

அத்தகையதொரு முன்னணித் தலைவரை அண்ணு அணியில் வரவேற்றுப் பாராட்டும் கூட்டத்தில் என் தலைமையில் அறிஞர் அண்ணு அவர்கள் பேசும்போது, பன்மொழி வரவேற்கிறது; தென்மொழி சார்பாக நான் வரவேற்கிறேன் என்று தமக்கே உரிய நகைத் திறத்துடன் குறிப்பிட்டார்.

அண்ணு பகைவரை வென்றவரல்லர்: பகைமையை வெல்பராவர்.

ஃ ஃ ஃ

தலைவர்களே, தளபதிகளைத் தொண்டர் புகழ்வதுண்டு. அறிஞர் அண்ணு, டாக்டர் கலைஞர் போன்ற தலைவர்கள் பண்பொளி யில் குளித்த கவிஞர்கள் அவர்களைப் பாடு வதும் இயல்பே. ஆனல் அறிஞர் அண்ணு அவர்களின் இயக்கத் தம்பி தங்கையர் களுக்கு, தொண்டர்களுக்குக் கிடைத்த ஒரு பேறு வேறு எவருக்கும் எளிதில் கிடைக்க முடியாத ஒன்று ஆகும். ஏனெ னில் அவர்கள் புகழை முதல் முதல் காவிய மாக்கிப் பாடியவர் வேறு யாருமல்லர் அறி ஞர் அண்ணு அவர்களே!

அண்ணு அவர்களின் கைவண்ணந் தாங் கிய 'திராவிட நாடு' மற்றப் பத்திரிகை களைப் போல ஒரு பத்திரிகையன்று. ஏனெ னில் அதில் அறிஞர் அண்ணு தம் தம்பி தங்கையர் பெரும்பாலோரைப் பொதுவாகச் சுட்டியும், சில சமயம் அணியணியாகப் பெயர் சுட்டியும் சுட்டாமலும் பெருமித உணர்வுடன் பாராட்டி வரைந்த காப்பிய வருணனைத் தொகுதிகள் பலவற்றைக் காண லாம்.

திராவிட இயக்கத்தவர் பலர், என் போன்ற அதன் மொழித்துறை ஆர்வலர் கூட, அண்ணு என்னை இவ்வளவு புகழ்ந்து விட்டாரே, இனி நான் அத்தகுதியை எப் படியாவது மெய்ப்பித்துவிட வேண்டுமே என்று கிளர்ந்தெழுந்து தமிழகத்துக்குப் புது வாழ்வளிக்கத் தோள் தட்டி எழுந்துள்ள தில் வியப்பில்லை எனலாம்!

'தம்பிக்கு' என்ற மகுடத்தில் அவர் நேரடியாக உள்ளம் தொட்டுத் தடவி அனைத்த தம்பி தங்கையர் எத்தனை பேர்! அவர் வலுவிழந்து இறுதி நோய்ப் படுக்கை யிலிருந்த சமயத்தில் கூட, அவர் எழுத்துக் கள் சாவாப்பாசத்தின் வலுவுடையவை யாகத்தான் இருந்தன என்னல் வேண்டும்.

திராவிட நாடு எழுத்து மூலங்கள் புத்தக மாக வெளியிடப்பட்டால், அவை வருங் காலத்தில் ஐந்து கண்டங்களும் போற்றத் தக்க தமிழ் இலக்கியப் பகுதிகளாக விளங் கும் என்று உறுதியாகக் கூறலாம்.

ஃ ஃ ஃ

எனது புதல்வி திருமதி மல்லிகை—கண் ணன், டாக்டர் கலைஞர் கருணநிதி அவர் கள் தலைமையிலேயே திருமணம் செய்து கொள்ளும் பேறு பெற்றவர் ஆவர். அது மட்டுமன்று. மாண்புகழ் அறிஞர் அண்ணு அவர்களாலேயே குழந்தைப் பருவத்தில் பெயர் சூட்டப்படும் பேறும் அவருக்கு உண்டு. அவ்விழாவன்றைக்கே திருவல்லிக் கேணி கடற்கரையில் அண்ணு அவர்கள் தலைமையில் கூட்டமும் அமைத்து என் வீட்டில் மூவேளையும் விழா விருந்தாக அறி ஞர் அண்ணு அவர்களையும் பிற தம்பி மாரையும் அழைத்திருந்தோம். அண்ணு கூட்டத்துக்கு வந்தார். மூவேளை விருந்தை

யும் எல்லாரும் சாப்பிட வைத்துவிட்டு, தான் இரவில் கடைசியாகவே வந்து கலந்து கொண்டார். இதற்கு அவர் கூறிய காரணம் 'பழைய நண்பர் வீட்டில் பழய அமுது சாப்பிடுவதுதான் முறை' என்பதே!

அண்ணு அவர்கள் காலங்கடந்து வந்ததனால் என் குடும்பத்தினருக்கு இருந்த மனக் குறையை அவர் சொல்லிய சொல்லும், சொல்லிய முறையும், தொனியுமே மாற்றி விடுவதாயிருந்தது.

இனிய சொற்கள், அன்பொளி கலந்த நகைச்சுவை ஆகியவற்றினால் பகைவரையே வெல்லும் திறமுடைய அண்ணு, நண்பர்களை இவ்வாறு வெல்வதில் ஒரு சிறிதும் வியப்பிருக்க முடியாதன்றே!

ஃ ஃ ஃ

அறிஞர் அண்ணு அவர்களின் ஏடுகள், கட்டுரைகள் அல்ல, மேடையுரைகள், நாடகங்கள் கூட அல்ல, அவர் பொதுநிலை உரையாடல் வாசகங்களே கூட கலையாக, இலக்கியமாக, அரசியல் தத்துவமாக விளங்கத்தக்கவை.

காஞ்சிபுரம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட எனது துணைவியார் திருமதி அலமேலு அப்பாத்துரையுடன் நானும் சென்றிருந்தேன். அச்சமயம் என் குடும்பத்தினர் உட்பட, இயக்கத் தொண்டர்கள் யாவரும் அரசினரின் தடையுத்தரவை மீறி மக்கள் உரிமைக் குரலை நிலைநாட்ட வேண்டுமென்று அண்ணு ஆணையிட்டிருந்தார். கிட்டத்தட்ட அனைவருமே அவ்வாறு செய்து உரிமை நாட்டினர். நாவலர் மட்டும் அதில் ஈடுபடாமலிருந்தார். இளந்தொண்டர் பலர் இதனை உரத்த குரலெழுப்பி அப்பொதுக் குழுவில் கண்டித்தனர்.

நாவலர் இதற்கு விடைகூறுமுன் அண்ணுவே எழுந்து பேசினார். 'தம்பி நாவலர் தடை மீறுததற்குக் காரணம்— அத்தவறுக்குக் காரணம் அவரல்லர், நான் தான். எல்லாரும் தடை மீறினால், இயக்கத்தின் ஆக்கப் பணியைக் கவனிப்பதற்கு ஆள் வேண்டுமே என்று நான்தான் அவரைத் தடைமீற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன்' என்றார் அவர்.

தொடர்ந்து அவர் கூறிய வாசகம் அரசியலில் ஒரு புதுமைத் தத்துவம் ஆகும்.

'தம்பி நாவலர் பேரில் குற்றமில்லை என்று நான் விளக்கம் கூறிவிட்டேன். ஆனால் என் கட்டளையை மீறி, நாவலர் அன்று செயலாற்றியிருக்கக் கூடும். அவருக்கும் அந்தத் துடிப்பிருந்ததை நான் அறிவேன். என் சொல்லை மீறக் கூடாது என்ற உறுதியில் அவர் கட்டுப்பட்டிருந்தார். ஆகையால் தவறு என்னுடையது' என்றார்.

ஃ ஃ ஃ

மலை குலைந்தாலும் நிலை குலையாத அண்ணுவின் மன மாண்பையும், இயக்கத் தம்பி தங்கையரிடம் அவர் கொண்ட மாறுப் பாசத்தையும் காட்டும் நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

'ஆதி'-நட்டம்



29—2—1948 அறிஞர் அண்ணு அவர்கள், சிவகங்கையில் சுயமரியாதை வீரர் இராமச்சந்திரனார் நினைவுப் பூங்காவைத் திறந்து வைத்துப் பேசினார்கள். அப்பொழுது அண்ணு அவர்களிடம் ஒருவர்,

"இது திராவிடர் கழகம்தானே, அதில் ஆதி திராவிடர்கள் எப்படிச் சேர முடியும்? சேர்ந்தால் ஏற்படும் இலாபம் என்ன?" என்ற கேள்வியை எழுதிக் கொடுத்தார். அதற்கு அண்ணு அவர்கள்,

"ஆதி திராவிடர்கள் திராவிடர் கழகத்தில் சேர்ந்தால் இலாபம் ஏற்படாது. நட்டம்தான் ஏற்படும். அது என்ன நட்டம் என்றால், அவர்களிடமுள்ள ஆதி திராவிடர் என்ற சொல்லிலுள்ள "ஆதி" என்ற சொல் அவர்களுக்கு நட்டமாகி திராவிடர் என்ற சொல்லுடன் திராவிடராகி ஐக்கியமாகிவிடுவர்" என்று அழகாகப் பதிலுரைத்தார்.

தகவல்- ச. இன்பநாதன்.

1962–வது ஆண்டுப் பொதுத் தேர்தல் விளைவுகள் வெளிவந்து கொண்டிருக்கும் சமயம், அறிஞர் அண்ணாவின் இயக்கத் துணைவர் பலரைப் போலவே நானும் என்குடும்பத்தினரும் தோல்விகள் கண்டு துடித்தோம். அன்று அறிஞர் அண்ணா அவர்கள் வெற்றி பெறவில்லை என்று கண்டபோது வானமே இடிந்து விட்டதாக உணர்ந்து துவண்டோம். அந்நிலையில் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பக்கத்திலிருந்து அவர் துயர் தடுத்தாள வேண்டுமே என்ற எண்ணம் உந்த, நான் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியார் இல்லத்திலிருந்த அண்ணாவைக்காண விரைந்தேன்.

அன்று நான் அண்ணாவுக்கு ஆறுதல் கூறவில்லை; கூறத் தேவையும் இல்லை. அவர் முகத்தில் எந்த வாட்டமும் காணவில்லை. அவர்தான் என் முகவாட்டம் கண்டு, முக மலர்ச்சியுடன் எனக்கு ஊக்கமும் மகிழ்வும் தர முனைந்தார்.

'நானும் தம்பிமார் சிலரும் தோல்வியடைந்தது ஒரு கண்கழிப்பு மட்டும்தான். நாம் தும்பை இழந்து விட்டோம் என்று மாற்றூர்கள் கும்மாளமிட்டுக் கொள்ளட்டும். மாடு புதுவேகத்துடன் நம் கொட்டிலுக்குள் வருவது கண்டு நாம் மகிழ்வோம்' என்று கூறி அவர் எனக்கும் நடிப்பிசைப் புலவர்க்கும் புத்தூக்கம் அளித்தார்.

அவர் கூறியபடியே அத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பழைய 12 இடங்களில் பலவற்றை இழந்தாலும், புதிதாக 50–க்கு மேற்பட்ட இடங்களைப் பெற்றது என்பது யாவரும் அறிந்ததே!

தம்பியர் திலகமாகிய கலைஞர் மு. கருணாநிதியும் பிற தம்பியர்களும் அடைந்த வெற்றி மகிழ்வில் அறிஞர் அண்ணா தம் தோல்வியைத் தாம் முற்றிலும் மறந்தது மட்டுமின்றி, என்போன்ற நண்பர்களையும் பேரளவு மறக்கடித்து விட்டார் என்பதை நாங்கள் அறிந்து கொள்ளப் பலநாள் பிடித்தது.

ஃ ஃ ஃ

இயக்க நாடகங்களில் நடிகருடன் நடிகராக இருக்கும்போதும், இயக்க மாநாட்டுப் பந்தல் கட்டுமிடங்களில் தொண்டர்களுடன் தொண்டராக அளவளாவிப் பேசும்போதும், ஏடுகளிலும், மாநாடுகளிலும் எளிதில் அடிபடாத அனுபவத் தத்துவங்களையெல்லாம் நாம் அறிஞர் அண்ணாவின் நகையுரைகளில் கேட்கலாம்.

இவற்றில் ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

அகலாது அணுகாது தீக்காய்வார்போல்க.
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்.

அரசரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அமைச்சருக்குத் திருவள்ளுவர் பெருமான் கூறும் அருமையான அறிவுரை இது. டாக்டர்ம் கலைஞர் அவர்கள் கட்டுரைகளிலும், டாக்டர் நாவலர் அவர்கள் மேடையுரைகளிலும் இதன் பொருள் விளக்கங்களை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். ஆனால் மாநாட்டுப் பந்தலுக்குரிய மணல் பரப்பிலிருந்து கொண்டு ஒளி திகழும் ஓர் இன்முகம் இதற்கு ஒரு புதிய குடியாட்சிக் காலப் பொருளே கண்டு கூறிற்று!

'மக்களிடம் அகலாது நெருங்கிப் பழகியவர்களுக்குத்தான் அவர்கள் கட்டநட்டங்கள், தேவைகள் தெரியும். ஆளுபவர்கள் அப்படிப் பழகியவர்களாய் இருக்க வேண்டும்.

'அதே சமயம் மக்களை அளவு மீறி அணுகி விடாமலும் இருக்க வேண்டும். மக்கள் விரும்புவதையே ஆளுபவரும் விரும்பி விடக் கூடாது. மக்கள் நல்வாழ்வை விரும்புவார்கள். ஆளுபவர் தம் நல் வாழ்வை விரும்பக் கூடாது. மக்களுக்கு நல்வாழ்வைக் கொடுத்து, அவர்கள் கொடுக்கும் புகழை மட்டும்தான் விரும்ப வேண்டும்.

உண்மையான குடியாட்சியில் நல்லாட்சியாளருக்குத்தான் தொல்லை மிகுதி. இதுவே குடியாட்சியின் அரிச்சுவடி என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் காற்றுவாக்கில் தந்த வள்ளுவ விளக்கம் காட்டிவிடுகிறது.

அறிஞர் அண்ணா அவர்களின் மணல் மேட்டுரைகளில் இன்னொன்று சட்ட இயல் பற்றியது.

'குடியாட்சியில் சட்டங்கள் அரசினால் அரசுக்காக இயற்றப்படுகின்றன. அத்துடன் அவை அரசு வேண்டும்போது பயன்படுத்துவதற்காகவும், வேண்டாதபோது மறக்க விட்டு விடுவதற்காகவும் இயற்றப்படுகின்றன. அத்துடன் அவ்வாட்சியில் சட்டம் இயற்றுபவர்களைச் சட்டம் கட்டுப்படுத்தாது. ஆனால் குடியாட்சியில், சிறப்பாக மக்கட் குடியாட்சியில் சட்டங்கள் மக்களால், மக்கள் நலத்துக்காக இயற்றப்படுகின்றன. அவை இயற்றப்பட்ட பின் எல்லா இடத்திலும், எல்லாக் காலத்துக்கும் எல்லார் மீதும் ஒரே சரிசம நிலையில் கட்டாயம் செயலுறுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் மக்களாட்சியில் சட்டம் மக்களை மட்டுமின்றி ஆட்சியையும் கட்டுப்படுத்துவது ஆகும்'.

திருவள்ளுவரைத் தமிழன்னை ஈன்று உலகுக்கு அளித்ததாகக் கவிஞர் பாரதியார் கூறுகிறார். அறிஞர் அண்ணாவை உலக அன்னை ஈன்று தமிழகத்துக்கு அளித்ததாக நாம் கருதலாகும். ஏனெனில் அவர் தமிழகத்துக்குக் கிடைத்த அரும்பெறல் உலக அறிஞர். அவர் புகழ் தமிழகம் கடந்து உலகில் பரவத் தொடங்கிய சமயத்திலேயே உலக அன்னை அவரைத் தன்பால் ஈர்த்துக் கொண்டாளென்று தோற்றுகிறது.

அவர் விட்டுச் சென்ற உலகப் புகழ் அவர் கலையினங் குரிசிலான டாக்டர் கலைஞரை வளந்தந்து வளர்த்து வாழ்விக்குமாக!

அண்ணா வழியில்



ஏ.பி. சுஜர்த்தனம் எம்.எஸ்.சி.

நான் அண்ணாவை 1937—ல் சென்னையில் முதன் முறையாகச் சந்தித்தேன். அப்போது எனக்கு வயது 17. அன்று காட்டிய அதே பரிவு, பாசம் இறுதிவரை குறையவில்லை. படிக்கத் தூண்டுவார். வாதாடத் தூண்டுவார். எழுதத் தூண்டுவார்.

இயக்கம் எப்படிப்பட்டது, நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எதிரிகளை எப்படிச் சமாளிக்க வேண்டும், என்பதை நடக்கும்போது, இரயிலில் செல்லும்போது, தங்கியிருந்த விடுதிகளில், கடல் மணற்பரப்பில், வீட்டுத் திண்ணையில், கூட்ட மேடையில் அறிவுறுத்தியபடியிருந்தார்.

அண்ணா வருமையில் வாடிய நாட்கள். கொஞ்சம் பணம் இருந்தால் கூட்டம் போட்டு எதிரிகளுக்குக் கசையடி தரலாம் என்று ஏங்கிய நாட்கள். சென்னை முழுதிலுமே ஒரு பத்து உறுதியான சுயமரியாதைத் தோழர்களிடம் பழக்கம். நிறையப் படித்து சிந்தித்தபடியிருந்தார். காங்கிரசார் கொடிகட்டிப் பறந்த நாட்கள்.

மெல்ல மெல்ல அண்ணாவுக்கு செல்வாக்கு ஏற்பட்டது. முதல் இந்தி எதிர்ப்புப்போரில் அவரது நாவன்மை நாட்டைக் கவர்ந்தது. 'விடுதலை' தலையங்கங்கள் விழிப்பை ஏற்படுத்தின.

1942—ல் 'திராவிட நாடு' வெளிவந்தது. அடிக்கடி காஞ்சி செல்வேன். அண்ணா இரவு நேரங்களில் 'கலிங்கராணி' கதை அமைப்பைச் சொல்லுவார். 'சந்திரோதயம்' ஒத்திகைகள் பார்ப்பேன். தோழர் சி. வி. இராசகோபால் நடிப்பு சிரிப்பு விருந்து. தோழர் சி. வி. எம். அண்ணாமலை அசல் ஆசிரியர் போல் நடிப்பார். அண்ணா வேலூர் வரும்போதெல்லாம் நலம் விசாரிப்பார். நான் படித்த நூல்களைப் பற்றிச் சொல்வேன்.

சென்னையில் இருவரும் பழைய புத்தகங்களுக்காக அலைவோம். ஆங்கில நூல்கள் அண்ணாவுக்கு உலக நிலை, போக்கு, அரசியல் நுட்பங்கள், பல நாடுகளின் வரலாறு, கலை, ஒவிய முன்னேற்றங்களை அறிய பெரிதும் உதவின. அவற்றை ஆராய்ந்து அழகுத் தமிழில் வடித்துத் தந்தார்.

1944—ல் பெரியாரிடம் ஈரோட்டுக்குச் சென்று விட்டேன். அங்கே கலைஞரும், கவிஞர் கருணானந்தம், சா. கசேந்திரன், எஸ். தவமணி, இராசன் ஆகியோருடன் பத்திரிகைப் பயிற்சி.

பெரியாரின் கரடு முரடுகளால் வேதனைப் படும்போது அண்ணா தைரியம் சொல்லுவார். அவரது அன்பு, அரவணைப்பு, ஊக்கம் இவைகளால் இளைஞர் கூட்டம் உறுதிப்பட்டது; பெருகியது.

பெரியார், அண்ணாவுடன் ஆந்திர நாட்டுக்குப் பிரசாரத்துக்குச் சென்றேன். புராணப் பண்டிதர்கள் மலைக்கும் அளவுக்கு அண்ணா பகுத்தறிவுக் கணைகளைத் தொடுத்தார்.

அவருக்குப் பதில் என்னைச் சில இடங்களுக்குப் பேச அனுப்பினார்.

இயக்கப் பேச்சாளர், எழுத்தாளர் எண்ணிக்கை பெருகப் பெருக அண்ணா உளம் பூரித்தார்.

1949—ல் நான் பெரியாரிடம் தங்கிவிட்டேன். மீண்டும் 1960—ல் அண்ணாவிடம் வந்துவிட்டேன். 'ஜனார்த்தனம் வந்தது புதிதாகவே தெரியவில்லை. எப்போதும் நம்முடன் இருப்பவர்' என்று மகிழ்வார். இறுதி வரை அன்பைச் சொரிந்தபடியிருந்தார்.

அண்ணாவின் பெருமைகளை ஆங்கிலத்தில் அயல் நாட்டாருக்கு உணர்த்தும் வேலையை செய்து வருகிறேன்.

புதுதில்லியில் நமக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்திவிட்டு, உலகத்தில் நம்மை அறிமுகப்படுத்திவிட்டு, நமக்குக்கொள்கைச் செல்வத்தைத் தந்துவிட்டு அண்ணா மறைந்தார்.

அவரது பண்பு, அடக்கம், எளிமை, பெருந்தன்மை, கொள்கை, உறுதி, பாசம்,

அரவணைப்பு இவைகளை எண்ணி எண்ணி வாழ்நாளை ஓட்டுகிறோம்.

சிக்கல் வரும்போது, புயல் வரும்போது, திகைப்பு வரும்போது, பிரச்னைகள் கடுமையாகும்போது, அண்ணாவை நினைக்கிறோம். அவரது அனுபவத்தை, சமாளித்த வகையை வழிகாட்டிகளாக்கிக் கொள்கிறோம்.

திராவிட இனம் அவரை நம்பிக்கை நட்சத்திரமாகக் கொண்டுள்ளது.

அண்ணா சொன்னது போல், 'மீதிப் பாதியை' கலைஞர் உருவாக்குகிறார். அண்ணா மறைந்ததும் எதிரிகளின் எண்ணத்தில் மண்ணைப் போட்டுப் பக்குவமாக கழகத்தைக் கட்டிக் காத்து வரும் கலைஞரை நாம் காலமெல்லாம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

எதையும் தாங்கும் இதயம் கொண்டு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மீறாமல்,– 'இப்படை தோற்கின், எப்படை வெல்லும்' என்ற நம்பிக்கையுடன் அண்ணா பாதையில் தொடர்ந்து செல்வோம்.

அண்ணாவின் கருத்துக்களை சிறப்புக்களை நாள்தோறும் பரப்பி நாட்டுக்கு நல்ல தொண்டாற்றுவோம்.

★



சொல்லழகர் அண்ணா

கலைஞர் வாணிதாசன்

கடல்மல்லைத்திருநாட்டுக்காஞ்சிதந்த செம்மல்!
கற்றூர்க்கும் கல்லார்க்கும் களிப்பேற்றும் நீண்ட
மடற்றுழை மலர்மணந்து வருந்தென்றற் காற்று!
வளர்புன்னைப் பூவிருந்து வண்டெழுப்பும் பாடல்!
இடமகன்ற தமிழகத்தின் இருள்போக்கி வானில்
எழுந்தசுடர்! மாற்றரும் எண்ணியெண்ணி ஏங்க
நடமாடும் அறிவூற்று! தமிழகத்தில் வாய்த்த
நல்லறிஞர்! சொல்லழகர்எங்களரும்அண்ணா!

அலைபிறந்த முத்தாரம்! அழகுமணிக் கோவை!
அடர்தென்னை மரத்தோப்பு! சுவைஇள நீர்க் காய்கள்!
மலைபிறந்த நீள்அருவி! மயிலாடு பாறை!
வள்ளுவனூர் உலகளித்த குறட்பாக்கள்! நீண்ட
குலைபிறந்த செவ்வாழை! குளிர்ந்தமலர் ஓடை!
குழலோசை! தமிழ்நாட்டுக் கொடுமைக்கு வேட்டு!
கலைபிறந்த தமிழகத்தின் அரசுக்கு வாய்த்த
கதிர்க்கோமான் சொல்லழகர் எங்களரும் அண்ணா!

முகம்தந்த இளஞ்சிரிப்பு! மூதறிஞர் நெற்றி
முனிவில்லா ஒளிக்கண்கள்! முற்போக்கின் எண்ணம்!
அகம்தந்த தமிழ்ச்சுவையே அடுக்குமொழிப் பேச்சாம்!
அன்புள்ளம் அறச்செயலே அவர்வாழ்வின் நோக்கம்!
பகைதந்த ஏச்செல்லாம் பதறாமல் ஏற்கும்
பண்பாளர்! அன்பாலே பகைவெல்லும்சூரர்!
வகைதந்த அறிவாலே தமிழகத்தை ஆண்ட
வழிகாட்டி! சொல்லழகர் எங்களரும் அண்ணா!

கற்றவர்கள் வியக்கின்ற தனித்தமிழ்மாமேதை!
கலையுலகில் எழுத்துலகில் தனிப்பாதைகாட்டி
மற்றவர்கள் துயர்காணின் மனங்கலங்கும் நெஞ்சர்!
வாய்இனிக்க செவிஇனிக்க வாதாடும் செம்மல்!
நற்றமிழ்த்தாய் ஈன்றுலக நாட்டிற்கே தந்த
நல்லோருள் நமதண்ணா வல்லவராம் கண்டீர்!
பெற்றோர்கள் பெயர்வாழ்த்த பெரும்புகழைச் சேர்த்த
பேரறிஞர்! சொல்லழகர் எங்களரும் அண்ணா!



எழுதாத சரிதம்

சி. எஸ். பூஞ்சோலை

பேரறிஞர் அண்ணு அவர்களின் பொழுது போக்குகளில் ஒன்று, நண்பர்களுடன் உரையாடுவது — நண்பர்களுடன் உரையாடுவதை அவர் பெரிதும் விரும்பினர்.

நண்பர்கள் எத்தரத்தவராயினும், அவர்களுக்கு ஏற்றவாறு உரையாடலை அமைத்துக் கொள்ளுகின்ற தனித் தன்மை பெற்ற தலைவர் அவர். எல்லோருடனும் சரிசமமாகப் பேரறிஞர் அண்ணு அவர்கள் பழகுவதையும், உரையாடுவதையும் விரும்பாத தலைவர் ஒருவர் அப்போது கழகத்தில் இருந்தார். அவர் பேரறிஞர் அண்ணு காலத்திலேயே கழகத்தை விட்டுப் போய்விட்டார்.

பேரறிஞர் அவர்கள் நண்பர்களுடன் உரையாடுவதைப் பொழுது போக்காகக் கொண்டிருந்தார் என்று மற்றவர்கள் எண்ணிக் கொண்டார்கள். ஆனால் உண்மையிலேயே நண்பர்களின் கருத்துக்களைத்தெரிந்து கொள்ளவே அவர் அக்கரை காட்டினர்.

ஜனநாயகப் பண்பை முழுக்க முழுக்கப் பெற்றிருந்தவராதலால், மற்றவர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுவதில் ஆர்வம் காட்டியதோடு, அவைகளுக்கு மதிப்பளிக்கவும் முற்பட்டார்.

பல தலைமுறைகளுக்கு ஒருமுறை வழி படுவதற்குரிய தலைவர்கள் தோன்றுகிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவராகப் பேரறிஞர் அண்ணு திகழ்ந்து, மறைந்தும் விட்டார்கள்.

போற்றுதற்குரிய தலைவர்களில் சிலர் நீண்ட காலம் வாழாது போனாலும் கூட, நாட்டின் வரலாற்றில் பின்னிப் பிணைந்திருப்பது போல, பேரறிஞர் அண்ணு அவர்களும் தமிழக வரலாற்றில் சிறப்பு மிக்க இடத்தைப் பெற்று விட்டார்கள்.

பேரறிஞர் அண்ணு அவர்களிடம் உரையாடுவதற்குக் ''கொடுத்து வைத்திருக்க வேண்டும்''. எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பல்ல அது என்றிருந்தபோதிலும், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த என்னைப் போன்ற மிகச் சாமான்யர்கள் சிலர் ''கொடுத்து வைத்தவர்களாக'' இருந்தனர்.

இரவில் நேரம் போவதைப் பொருட்படுத்தாமல் உரையாடலில் கலந்து கொள்பவர்களை பேரறிஞர் அவர்களுக்கு மெத்தப் பிடிக்கும்.

இரவில் நேரம் ஆக ஆக உரையாடலில் சூடு பிடிக்கும். அரிய கருத்துக்கள், அவரது வாழ்க்கையில் நடைபெற்ற பல சுவைமிக்கச் சம்பவங்களின் விளக்கங்கள் வெளிவந்த வண்ணமிருக்கும். நகைச்சுவைக்குக் கேட்கவா வேண்டும்?

வெற்றிலைப் பாக்குக் குதப்பிய வாயைத் திறந்து குலுங்கக் குலுங்கச் சிரிப்பார். சிரிக்கவும் வைப்பார்; சிந்திக்கவும் வைப்பார். சிக்கலான பிரச்சனை எதுவானாலும் மிக எளிதாக விளக்கிடுவார். எவரையும் சில நிமிடங்களில் விவாதத்தில் மிக எளிதாக வெல்லுதற்குரிய திறமை பேரறிஞர் அவர்களுக்குத்தான் உண்டு.

ஒருநாள் உரையாடலின்போது தமிழக வரலாறு கோர்வையாக எழுதப்படாதது பற்றிக் குறிப்பிட்டார். செப்பேடுகள், கல்வெட்டுகள், புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்கள், கிரேக்கம், சீனம் போன்ற நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த வணிகத் தொடர்புகள், மேலை நாடுகளிலிருந்து நம் நாடு வந்த பயணிகள், அறிஞர்கள் ஆகியவர்களின் குறிப்புகள் ஆகியவைகளை வைத்துப் பண்டைய தமிழக வரலாறு பெரும்பாலும் ஒட்டு மொத்தமாக எழுதப்பட்டிருக்கிறது. பல முக்கிய நிகழ்ச்சிகள் தமிழக வரலாற்றில் இடம் பெறாமல் போய்விட்டிருக்கக்கூடும்.

பொதுவாக நிகழ்ச்சிக் குறிப்பு வைக்கும் பழக்கம் தமிழர்களிடம் இல்லாமல் போனதே இதற்குக் காரணம். அதே நேரத்தில் அமெரிக்க, ஐரோப்பிய வரலாறுகள் ஒரளவு முழுமையாக எழுதப்பட்டிருக்கின்றன. அன்றாட நிகழ்ச்சிகள் கூட அவைகளினின்றும் தெரிந்து கொள்ள முடிகின்றது.

உதாரணமாக, அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் சுடப்பட்டு அன்று (The Day when george wa hington was shot at) என்ற நூலில் ஜார்ஜ் வாஷிங்டன் சுட்டுக் கொல்லப்பட்ட நாளின் இருபத்தி நான்கு மணி நேர நிகழ்ச்சிகள் அனைத்தும் நிமிட வாரியாக எழுதப்பட்டிருக்கின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட அந்நூலைப் போன்று, நம் நாட்டுத் தலைவர்களைப் பற்றி எழுதப்பட்ட நூல்

மனத்திரையின் உயிர்ப்படலமே!

புலவர் பொன்னிவளவன்

காலடியில் மலர்குவிப்பேன்; உன்முன் நின்று
கைகுவிப்பேன் பதினெண்கீழ்க் கணக்கில்
உள்ள
நாலடியின் ஈரடியின் உட்க ருத்தை
நடைமுறையில் காட்டியவர் நீர்தான்அண்ணு
கோலடியைக் கையடியைக் குத்து வெட்டுக்
கொலைவெறியைப் புன்னகையால் தோற்க
வைத்தாய்;
'பாலடிநீ! தேனடிநீ!' என்று கொஞ்சும்
பருவத்தோர் பொதுத்தொண்டை ஏற்க
வைத்தாய்!

மூத்தவர்நீர் இனஉணர்ச்சி தந்தீர்; நாங்கள்
முன்னேற்றக் கழகத்தின் குயில்கள் ஆனோம்!
சேர்த்தவர்நீர் அறிவாளர் தம்மை! என்றும்
சிரித்தவர்நீர் தாமரைபோல்! நன்முயற்
கட்டிக்
காத்தவர்நீர் கழகத்தை! புதிய ஆட்சி
கண்டவர்நீர்! அறியாமை அடித்தகொட்டம்
தீர்த்தவர்யார் உம்போலே? உம் நினைப்பே
தினம்தோறும் புதியபலம் எங்க ளுக்கு!

நீர்வளர்த்த கொள்கைப்பூஞ் செடியில் இன்று
நிதம்மலரும் சாதனைப்பூ நூறு நூறு!
ஏர்உழவர் குடியிருப்பு மனையைப் பெற்றூர்;
இளைஞர்அணி யால்படித்தோர் மகிழ்ச்சி
பெற்றூர்!
தேர்ஊராம் திருவாரூர்க் கலைஞ ராலே
திருவிழியின் ஒளிப்பார்வை பலபேர்
பெற்றூர்!
சீர்பெற்றோம் உம்மாலேநாங்கள்! நாடு
சீர்வரிசை யாய்ப் பெறவே உழைப்போம்
நாங்கள்!

காஞ்சிநகர்ப் பல்லவரே! நீர்உ றங்கும்
கல்லறையின் விளக்கெம்மைப் பார்க்கும்
கண்கள்!
பூஞ்சிரிப்பு வெள்ளிநிலா உம்மு கத்துப்
பொலிவுதனை நினைவூட்டும்! பூங்கா தன்னில்
தேன்சொரியும் மலர்உம்போல் சிரித்துக்
காட்டும்!
தென்னாட்டு மக்களிடம் உம்போல் நெஞ்ச
வாஞ்சையினைக் காட்டியவர் யாரும் இல்லை!
மனத்திரையின் உயிர்ப்படமே! வணங்கு
கின்றேன்!

★

கள் அமையவில்லை என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள்.

அந்த நேரத்தில் என் விருப்பம் ஒன்றினை அவரிடம் தெரிவிக்க வேண்டும் என்று தோன்றிற்று. என் மனதில் தோன்றியதை அவரிடம் சொல்லி விட்டேன்.

''அண்ணு! நம் நாட்டுத் தலைவர்கள் பற்றிய நூல்கள் சரிவர அமையவில்லை என்று நீங்கள் குறைப்பட்டுக் கொள்ளும்போது, உங்களைப் பற்றிய முழுமையான நூல் இது வரையில் வெளிவரவில்லையே என்ற ஏக்கம் எங்களுக்கு இருக்காதா?''

''உங்கள் வாழ்க்கைத் தமிழக வரலாற்றில் பின்னிப் பிணைந்திருக்கிறது. பல துறைகளில் மறுமலர்ச்சியை உண்டாக்கியிருக்கிறீர்கள். எவ்வளவோ எதிர்ப்புக்கிடையில் எவரும் மருளும் வண்ணம் கழகத்தை வளர்த்துள்ளீர்கள். வருங்காலச் சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய பலநிகழ்ச்சிகள் உங்கள் வாழ்க்கையில் நடைபெற்றிருக்கின்றன. எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று உங்கள் வரலாறு. ஆகவே உங்கள் வாழ்க்கை வரலாறு ஒன்றை நீங்களே எழுத வேண்டும். அண்ணு! நீங்களாகவே அதை எழுதினால், அது இலக்கியமாகத் திகழும்,'' என்று வேண்டிக் கொண்டேன்.

பேரறிஞர் அண்ணு அவர்கள் சிறிது சிந்தித்தார். பிறகு புன்முறுவல் பூத்த முகத்துடன், ''எழுதலாம், இப்பொழுது என்ன அவசரம். எனக்கு அரசியல் மற்றும் பல முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய தேதிகள் கூட நினைவில் நிற்கின்றன. நேரம் எங்கே இருக்கிறது. பிறகு எழுதலாம்'' என்றார்.

எனக்கு மகிழ்ச்சி, கோரிக்கையை ஏற்றுக் கொண்டாரென்பதால். ஆனால் அந்த மகிழ்ச்சி அற்ப சந்தோஷமாகப் போய்விட்டது.

இறுதிவரை பேரறிஞர் அவர்களுக்கு நேரமே கிடைக்காமல் போய்விட்டது. கிடைத்ததற்கரிய 'பொக்கிஷம்' நமக்குக் கிடைக்காமலே போய்விட்டது. தமிழக வரலாறு சரிவர எழுதப்படவில்லையே என வருந்திய அண்ணு, தன்னுடைய சரிதத்தைத் தராமல், அண்ணு நம்மையெல்லாம் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டுச் சென்று விட்டார்.


சொல்மாலை
வேந்தரின்
மலர்மாலைக்
காட்சிகள்



அண்ணா பாடிய தெருக்கூத்துப் பாடல்



1952-ல் நடைபெற்ற பொதுத் தேர்தல் சமயம், கழக ஆதரவு பெற்று கிருட்டினகிரி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட டி. கிருஷ்ணமூர்த்தி அவர்களை ஆதரித்து 5—1—52—ல் கிருட்டினகிரியில் அண்ணா அவர்கள் பேசுதற்குக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரவு 10 மணி ஆகியும் அண்ணா வரவில்லை. பின் சுமார் 11 மணி அளவில் திருப்பத்தூர் தொகுதியில் ஈ. எல். இராகவன் அவர்களை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தை முடித்துக் கொண்டு அண்ணா அவர்கள் வந்து சேர்ந்தார்.

கூட்டத்தினர் அண்ணாவின் பேச்சை மட்டுமே கேட்கும் நிலையில் காணப்பெற்றனர். எனினும் அண்ணா அவர்களே தன்னுடன் வந்த சி. வி. எம். — அண்ணாமலை, புட்டாசாமி, காஞ்சி கலியாணசுந்தரம் மற்றும் பலரைப் பேசும்படி பணித்தார். எனினும் பேச எழுந்த பேச்சாளர்கள் அனைவரும் கூட்டத்தின் பாங்கு அறிந்து ''அண்ணா பேசுவார்'' நாங்கள் விடைபெறுகிறோம் என்ற முறையில் பேசிவிட்டு உட்கார்ந்தனர். இப்படியாகப் பத்துப் பனிரெண்டு பேச்சாளர்கள் பத்து நிமிடத்துக்குள் பேசிவிட்டு உட்கார்ந்ததும், 'அண்ணா பேசுவார்' என அறிவிக்கப்பட்டதும் மக்களின் ஆரவாரப் பேரொலிக்கு அளவேயில்லை.

அண்ணா பேசும்போது — ''தோழர்களே, நான் திருப்பத்தூர் பகுதியிலே நடைபெற்ற பல கூட்டங்களை முடித்துக் கொண்டுவர 5 மணி நேரம் தாமதம் ஆகிவிட்டது. இந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டு தர்மபுரி கூட்டத்திற்குப் போய் கலந்து கொள்ள வேண்டும். உங்களின் மகிழ்ச்சியான முகத்தைக் கண்டதும் துவக்கத்திலேயே பேசிவிடலாம் என்றுகூட நினைத்தேன். ஆயின் உடல் சோர்வு ஏற்பட்டு நிற்கவும் முடியாமல் கால் வலியாக இருந்த காரணத்தால் பல தோழர்கள் பேசும்வரை ஓய்வு பெறலாம் — புது வலிவு பெறலாம் என்ற எண்ணத்தில் நண்பர்களைப் பேசும்படி கூறினேன். அவர்கள் எல்லாம் தெருக்கூத்திலே வருகின்றானே கட்டியக்காரன்; அவன் தோரணையில்

''வந்தனம் தந்தேன் சபையோர்களே—
சிறு மைந்தனை ஆதரிப்பீர்களே!''

—எனப்பாடி, இரண்டொரு 'கிர்கி' அடித்து வணக்கம் தெரிவித்து ''அந்தா பின்னல் துடிவேஷக்கார துரியோதன மகராஜா வருகிறார் எனக் கூறி திரை மறைவுக்கு ஓடிப்போவது போல எல்லோரும் ''அண்ணா பேசுவார்'' — ''அண்ணா பேசுவார்'' எனக் கூறிவிட்டு உட்கார்ந்துவிட்டனர்.

கட்டியக்காரன் அறிவிப்பைக் கேட்டு துடிவேஷக்கார துரியோதன மகராஜன் பாதி வேஷத்துடன் வந்து ஆட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுவது போல நானும் பாதி ஓய்வுடன் வந்து பேச வேண்டி நேரிட்டு விட்டது எனக் கூறியதும் கூட்டத்தினரின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு அளவே இல்லை. சாதாரண தெருக்கூத்துப் பாடலை அண்ணா பாடியது இன்றைக்கும் காதில் ஒலித்துக் கொண்டுள்ளது.

-வே. பொரகோவன்

நிறுவினது: 1927. தொலைபேசி எண்: 661068.

சென்னை கூட்டுறவு பால்வழங்கு ஒன்றியம்

அயன்புரம் :-: சென்னை-23.

திரு. டி. கே. கபாலி
தலைவர்.

திரு. என். எஸ். தேவராசன்
உப தலைவர்
(முன்னாள் துணைமேயர்)

சுத்தமான பால்

மாநகர மக்களின் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்ய நாங்கள் அதிக அளவில் பால் விற்பனை செய்ய முற்பட்டுள்ளோம். எமது வாடிக்கைக்காரர்களும், கூட்டுறவு ஆதரவாளர்களும் எப்போதும் போல் ஆதரவு தந்து கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்த வேண்டுகிறோம்.

கிளை அலுவலகங்கள்

1. நெ. 33, உஸ்மான்ரோடு - தியாகராயநகர்.
2. நெ. 5, மத்தளநாராயணன்தெரு - மைலாப்பூர்.
3. நெ. 91, பெரியதெரு - திருவல்லிக்கேணி.

தெ. நடராசன், பி.ஏ.
செயலாளர்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம்

அக்ரோ இல்லம், தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை-32.

ஜெடார் 2011 - ரைஸ் ஸ்பெஷல் டிராக்டர்கள்
உடனே விலைக்கு கிடைக்கும்.

25 குதிரை வேகம்—தண்ணீரால் குளிரக்கூடிய என்ஜின்—செக்கோஸ்லோவேகிய நாட்டில் செய்தது—புகழ் பெற்றது—நம்பிக்கையானது.

தண்ணீர் புகாத பாகங்களுடன் சேற்றுழவுக்கும், நீண்டகால உழைப்பிற்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டது.

விலை சுமார் ரூ. 21,750-00

"உடனே விண்ணப்பிக்கவும்"

உங்கள் விவசாயத் தேவைக்குக் கிழ்க்கண்ட இடங்களிலுள்ள இவ்வேளாண்மைத் தொழில்கள் இணையகத்தின் பிராந்திய பொறியாளரை உடனே அணுகவும்.

1. சிறு காவேரிப்பாக்கம், காஞ்சிபுரம்.
2. தொழிற் குடியிருப்பு, அரியமங்கலம், திருச்சி-10.
3. பாக்ஸ் காம்பவுண்டு, சேலம்-1
4. தொழிற்பேட்டை, மதுரை-7.
5. 219, நேருஜி சாலை, விழுப்புரம்.

எஸ். எஸ். மாரிசாமி

அந்தப் பொற்காலம்



1939-ம் ஆண்டு இரண்டாம் உலகப் பெரும்போர் நடந்த சமயம். அப்போது தினமணியில் நான் உதவி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது 'தினமணி'யில் 'சென்னை நகரம் பிறந்த கதை' என்று தொடர் கட்டுரை வெளி வந்தது.

அதைச் சிறந்த தேச பக்தரும் கதர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவரும், சத்தியமூர்த்தி, சொக்கலிங்கம் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய வருமான சந்திர சேகர முதலியார் எழுதி வந்தார். வட சென்னையில் அவர் வசித்து வந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள்.

அந்தக் கட்டுரையைப் படித்த அண்ணா அவர்கள் மிகுந்த ஆச்சரியம் அடைந்தார்கள். ஏனென்றால் எழுதியவருக்கு ஆங்கிலத் தேர்ச்சி குறைவு. இவ்வளவு அருமையான விளக்கங்களுடன் கூடிய கட்டுரையை சந்திர சேகர முதலியார் எப்படி எழுதினார் என்பதே அவருக்கு ஏற்பட்ட ஆச்சரியம்!

அதுபற்றி அண்ணா அவர்கள் என்னிடம் கேட்டார். இதை யார் எழுதியது? எப்படி எழுதினார்? என்று கேட்டார். அதை அவர்தான் கன்னிமாரா நூலகத்தில் கிடைத்த ஆதார நூல்களை வைத்துத்தான் எழுதினார் என்று சொன்னேன். இப்படித்தான் நான் அண்ணா அவர்களிடம் அறிமுகமானேன்.

அதற்குப் பின் நான் 'அயர்லாந்து' பற்றி நூல் ஒன்று எழுதினேன். அந்த நூலில் 1942–ம் ஆண்டு விடுதலைப் போராட்டத்தை மனதில் வைத்துக் கொண்டு அயர்லாந்துக்காரர்கள் எப்படியெப்படி எல்லாம் போராடி விடுதலை பெற்றார்கள் என்பதை விளக்கி எழுதியிருந்தேன்.

1942–ம் ஆண்டு விடுதலைப் போராட்டத்தின் போது எப்படி தந்திக் கம்பத்தை அறுத்து, தண்டவாளத்தைப் பெயர்த்து ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அறைகூவல் விடப்பட்டதோ அதைப் போல ஐரிஸ்காரர்கள் 1918–ல் போராடினார்கள். அதை விளக்கி எழுதிய அந்த நூலை ஆங்கிலேயர்கள் தடை செய்து பறிமுதல் செய்து விட்டனர். அறிஞர் அண்ணா அவர்கள் இந்த நூலைப் படித்து விட்டு விறு விறுப்பான நடை, அருமையான நூல் என்று பாராட்டினார்.

பிறகு அவர் 'ரோமாபுரி ராணிகள்'' என்ற புத்தகம் எழுதினார். அந்த சமயத்தில் அண்ணா அவர்கள் நான் எழுதிய புத்தகத்திற்கு — 'ராயல்டி' எவ்வளவு வாங்குகிறேன்' என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பி எஸ். வி. லிங்கத்தை என்னிடம் அனுப்பிக் கேட்டு வரச் சொல்லியிருந்தார்கள்.

அப்போதெல்லாம் ரூ.200, 300 என்றுதான் 'ராயல்டி' கிடைக்கும். அந்தக் காலத்தில் எல்லாம் நாம் எழுதிய புத்தகம் வெளி வந்தால் போதும் என்ற நிலைதான் இருந்தது. எனவே தொகை மிகக் குறைவுதான்.

வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்களைப் பேணிக் காப்பதுதான் உலக நடைமுறை யென்றாலும், அந்தக் காலத்தில் எழுத்தாளர்கள்தான் வெளியீட்டாளர்களை பேணிக் காத்து வந்தார்கள். தொகை மிகக் குறைவுதான் என்பதை எஸ். வி. லிங்கத்தி

டம் சொல்லி அனுப்பினேன்.

அதற்குப் பிறகு அண்ணு அவர்களிடம் மிக நெருக்கமாகப் பழகியதெல்லாம் 1962–ம் ஆண்டிற்குப் பிறகு தான்.

ராஜாஜி அவர்களின் கருத்தை அறிவதற்கு அண்ணு அவர்கள் என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். அது போலவே அண்ணு அவர்களின் கருத்தை அறிந்திட ராஜாஜி அவர்களும் என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இதை நான் ஒரு பெரும் பேறாகக் கருதியதோடு இந்தக் காலத்தை என் வாழ்நாளின் பொற்காலம் என்று கருதுகிறேன்.

தமிழ் நாட்டில் எத்தனையோ புலவர்கள், எழுத்தாளர்கள் இருந்திருக்கிறார்கள். கதாசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். அரசியல்வாதிகள் இருந்திருக்கிறார்கள்.

இவர்களது ஆற்றலை எல்லாம் மிஞ்சக்கூடிய ஆற்றல் அண்ணு அவர்களிடத்திலே இயற்கையாக அமைந்திருந்தது பற்றி பலருக்கு ஆச்சரியம்! நமக்கு எல்லாம் பெருமையும் பூரிப்பும் ஏற்படுகிறது.

தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்திக் கொண்டு அதிலிருந்து ஒரு சிறிதும் பிறழாமல் பெரும் புகழ் பாதையில் பீடு நடை போட்டவர் என்பதோடு தன்னைப் பின்பற்றி அதே நடைபாதையில் வீறுநடை போடும் பெரும் படையை உண்டாக்கியிருக்கிறார்.

அவர் ஈடுபாடு கொண்ட ஒவ்வொரு துறையிலும் அவரது ஆற்றல் தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓர் நிலையை உண்டாக்கியிருக்கிறது.

அவரது சாதனைகளை எல்லாம் நாம் பார்க்கின்ற போது நமக்கு மலைப்பே ஏற்படுகிறது.

இதனை, அண்ணு அவர்கள் மறைந்த இறுதி யாத்திரையின்போது புலப்பட்டது எந்த ஒரு தலைவனுக்கும், எந்த ஒரு இடத்திலும் இத்தனை கோடி மக்கள் ஒன்று சேர அவருக்கு அஞ்சலி செலுத்திய அந்தக் காட்சியை நாம் மறக்க முடியாது. அதுவே அவரிடத்தில் நாடு முழுதும் கொண்டிருந்த அன்புக்குச் சரியான எடுத்துக்காட்டு. இனி அவரைப் போல ஒரு ஒப்பற்ற தலைவரைக் காணப் போகிறோமா? காலம்தான் பதில் கூற வேண்டும்.

★

செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம்
சென்னை-1

தலைமை அலுவலகம்: 150 பிராட்வே, சென்னை-1

உங்கள் தேவைக்கு எங்கள் கூட்டுறவு அங்காடிகளில் நியாய விலையில் தரமான பொருள்கள் சரியான எடைக்குக் கிடைக்கச் செய்கிறோம்

உங்கள் மேலான ஆதரவைத் தருமாறு வேண்டுகிறோம்

சிறப்பு அங்காடி

காஞ்சீபுரம்

கிளைகள்

காஞ்சீபுரம்
செங்கற்பட்டு
மதுராந்தகம்
திருவள்ளூர்
திருத்தணி
பொன்னேரி

கிளை விற்பனை நிலையங்கள்

திருக்கழுக்குன்றம்
செய்யூர்
மேல்மருவத்தூர்
திருப்பெரும்புதூர்
கும்முடிபூண்டி
ஜி. டி. சென்னை

கொளத்தூர் கோதண்டம்
தலைவர்



அடிவானம் — முன்னிருட்டு — பனிமூட்டம் — மின்னற் கீற்று — மங்கல் நினைவுகள்.

நுரைப் பூக்களில் நூறு நூறு நீல மகரந்தங்கள் — நூலிழை போல் தொடர்ந்து வரும் நூதனச் சங்கீதங்கள்

பிஞ்சு நண்டுகளின் பிள்ளை விளையாட்டு. கிளிஞ்சல் தேவதைகளின் கிண்கிணித் தாலாட்டு.

ஒரு தரை தட்டிய கப்பல். அதை வேடிக்கை பார்த்துவிட்டுப் போகிற சில மனிதர்கள். அவர்களின் தலைகளுக்கு மேலே வானங்கள். கால்களில், சண்டல் முடிந்தும் சுருண்டு விழுந்துவிட்ட சில மந்தாரை இலைகள்.

அதற்கப்புறம் ஒரு ஐந்தாண்டுக் காலம். பூகம்ப நாட்களின் புயல் இரவுகளில் வசந்த காலத்தின் வாசத் தென்றலை உணர்ந்தவனுமான ஒரு உலக ஞானி தன்னைத் தானே ஒரு திறந்த புத்தகமாக்கி விட்டிருக்கிற தேவாலயம்—

அதோ! அந்தக் கடற்கரை அருகே ஒரு தேவாலயம்—

தேவாலயத்தின் வெளிப்பிரகாரத்தில் இருக்கிற துவார பாலகர்கள்—ஒளிமயமான விளக்குகள், நீர்ச்சுனைகள், புல்தரைகள், சிற்பச் செடிகள் இவற்றிலே மயங்கி நிற்கிறோம்.

மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் மனிதகுலத்தால் போற்றப்படப் போகிற அந்த எகிப்து நாட்டுப் பிரமிடு நம் கண்களிலே படுகின்றன.

இமைச் சிறகுகளில் ஈரச் சுவடுகள். கண்ணீர்த் தடங்களில் கனவுகளின் யாத்திரை.

அண்ணவே! அண்ணவே! உங்களைப் பிறப்பித்த தமிழகம் உள்ளபடியே பேறுபெற்றது.

அது பாரவோனின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேலரை மீட்க மோயீசனைப்



பருவகால மாற்றங்களைப் போல பரந்த இந்த தேசத்தில் எத்தனையோ மாற்றங்கள்.

மீண்டும் ஒரு அடிவானம் — முன்னிருட்டு — பனிமூட்டம் — மின்னற்கீற்று — மங்கல் நினைவுகள்.

அதோ அந்தக் கடற்கரையருகே ஒரு தேவாலயம்.

காலதேவன் இந்தப் பிரபஞ்சத்தின் அந்தகாரத்தை அழிப்பதற்காகவே நித்திலவிதானத்தில் நீந்தவிட்ட ஒரு அக்கினிப் பறவை அஸ்தமனமாகிவிட்ட தேவாலயம்—

கார்த்திகை நாள் கருக்கிருட்டில் காற்றிலும், கடலிலும் கப்பல்கள் கவிழ்ந்து விடாதபடி தன்னையே எரித்துக் கலங்கரை விளக்கமாக்கிக் கொண்ட ஒரு மாலுமியின் தூயாகவேள்வியான தேவாலயம்—

கோடை வெயிலின் கொடுமைகளில் சீதள இரவுகளின் சிலிர்ப்புகளைக் கண்டவனும், பிறப்பித்த எபிரேயாவை விடப் பேறு பெற்றது.

இதோ! நீங்கள் கண்வளரும் இந்தக் கல்லறைத் தொட்டில் ஒரு காலத்தில் நெபுகாத்நெசாரின் தொங்கு பூந்தோட்டங்களைப் போலவும் — சாலமோனின் திராட்சைத் தோட்டங்களைப் போலவும் வருங்கால சந்ததிகளின் நினைவுகளிலே நிழலாடப் போகிறது.

உங்களைப் பிரசவித்த காஞ்சிக்கு ஒரு காலத்தில் போதி மரத்தடி புத்தனின் நினைவாக தீபெத்திய லாமாக்களும், சீனத்து ஞானிகளும் வந்து கொண்டிருந்தார்கள். வடக்கில் நாலந்தா பல்கலைக் கழகம் மிகப் பெரும் ஞான மண்டபமாக இருந்தபோதே தெற்கே உங்களது காஞ்சி அதனினும்

வலம்புரி ஜான்

இதற்கிடையில்....தமிழக மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு அமைக்கப்பட்டு இரண்டாவது கட்டப் போராட்டம் அறிவிக்கப்பட்டு விட்டது. அப்போது வேகம் மட்டுமே இருந்தது.

உணர்ச்சி இருந்தது. அனுபவ முதிர்ச்சி .... பிப்ரவரித் திங்கள் 8—ம் நாள்கல்லூரிகள் திறக்கப்பட்டாலும் மாணவர்கள் செல்லவில்லை. அன்றைய தினம் என் .வி. என்.சோமு என்னை அண்ணு அழைத்து வரச் சொல்லியதாக....அழைக்கவில்லை. இழுத்துச் செல்ல முயற்சிக்கிறார் நான் அண்ணுவை சென்று சந்திக்க வேண்டும் என சிலர், சந்திக்க வேண்டாம் என சிலர்—மாணவர்களிடையே இந்த நிலை.

அண்ணுவை சந்தித்தால் போராட்டத்தைக் கைவிடச் சொல்லி என்னை ஒத்துக் கொள்ளச் செய்து விடுவாரோ என்பது அவர்களது அச்சம். எனது நலம் நாடும் நண்பர்கள் அண்ணுவிடம் வேகமாகப் பேசி கெட்ட பெயர் வாங்கி விடுவேனோ என அச்சம் சிலருக்கு. நண்பர் சோமுவை தட்டிக் கழிக்க முடியவில்லை. கட்டியாவது இழுத்துச் சென்றுவிடும் நிலை என் மீது எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. தலைவரின் மீது அதைவிட அசைக்க முடியாத பக்தி.

நண்பர்கள் சிலருடன் அண்ணுவைச் சந்தித்தேன். அண்ணு அவர்கள் நின்று கொண்டு பேச ஆரம்பித்தார். இயல்பான பேச்சு செயற்கை சற்றுமில்லை.

தமிழும் ஆங்கிலமும் மாறி மாறி அருவியென ஓடிக் கொண்டிருக்கிறது. நான் என்ன என்ன காரணங்களைச் சொல்லி போராட்டத்தைத் தொடங்க விரும்பினேனோ அவற்றையெல்லாம் அவர்களே சொல்ல ஆரம்பித்து நீ இப்படிச் சொல்லுவாய் நீ இப்படிக் கருதுவாய் எனச் சொல்லி அவற்றுக்கெல்லாம் விடை சொல்லி அதற்குப் பின்னல் போராட்டத்தைக் கைவிடும் காரணம் சொல்லி இறுதியில் என்ன சொல்லுகிறாய் **என** முடித்தார்.

இடையில் நான் பேச சந்தர்ப்பம் இல்லை. அண்ணு பேசி முடித்ததற்கு பின்னல் நான் முழுமையான செயலற்ற நிலைக்குக் கொண்டு வரப்பட்டேன். சிறைப்பட்ட பறவை போல ஆற்றுமை ஏற்பட்டது. வாதிட முடியவில்லை. ஆனலும் அண்ணுவின் வாதத்தை ஏற்க முடியவில்லை. என்ன சொல்லுகிறாய்? என்று மீண்டும் கேட்டார்கள். "Even if you were Lal Bahadur Shastri I would have bombard you. But you are my beloved leader. Eventhough I am not convinced, I will try to take up your advice" என எனது விடை வெடித்துச் சிதறியது. அண்ணு அவர்கள் புன்முறுவல் முகத்தோடு சொன்னார்கள் 'I am proud of you" நான் உடனே சொன்னேன் "you need not be proud of me because it is from you and by you only" அண்ணுவினுடைய வாதத் திறமையை நான் அதற்கு முன் அறிவேன் என்றலும், நேரடியாக, அன்றுதான் அதனுடைய மொத்த பரிமானத்தைக் கண்டேன். அந்தத் திறமை அளித்த வியப்பு இன்றைக்கும் என்னை விட்டு விலகி விடவில்லை.

அண்ணு அவர்கள் அன்றைக்கு என்ன என்ன காரணங்களைச் சொல்லி என்னை போராட்டத்தை கைவிட வற்புறுத்தினரோ அத்துணையும் பின்னல் முழுமையாக மெய்ப்பிக்கப்பட்டது! அண்ணு அவர்கள் அப்போது சொன்னார்கள். **This is only a phase of an agitation or a stage of an agitation. This is not an agitation in its centirity or completeness.** ஒரு பெரும் போராட்டத்தின் ஒரு கட்டமே தவிர ஒரு படியே தவிர இதுவே முழுப்போராட்டம் ஆகி விடாது. இன்றைக்கு உங்கள் போராட்டம் நாளைக்கு விரும்பதகாதவர்களின் போராட்டமாக மாறும். இன்றைக்கு உங்கள் கையில் இருக்கும் போராட்டம் நாளைக்கு அவர்கள் கையில் மாறும்.

நான் அண்ணுவின் வாதத் திறமையைக் கண்டு வியப்படைந்ததை விட அவர் கூறியவை அடுத்தடுத்துப் பின்னர் நிகழ்ந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்து போனேன். போராட்டத்தைக் கைவிடுவது என்று முடிவு செய்து அறிக்கை எழுதிக் கொண்டுதான் அண்ணுவைக் கண்டேன். இடையில் நிகழ்ந்த அடக்குமுறைத் தாண்டவம் அதற்கு பலியான மாணவ மணிகள், பொது மக்கள் என்னுடைய உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தனர். அதுவரை தலைவராக மட்டும் என் உள்ளத்தில் இடம் பெற்ற அண்ணு அதற்கு பின்னர் தெய்வமானார். அந்தத் தெய்வத்தின் திருவடிகளில் என்னுடைய இதயத்தின் பாசத்தை பக்தியை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

★

காந்தியாரும் கழகமும்

காந்தியார் காங்கிரஸ் கட்சிக்கு (தாய்க்கு) சொந்தமாக இருக்கலாம்; மற்றவர்கள் எனும் படியாக எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் காந்தியாரைப் பற்றி என்ன சொல்லுகிறோம் எனக் கேட்டு மகிழக்கூடிய (தாய்) மனநிலையை இங்குள்ள காங்கிரசார் பெற வேண்டும் என நான் பெரிதும் விரும்புகிறேன்.''

—அறிஞர் அண்ணு



அண்ணை மாநில சுயாட்சி கேட்டது ஏன்?

அமுதோன்

நம்மை முருக்கிய முதலியார்

சமீபத்தில் மத்திய அமைச்சர் திரு ஜெக ஜீவன்ராம் சென்னையில் டாக்டர் அம்பேத்கார் அரசினர் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிய நிகழ்ச்சியில் பேசியபோது பேரறிஞர் அண்ணுவை ஆறுமுறைக் குறிப்பிட்டு நினைவு கூறிப் பாராட்டினர்.

அது பிறந்தநாள் விழா அல்ல. இருப்பினும், அவ்வாறு அவர் பாராட்டியதின் காரணம் அண்ணு சம உரிமை சமுதாயத்தை நிலைநாட்டப் பாடுபட்டார் என்று அவரே எடுத்துக் கூறினர்.

அரசியல் விடுதலைக்குப் பின் தன்னுரிமையும் சம உரிமையையும் பெறுவது சட்டத்தின் முன் சமத்துவமும், பொருளாதாரத்தில் எல்லோருக்கும் சம நலனும் அடைவதேயாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்த உரிமைகள் பொதுவாகப் பொறிக்கப் பட்டிருந்தாலும், அவைகளை செயல் முறையில் சாதித்துத் தருவது மக்கள் தொடர்பு கொண்ட இராஜ்ய அரசாங்கங்களே ஆகும்.

மத்திய அரசாங்கம் நேர்முகமாக மக்கள் தொடர்பு கொண்டதல்ல. இராஜ்ய நிர்வாகத்திலும் அதற்கு நேர் பொறுப்பு இல்லை. 'பெடரல் ஆட்சி' என்ற கூட்டு ஆட்சியில் பல பிரிவுகளான ஒரு நாட்டின் ஒருமைப் பாட்டை காப்பாற்றுவதுதான் முக்கியக் கடனுகும்.

மற்ற முழு அதிகாரங்களும் இராஜ்யங்களிடம் இருந்தால்தான் சம உரிமை சமுதாயம் உருவாகும். சேம நலங்களை பெருக்கினால், ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தால் சம உரிமை என்பது உண்மையில் தானே ஏற்படும். மற்றதெல்லாம் வெறும் பேச்சும், ஏமாற்றமுமாகும். பேரறிஞர் அண்ணு தாம் முதலமைச்சர் பதவிக்கு வந்தவுடன் இதை வற்புறுத்தினர்.

அண்ணு ஆட்சிக்கு வந்த நேரத்தில் இராஜ்ய ஆட்சி எவ்வளவு சக்தி அற்றுக் கிடக்கக் கூடுமோ அவ்வளவு சக்தியற்று இருந்தது. பல ஆண்டுகள் மத்தியிலும், இராஜ்யங்களிலும், ஒரே கட்சி ஆட்சியினால் இராஜ்ய நிர்வாகத்தின் தனிக் கடமைகளை அரசு மறந்தது. இந்தியாவில் 'பெடரல்' என்ற கூட்டாட்சி போய், 'யூனிடரி' என்ற ஒரு முக ஆட்சியே நடைமுறையில் இருந்தது.

மத்திய அரசு இராஜ்யங்களுக்கு ஐந்தாண்டுத் திட்டம் என்ற பேரில் அதிக வட்டிக்கு ஏராளமான கடன் வகைகளுக்கான ஒரு லேவா தேவைக்காரன் போல் தந்ததே ஒழிய, இராஜ்யங்களுக்குப் பொருளாதாரத்தை வலுப்படுத்த அதிகாரங்களை விரிவுபடுத்த சிந்திக்கவே இல்லை.

அண்ணு பதவி ஏற்றபோது, அரசாங்கத் தானியக் கிடங்குகளில் சுமார் 600 டன் அரிசியும், வட்டி நிலுவையில் சுமார் ரூ. 26 கோடியும் இருந்தன. எது வந்தாலும் தாங்கிக் கொள்ளும் இதயமுடைய அண்ணுவின் பொருளாதார உணர்வு இதனால் அச்சம் எய்தியது. வட்டிக்கு சிறிது வஜா கேட்டாலும் மத்திய அரசு தரவில்லை. தாங்கள் உலக வங்கிக்கு முறையே தவணைகள் செலுத்த வேண்டுமென்ற காரணத்தால் சலுகை காட்ட முடியாது என்று அந்த அரசு கூறியது.

பாமர மக்கள் சாப்பிடுவதற்குப் போதுமான அரிசி ரேசனை கட்டுப்படுத்தப்பட்ட விலையில் தருவது எந்த அரசாங்கத்தினதும் முதல் கடமையாகும். அண்ணு நான் கூறிய யோசனைக்கும் குறைவாகவே ரூபாய்க்கு ஒரு படி அரிசி ரேசன் கடைகளில் இரண்டு நகரங்களில் மாத்திரம் விற்க வேண்டும் என்று உத்திரவிட்டார். இதை மக்கள் வரவேற்றார்கள். இந்த விலைக் குறைவு ஒரு பக்கம் இருக்க, இராஜ்யத்துக்கு வெளியே அரிசி ஏற்றுமதியைத் தடுத்து (கேரள இராஜ்யத்துக்கும் தராமல்) இராஜ்யம் பூராவும் மக்கள் தங்கள் தேவைகளைக் கஷ்டமின்றிப் பெற்றார்கள்.

பொதுத் தேர்தலுக்கு முன் எங்கெங்கும் மக்கள் 'கியூ' வரிசையில் நின்றும் அரிசி கிடைக்காமல், அடி கிடைத்து வருந்தினர்கள். அண்ணு அந்த நிலையை மாற்றினர். இது மந்திரத்தால் செய்த ஜாலம் அல்ல.

பொருளாதாரத்தைப் பாதிக்கக் கூடிய ஒரு தவிர்க்க முடியாத ஏற்பாடு. கூட்டாட்சியில் மத்திய அரசுக்கு இதில் பொறுப்பும், பங்கும் இல்லையா? 'இல்லை' என்றே கூறிவிட்டார்கள். அப்போது இருந்த மத்திய நிதி மந்திரி, ''அண்ணாதுரை என்னைக் கேட்டா படி அரிசி ஒரு ரூபாய்க்குப் போடுகிறார்?'' என்று கூறினார். இது கூட்டாட்சிக்கு ஒரு சாவுக்கல் பரீட்சை. இதில் கூட்டாட்சித் தத்துவம் வெல்லவில்லை. மத்திய அரசு இதை உணரவில்லை.

சில வாரங்களுக்குப் பின் நான் டெல்லி சென்றிருந்தபோது (மே—1967) இராஜ்ய நிதி மந்திரி திரு. கெ. சி. பந்த் அவர்களைக் கண்டு தமிழ் நாட்டின் பொருளாதார நிலையைப் பற்றிக் கூறி, கடன் வட்டி வகைகளுக்காவது சலுகை காட்ட வேண்டுமென்று கூறினேன். அவர் அனுசரணையாகவே காணப்பட்டார். ஆனால் சலுகைகள் கிடைக்கவில்லை.

அண்ணா அவர்கள் தமது வரவு செலவுத் திட்டத்தை 10—2—68—ல் சட்ட மன்றத்துக்கு சமர்ப்பித்தபோது தமது பேச்சில் பின்வருமாறு கூறினார்:—

''அரசியல் அமைப்பின்படி இராஜ்ய கூட்டு தனிப்பட்ட பண வசதிகள் இல்லை. சென்ற இரண்டு ஆண்டுகளாக மத்தியிலிருந்து இராஜ்யங்களுக்குச் சட்டப்பூர்வமாகவும், எதேச்சையாகவும் தரப்படும் நிதிகள் தேவைகளுக்கு ஒப்பிட்டால் மிகக் குறைவாகத் தரப்பட்டன. இதனால் இராஜ்யங்களின் முன்னேற்றம் தடைபடுகிறது.''

''சென்ற 15 ஆண்டுகளின் அனுபவத்தைக் கொண்டு அரசியல் அமைப்பில் வரையறுக்கப்பட்ட நிதிப் பங்குகளையும், அதிகாரங்களையும், ஒரு மேல் மட்டம் பரிசீலனை மிகவும் முக்கியம் என்பது எனது கவர்ன்மெண்டின் தீவிரக் கருத்தாகும். அதுவரை, இராஜ்யங்களின் நோக்கங்களைக் கவனிக்க நிதிக் கமிஷனின் (பைனான்ஸ் கமிஷன்) பார்வைக்குள்ள விஷயங்களை விரிவுபடுத்தி இராஜ்யங்களின் முன்னேற்றத் தேவைகளை நிறைவுபடுத்த வேண்டும்.''

அண்ணா அவர்கள் வேண்டுகோளுக்கு மத்திய அரசு செவிசாய்க்கவில்லை. அண்ணா இராஜ்ய முழு ஆட்சி கேட்டது மத்திய ஆட்சியின் பலத்தைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கமல்ல. அவர் பொருளாதாரம் படித்தவர். நாடாளு மன்றத்தில் மதிப்புடன் கூடிய அங்கத்தினராக இருந்தவர். இந்திய அரசியலின் உண்மை நிலையை


TYRES MAY COME TYRES MAY GO
BUT MANSFIELD GOES ON FOREVER*
*(OR SO IT SEEMS)


GREETINGS FROM
MANSFIELD
THE TYRE WITH MUSCLE
Manufactured by Madras Rubber Factory Ltd. In collaboration with MANSFIELD TIRE & RUBBER COMPANY, U.S.A.
OVER 20 YEARS' TYRE-BUILDING EXPERIENCE

UNTAS-MRF.20-68

உணர்ந்தவர். அப்படி இருந்தும் இராஜ்யங்களின் அவல நிலையை அதிகாரங்கள் குவிக்கப்பட்ட மத்திய அரசும், மத்தியில் ஆதிக்கம் பெற்ற கட்சியும் பாராமுகமாய் இருந்தது. நான் மத்திய பிரதேசத்தின் அந்நாள் முதலமைச்சர் திரு. டி. பி. மிஸ்ராவுடன் பேசியபோது அவர் அண்ணு கொள்கைகளுக்கு ஆதரவு தருவதாகவும், தனக்கு அவரிடம் மிகவும் நன் மதிப்புள்ளதாகவும் கூறினர்.

நிதி நெருக்கடியை சமாளித்த பிறகும், தமிழ்நாடு கோரிய தொழில் அபிவிருத்தி திட்டங்களுக்கு மத்திய அரசு நிதானமாகவே அணுகியது. சேலம் எஃகு ஆலை, தூத்துக்குடி கார்பர் முதலிய தமிழ்நாட்டுத் தொழில் அபிவிருத்தியைப் பெருக்கும் திட்டங்களுக்குத் தட்டுத் தடங்கல் இல்லாத ஆதரவு உடனடியாகக் கிடைக்கவில்லை. இன்னும் சிறிய தொழில்களுக்கு லைசென்சு தருவதற்குக்கூட அளவில்லாத தாமதம், இராஜ்ய ஐந்தாண்டுத் திட்டத்தின் பண முதலைக் குறைக்க வேண்டுமென்ற வற்புறுத்தல், திட்டக் கமிஷனின் பரிசீலனை என்ற பேரில் ஒவ்வொரு திட்டத்திற்கும் பணக் கட்டுப்பாடு, அந்நிய நாட்டு செலவாணி கட்டுப்பாடு, முதலிய இன்னல்கள் இருந்தன. அண்ணு மட்டும் அன்று இருந்த கஷ்டங்களைக் கொண்டு இராஜ்யங்கட்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கவில்லை. எதிர்காலத்தில் இராஜ்ய அரசாங்கங்கள் தங்கள் கடமைகளை பழுதின்றி நிறைவேற்ற அவை தேவை என்று அவர் கண்டார்.

சமீபத்தில் இராஜாஜி, நிதி உரிமையில்லாது இராஜ்ய முழு ஆட்சி என்பது ஆகாத காரியம், ஆனால் நிதி உரிமை கிடைக்காது. ஆதலால், இராஜ்ய சுய ஆட்சியும் வெறும் பேச்சு என்றும், இந்தக் கூப்பாடு இராஜ்ய அரசுகள் தொழில் லைசென்சுகளை தாமே தருவதற்கு அதிகாரம் பெற்று தமது ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்ள வழிதான், என்ற பொருள்பட கருத்துத் தெரிவித்தார். அதே குற்றத்தை மத்திய அரசின் பேரிலும் சாட்டலாம். உண்மையிலேயே கூட்டாட்சி என்பது சமரசமாக நாட்டின் நன்மைக்காக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதாகும். இல்லையேல் அது கூட்டாட்சி அல்ல.

அண்ணு தாம் மத்திய அரசை அதிக அதிகாரம் கேட்டது போல், தல நிர்வாகங்கட்கும் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று கருதினர்.

அவர் பஞ்சாயத்து ஆட்சியையும், சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தையும் என்னைப் பரிசீலனை செய்யச் சொன்னது அந்த நோக்கமே. கிராம மட்டத்தில் நாலு இலாக்கா அதிகாரம், எட்டுப் பேர் தலையீடு, ஒரு வேலையை இரண்டாக்குதல் முதலிய சீர்கேடுகளைத் தவிர்த்து, தல ஆட்சி நல்லமுறையில் நடக்க வேண்டுமென்பதே அவர் கருத்து.

ஆடானமி என்பது மத்திய, இராஜ்ய அரசுக்கும் மட்டுமுள்ள பிரச்னை அல்ல. கீழ்ப்பட்ட சட்டரீதியான எல்லா சுய ஆட்சி நிறுவனங்கட்கும் பொறுத்தமானதாகும். இப்படிப்பட்ட மையம் விரிவாக்கப்பட்ட அரசியலும் நிர்வாகமும்தான் மக்கள் ஆட்சிக்கு அறிகுறியாகும். மற்றவை எல்லாம் அதிகார வேட்கை அடிப்படையில் வளரத் தலைப்படும் 'மக்கள் ஆட்சி' என்ற வேடத்தில் நடைபெறும், தனி ஆட்சி அல்லது ஒருமுக ஆட்சியாகும்.

மகாத்மா காந்தியடிகளும் இதையேதான் வற்புறுத்தினர். விடுதலை நாட்டில் அதிகாரம் மக்கள்பால் தங்கவேண்டும். சுய ஆட்சியினால் ஒருவரும் பலவீனம் அடைய மாட்டார்கள்.

மத்திய அரசுபலம் குறைந்தால் நாட்டுக்கே பலக்குறைவு என்ற அச்சத்தை இராஜ்ய சுய ஆட்சிக்கு ஆதரவு கொடுக்காதவர்கள் அடிக்கடி எழுப்புகிறார்கள். இதயம் பலவீனம் அடைந்தால், அங்கம் எல்லாம் பலக்குறைவடையும் என்பது உண்மையே. ஆனால் இதயம் 'பெடரேஷனில்' ஒன்றல்ல. பல இராஜ்யங்கட்கும் தனி உயிர்த் தத்துவம் உண்டு. அதிகாரத்தை இன்னும் நல்ல முறையில் பகிர்ந்து கொள்ள மனமில்லாதவர்கள் இதை உணரவில்லை.

அறிஞர் அண்ணு தனது ஏமாற்றத்தைச் சுருங்கச் சொல்லி விளக்கினர். இப்போதுள்ள இராஜ்ய சுய ஆட்சி ''பின்வாசல் இரட்டை ஆட்சிதான்'' இதை மறுப்பவர் எவர்?

★

என்ன நடக்கும்?

ஏ அப்பா நீ மகாப்பெரிய சூரன்! உன்னோடு நான் சண்டைக்கு நிற்க முடியுமா? இதோ உனக்கே இருக்கட்டும் வெற்றி மாலை என்று கூறி மாலையிட வருகின்ற மல்யுத்தக் காரனைக் கண்டு மதி குறைந்தவன் மகிழ்ந்து மாலையைப்பெற தலையைக் குனிந்து நின்றால் மாலை விழுமா அல்லது தலையிலே தாக்குதல் நடக்குமா?

—அண்ணு

BEST WISHES OF:

UNITED INDIA ROLLER FLOUR MILLS PRIVATE LIMITED

Manufacturers & Leading Suppliers of Superior Quality Wheat Products Under their famous

"GOPURAM" BRAND



MAIDA & SOOJI

AND



"SHIP" BRAND

ATTA & BRAN

MILLS & SALES DEPARTMENT

1/4, SURYANARAYANA CHETTY STREET, MADRAS-81.

Phone: 52671 - 52672. "GRAMS" "MONARCH"

அண்ணாவும் லெனினும்

உலக அரங்கில் மக்கள் வழி நடத்திச் சென்று, அதே நேரத்தில் மக்கள் வழி நடந்த தலைவர்கள் வெகு சிலரே. அந்த வெகு சிலரில் தலைசிறந்தவர்களாக பேரறிஞர் அண்ணாவும், லெனினும் விளங்குகிறார்கள்.

சரித்திர வரலாறு அவர்களை நமக்கு வலிய தந்ததோ அல்லது அந்த வல்லவர்களே வரலாறு படைத்தார்களோ என இறுதியிட்டுக் கூற முடியா விட்டாலும் இருந்த வரலாற்றைத் தங்கள் வழியில் ஈர்த்து திசை திருப்பிவிட்ட பெருமை இவர்களையே சாரும். தோழர் லெனின் 1870—ஆம் ஆண்டு பிறந்து 54 ஆண்டுகளே வாழ்ந்து 1924—இல்நோயுற்று மாண்டு போனார். அறிஞர் அண்ணா 1909ஆம் ஆண்டு பிறந்து 60 ஆண்டுகள் வாழ்ந்திருந்து 1969ஆம் ஆண்டு நோயுற்று மாண்டு போனார்.

லெனின் தனது 25வது (1895ஆம் ஆண்டு) வயதிலே காரல்மார்க்சின் விஞ்ஞான சோசலிசக் கோட்பாடுகளினால் உள்ளம் கவரப்பட்டு அரசியலிலே ஈடுபட்டார். அவரது சித்தார்த்தங்களுக்கு முழு உருவம் கொடுத்து நடைமுறையில் செயல்படுத்தும் புரட்சி வீரராகத் திகழ்ந்தார். 1898—ல் தொழில் கட்சி கண்டு 1903—ல் தொழிலாளர் மாநாடு கண்டு 1912—ல் மென்ஸ்வீக்கு களைக் கட்சியிலிருந்து களைந்துவிட்டு வலுவுள்ள போல்ஸ்வீக் கட்சி கண்டு சட்ட ரீதியானதும், சட்டத்திற்கு புறம்பானதுமான புரட்சி வழியில் ஈடுபட்டு 1917—ல் சோசலிச சோவியத் புத்தாட்சி கண்டார்.

அறிஞர் அண்ணா தனது 25—வது (1935) வயதில் திருப்பூரில் நடந்த செங்குந்த வாலிபர் மாநாட்டில் பெரியாரை தலைவராக ஏற்றுக் கொண்டு 1938—ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு 1940—ல் திராவிடநாடு திராவிடருக்கே என திருவாரூர் மாநாடு கண்டு 1944—ல் சேலத்தில் திராவிடர் கழகம் கண்டு 1949—ல் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டு 1967—ல் தமிழகத்தில் ஜனநாயக புத்தாட்சி கண்டார்.

எம். ஏ. பட்டம் பெற்ற சரித்திர பொருளாதார நிபுணர் அண்ணா. சட்டம் பயின்ற வழக்கறிஞர் லெனின். இருவரது குடும்பங்களுமே அவர்களது உழைப்பையும், ஊதியத்தையுமே நம்பி இருந்தும் வீடு பேண மறந்து நாடு பேண முற்பட்டனர்.

எதிர்ப்புகளையும் தவிர்த்து 1917—ல் வெற்றியைத் தழுவியவர் லெனின். அதேபோல் 1967—ல் வெற்றியைத் தழுவியவர் அண்ணா.

லெனின் 1918—ல் ஒரு புரட்சிப் பெண்ணால் சுடப்பட்டு மயக்க நிலையில் அவரது இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் அவர் பட்ட உயிர் வாதனையும், அவர் உயிருக்குப் போராடிய கொடுமையும், அது தவிர்க்க வைத்தியர் படை பட்ட பாடும், அவரது சிறிய இல்லம் அமைதி இழந்து தவித்ததும், உள்ளும், புறமும் சூழ்ந்திருந்த மக்கள் கூட்டம் துடித்த துடிப்பும் வடித்த கண்ணீரும் நமக்கு அறிஞர் அண்ணா நோயால் அடையாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்பு அவர்பட்ட வேதனையும், உயிருக்குப் போராடிய கொடுமை



யும், மருத்துவக் குழாமின் மகத்தான போராட்டமும் சூழ்ந்திருந்த மக்கள் அமைதியிழந்து அல்லல் பட்டதையுமே நமக்கு நினைவு படுத்துவதாக இருக்கிறது.

அரசியலில் சனநாயகம் — பொருளாதாரத்தில் சனநாயகம் சோசலிசம் — சமுதாயத்தில்சனநாயகம் சமநீதி— இந்த மூன்றையும் ஒருசேர செயல்படுத்தி பெருமளவில் வெற்றி கண்டவர்கள் அறிஞர் அண்ணாவும், தோழர் லெனினும்.

இனி அவர்களது கொள்கை வழி நின்று ஒப்புவமை காண்போம். சோசலிசம் பற்றி லெனின் பேசுவதைக் கேளுங்கள். 'மார்க்சியத்துவமே முழுமையானது, அமைதி வழிக்குப் புறம்பானது என நாம் என்றும் கருதியதில்லை. பொதுவாக வழி நடத்திச் செல்லும் தத்துவங்களே அவைகள். ஒவ்வொரு இனமும் தங்களது கலாச்சாரம் பண்பாடு முதலிய வேறு பல சூழ்நிலைக்கு ஏற்பக் கடைபிடிக்க வேண்டிய பொதுவான குறிக்கோள் உடையது. ஒவ்வொரு தேசிய இனமும் தங்கள் நலத்திற்கேற்ப சுயமாக சிந்தித்து சொந்த அனுபவ வாயிலாக தெளிந்த கொள்கைகளையே கடைப் பிடிக்க வேண்டும்' என லெனின் கூறுகிறார்.

அண்ணாவின் கருத்தைக் கேளுங்கள்:

''தமிழர் பண்பாட்டுக்கு ஏற்ற வழியில் கம்யூனிசம் மாற்றி யமைக்கப்படுமானால் அதாவது தமிழ் நாட்டு கம்யூனிசமாக இருக்குமானால் அந்தக் கட்சியில் நான் முதல் அங்கத்தினராக சேர்வதில் தடையில்லை என் பதுதான்.

காரல் மார்க்சின் விஞ்ஞான சோசலிசத்தைத் தனது கொள்கையாக ஏற்றுக் கொண்டதாக 1936—லேயே அறிவித்து விட்டார் அண்ணா. அது மட்டும் அல்ல. ''எப் பொருள் யார் வாய் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அரிது'' என்ற குறள் நெறிக்கு ஏற்ப மதம், சமூக சீர்திருத்தம் முதலான அனைத்திலும் விஞ்ஞானப் பகுத்தறிவு வாதத்தை பொருத்தியே விளக்கம் தந்தார்.

முதலாளி தொழிலாளி மீது செலுத்தும் ஆதிக்கத்தை லெனின் வன்மையாகக் கண்டித்தார். அத்தகைய சுரண்டலுக்குத் துணை நிற்க உதவிய கடவுள் கொள்கையை கடுமையாகச் சாடினார். மதவாதி மக்கள் மீது செலுத்தும் ஆதிக்கத்தையும், அதற்குத் துணை நிற்கும் சாதி, மதங்களையும் அதனைச் சார்ந்த தெய்வ வழிபாடுகளையும் கடுமையாகச் சாடினார், அண்ணா. மக்கள் மறுமலர்ச்சிக்கு எது குறுக்கிட்டாலும், எவர் குறுக்கிட்டாலும் அவர்களை நிர்தாட்சண்யமாக எதிர்த்தார்கள்.

மொழி உரிமை பற்றி லெனினது கருத்தை கீழே தரும் முன் லெனின் பற்றி நேரு எழுதியதைப் படியுங்கள்.

''சிறுபான்மையினரது பிரச்னை நமது நாட்டைக் காட்டிலும் ரஷ்யாவில் மிகவும் சிக்கலானது. 182 தேசிய இனங்களைக்கொண்டது ரஷ்யாவின் கூட்டாட்சி. இவை அனைத்துக்கும் பூரண சுதந்தரம் தந்து நல்ல ஒருமைப்பாடு கண்டிருக்கிறது ரஷ்யா என்றால் அதற்காக லெனினை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்று கூறியுள்ளார்.

100—க்கும் மேற்பட்ட மொழிகள் அனைத்திற்கும் சம உரிமை அளித்தார். மொழி அடிப்படையில் யாருக்கும் சலுகைகளோ, சங்கடங்களோ ஏற்படாது தடுத்து நிறுத்தினர். ரஷ்ய மொழி பொது மொழி ஆனாலும் எவர் மீதும் எந்த வழியிலும் திணிக்கப்பட்டதில்லை. மாறாக மற்ற தேசிய மொழிகளை வளர்க்க உதவி நிற்கிறதாம்.

மாநிலத்திற்குப் பிரிந்து போகும் உரிமை அளிக்கப்படுவதால் நாடு பலவாகப் பிரிந்து சிதைந்து விடாதா என்றால், அப்படி நடைமுறையில் நடக்கவில்லையே என்கிறார்லெனின். நான் இதன் மூலம் பிரிவினையை மிகவும் விரும்புகிறவன் என்று எவரும் தவறாகக் கருதிவிட வேண்டாம். அதை நான் வரவேற்கவில்லைதான். எனினும் இந்தப் பிரிந்து போகும் உரிமை மாநில மக்களுக்கு உண்டு என்ற உறுதியினை தந்தாக வேண்டும் என்பதை நான் நிச்சயமாக ஆதரிப்பவன் என்கிறார்.

இந்திய உபகண்டத்தின் தமிழ் நாட்டில் தோழர் லெனின் பிறந்திருப்பாராஞல் அவர் நிச்சயம் அறிஞர் அண்ணாவாகத்தான் மலர்ந்திருக்க முடியும். அதேபோல் அறிஞர்அண்ணா மாஸ்கோவில் பீட்டர்ஸ் பர்க் மாநிலத்தில் பிறந்திருப்பாராஞல் நிச்சயம் தோழர் லெனினாகத்தான் மலர்ந்திருக்க முடியும். ஏனெனில் அவர்கள் மக்களுக்காகவே வாழ்ந்த மாபெறும் மக்கள் தலைவர்கள்.

-டாக்டர் முனியப்பன் M.B.,B.S.



அந்த நாள்...

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை ராமனுதன் ஹால்ல ஒரு அற் புதமே நிகழ்ந்தது.

'ஒலிம்பிக்' பந்தயத்தில் இந்தியா பத்து தங்கப் பதக்கங்களை தட்டிக்கொண்டு வந்து விட்டதென்று இப்போது சொன்னால் எப் படியோ, அதுபோன்ற செய்தி அந்தக் காலத் தில் அது!

சொன்னவர்கள் இருவருமே உறுதியாக எதிரே இருந்த மேசை மீது குத்திச் சொன் னர்கள்.

கேட்டவர்கள் தங்கள் காதுகளை நம்பத் தயாராயில்லை. கதாநாயகனே புகழ் பெண்ணை ஏறிட்டுப் பார்க்கக் கூச்சப்பட்டவரைப் போல தலைகுனிந்தவாறே இருந்தார்.

புகழ்ச்சியை ஒளிமயமான தன் வருங்கால வாழ்விற்கு உரமாக்கிக் கொண்டாரே தவிர, அகங்கார விருட்சம் வளர அதனை வித் தாக்கிக் கொண்டாரில்லை.

சாதாரம் புகழ்மாலைகளா? ஒருவர்—கல்கி —தமிழ்நாட்டு பெர்னாட்சா என்றார். மற்ற வர் —வ.ரா— தலைசிறந்த சிந்தனையாளன் என்று பூச்சொரிந்தார். அவரோ ஏதுமறியா குழந்தையைப் போல்! கள்ளமில்லாச் சிரிப்பு அவரது உதட்டில்! அடக்கத்தில் தன் புலன் களை யனைத்துமே அடக்கினர் அவர்!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு நாள் மாலைப்பொழுது காரைக்குடி அழ கப்பா கல்லூரியில் உதயசூரியன் உதிக்கப் போவதாகக் கேள்வி. அதுவும் ஆங்கிலத்தில் தன் கதிர்களை வீசப்போவதாக அறிவிப்பு.

கல்லூரி தவழும் நிலையில் இருந்த கார ணமா, அன்றி வரும் சொல்லேரு உழ வனுக்கு அந்த (ஹால்) பூமி போதாது என்ற கருத்தோ, பரந்த நீண்ட கீற்றுக் கொட்டகையில்தான் விழாஏற்பாடு. இடம் பிடிப்பதே என் பாடு உன்பாடாகிவிட்டது.

அதோ அவர்! அவரைத் தமிழகத் திற்கு அறிமுகம் செய்த நிலை மாறி, அவரே தமிழகத்தை உலகத்திற்கு அறிமுகம் செய்ய முனைந்த காலகட்டம்.

புழுதிபடிந்த பழைய காரொன்றில் அவர் வந்திறங்குகிறார். நீண்ட பயணத்தின்களைப்பு. அவரது முகத்தில் நிழலாடுகிறது. நான்கு முழ வேட்டி, முகவைச் சீமையின் செங் காவி முத்திரை அழியாமல் — தலைப்பு ஏறி யும் இறங்கியும் உடலை மறைக்கும் பயனைப் பெறுகிறது. சட்டை மீது அவருக்குக் கவன மில்லை; சட்டைக்கும் பித்தான் மீது மதிப் பில்லை. அவரது துள்ளல் நடையின்வேகமோ பின்னல் வந்தவர்களுக்கு போட்டியாகிறது. கல்லூரி முதல்வர் திரு. அலெக்சாண்டர் ஞானமுத்து, அண்ணாவை உளமார வர வேற்று (D valuation) பணத்தின் மதிப்பு குறைப்பு என்பது பற்றி பேசுமாறு வேண்டு கிறார்.

சொற்பொழிவு எப்படி இருந்தது என்று நானெழுதுவதை விட, அந்தச் சொற் பெருக்கை முன்னால் அமர்ந்து ரசித்த இரு பேராசிரியர்கள் என்ன மதிப்பீடு செய்தனர் என்பதைச் சொன்னாலே போதும்.



நினைவுகள்

''நான் என்னமோ நினைத்திருந்தேன்!''

''ஆளை வைத்துப் பார்த்தால் இந்த 'மெக்காலே' இங்கிலீஷ் இப்படி அருவியாக் கொட்டுமென்று ஊகிக்க முடியலே''—

''வார்த்தைகள் கிடக்கட்டும் — அதை உருவாக்குகின்ற உள்ளமும் சிந்தனையுமே மிக உன்னதமானது''—

''கண்களைப் பாருமே! ஏதோவொரு குறு குறுப்பு — காந்த சக்தி!''

''எந்தக் கட்சியா இருக்கட்டும்—என்ன கொள்கையா இருக்கட்டும் — அறிவாளி அறிவாளிதான்!''

ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் — அதிகாலைப் பொழுது இப்போது அண்ணா தமிழகத்தின் முத

சந்தனத்தேவன்



அண்ணாவும் நூலகமும்

அண்ணா சிறையிலிருந்த நாட்களிலும் அவருக்குஉறுதுணையாக இருந்து வந்தது புத்தகங்கள்தாம். சிறைச்சாலையில் உள்ள நூலகங்களைக் கூட விடுவதில்லை. அண்ணா ஒருமுறை வழக்கு ஒன்றில் தாமே வாதாடுவதற்கு முயன்றபோது சிறைச்சாலையின் நூலகத்திலுள்ள கிரிமினல் சட்டப் புத்தகங்களை நன்கு படித்து, நீதிபதியே வியக்கும் வண்ணம் மேற்கோள் காட்டினார்.

''அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவையில் உறுப்பினராக இருந்த சமயம் — வட இந்தியப் பத்திரிகை நிருபர் ஒருவர் அண்ணாவைத் தாம் கண்ட காட்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் செய்தி கூர்ந்து கவனிக்கத்தக்கது.

''அண்ணா அவர்களைச் சாதாரணமாக எங்கேயும் பார்த்துவிட முடியாது! வராண்டாக்களில் நின்று கொண்டோ, வேறு எங்கோ அமர்ந்து பொழுதை வீணாகப் போக்கிக் கொண்டோ இருக்க மாட்டார். நூலகங்களில்தான் அவரைப் பார்க்கலாம் — அல்லாவிடில் நண்பர்களின் மத்தியில் பார்க்கலாம்'' — நிருபரின் இந்த வார்த்தைகள் அண்ணாவின் புத்தகப் படிப்பின் ஆர்வத்தை நமக்குத் தெரிவிக்கின்றன.

லமைச்சர் மதுரையில் முத்தண்ணன் வீட்டுத் திருமணம். திண்டுக்கல்லில் காலைப்பொழுது மலர்கிறது. ரயிலில் வரும் பயணம் செய்யும் முதலமைச்சருக்கு 'காபி' தயாராக காத்திருக்கிறது. அதனை 'ட்ரே'யில் எடுத்துச் சென்ற சர்வரோ அலமோதுகிறார்.

ஒரு போலீஸ்காரர் முதலமைச்சர் இருக்கிற வண்டியைக் காட்டியும், சர்வர் எட்டிப் பார்த்து விட்டு சந்தேகத்துடன் திரும்பி,

''என்னது! அவரா முதலமைச்சர்! துவைத்த பனியனோடு இருக்கிறார்!'' என்றார். அங்கே இருந்தவர்களுக்கு அவர்தான் முதலமைச்சர் அண்ணா என்று அவரை நம்ப வைக்க பெரும்பாடாகி விட்டது. அப்போது அந்தத் தொழிலாளி சொன்னார்:

''முன்பெல்லாம் மந்திரிங்க எக்மோர் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டா வழிநெடுக உள்ள பெரிய ஸ்டேஷன்களிலேயெல்லாம் வெந்நீர் கொதித்தபடி தயாரா இருக்கும். அப்படி ஒரே ஆர்ப்பாட்டமும் அமளியுமா இருக்கும். இந்த அடக்கமும் அமைதியும் யாருக்கு வரும் சார்!

''போன மாதம் பாருங்க, அண்ணாவுக்கு செங்கல்பட்டில் காபி 'சர்வ்' பண்ணியிருக்காங்க. காபியைத் திறந்தா அதிலே கரித்தூள் மிதந்திருக்கு. கூட இருந்த அதிகாரி சத்தம் போட்டிருக்கிறார். காபியைக் கொண்டு போனவருக்கு உயிரே இல்லை. அப்போது அண்ணா சிரித்தபடியே — 'ஈ எறும்புத்தான் எங்களுக்குப் பழக்கம். கரித்தூள் புதிய அனுபவம்' — என்று சொல்லி வேறு காபி கொண்டு வந்து தாருங்கள், என்றாராம்.

காங்கிரஸ் மந்திரிகளா இருந்தா எங்க கதி அதோ கதிதான்'' — என்றார் சர்வர்.

இதைக் கேட்டபோது, தலைவர் காமராசரிடம் திருச்சியில் அகப்பட்டு விழித்த நகைத் தொழிலாளியை நான் நினைத்துக் கொண்டேன்.

பதவி வந்ததும் அவர் குணம் மாறவே இல்லை. அடக்கமும் எளிமையும் அவரது நிழலாகின. அவருக்கென்று ஒரு சாதி—அது தமிழ் சாதி!

அவருக்கென்று ஒரு உறவு — அது கழகக் குடும்பங்களே!

பணத்தால் பஞ்சு மெத்தை வாங்கலாம்—தூக்கத்தை வாங்க இயலுமா?

புத்தகம் வாங்கலாம் — ஆனால் மூளையையும் வாங்க முடியுமா?

உணவை வாங்காமல் — ஆனால் பசி! மருந்தை வாங்கலாம் — உடல் நலத்திற்கு உத்தரவாதம் உண்டா?

ஜனநாயக அமைப்பில் எத்தனையோ தலைவர்கள் தோன்றலாம் ஆனால் அண்ணாவைப் போல்.....இதற்கு மேல்....











அண்ணை நிறுத்திய பாட்டு

ஆ. சங்கரய்யா

நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் வீட்டுப் புதுமனை புகுவிழாவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் 50-வது பிறந்ததின விழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்த விழா ஒரு மாநாடு போன்று இருந்தது.

மாலையில் இசைச் சித்தர் சிதம்பரம் எஸ். செயராமன் அவர்களின் இசை விருந்து நடைபெற்றது.

பேரறிஞர் அண்ணா அவர்களும் முன்னணித் தலைவர்களும், ஏராளமான பொது மக்களும் இசை விருந்தைப் பருகிக் கொண்டிருந்தார்கள்.

''வரவுக்கு மேலே செலவு செய்யாதே'' என்ற பாட்டை இசைச் சித்தர் பாட ஆரம்பித்தார். உடனே அறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பாட்டை நிறுத்தும்படி கூறினார். இது எல்லோரையும் வியப்படையச் செய்தது. முன்னணித் தலைவர்களும், கூடியிருந்த மக்களும் அண்ணாவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அண்ணா அவர்கள் சுற்று முற்றும்பார்த்து, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களைக் கூப்பிடும்படி கூறினார். உடனே இராமசாமி அண்ணா அவர்கள் அருகில் வந்து அமர்ந்தார். இசைசித்தரை அதே பாட்டை மீண்டும் பாடும்படி அறிஞர் அண்ணா கூறினார்கள். 'வரவுக்கு மேல் செலவு செய்யாதே' என்ற பாட்டை இசைச் சித்தர் பாடியதும் அறிஞர் அண்ணா அவர்கள் நடிப்பிசைப் புலவரை கேலிச் சிரிப்போடு ஒரு பார்வை பார்த்தார். நடிப்பிசைப் புலவர் வெட்கமடைந்து தலை குனிந்தவாறு இருந்தார். கூடியிருந்த மக்களும் முன்னணித் தலைவர்களும், கை யொலி எழுப்பிச் சிரிக்க ஆரம்பித்தனர். அந்தச் சிரிப்பு அடங்க பல நிமிடங்களாயிற்று.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தம்மைச் சார்ந்தவர்கள்-தம்முடன் இருப்பவர்கள் நன்றாக வாழ வேண்டும், நல்ல முறையில் இருக்க வேண்டும் என்பதில் மிக அக்கறை உடையவர். அதற்கு எடுத்துக்காட்டுதான் மேலே கண்ட நிகழ்ச்சி.

சுயமரியாதைத் கொள்கைகள் நாட்டில் பரவி மக்களிடையே செல்வாக்குப் பெற்று வளர ஆரம்பித்த காலம். அந்தக் காலத்தில் அதற்கு எதிர்ப்புக்கள் பல வழிகளிலிருந்தும் கிளம்ப ஆரம்பித்தன.

'மதவாதிகள், மாநாடு' 'ஆத்திகர்கள் மாநாடு', 'வைதிகர்கள் மாநாடு', 'சனாதனிகள் மாநாடு', 'வருணாசலனிகள் மாநாடு',—என்



றெல்லாம் கூடி சுயமரியாதை இயக்கத்தை மிகத்தீவிரமாக எதிர்க்க ஆரம்பித்தார்கள்.

சென்னையில் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி, சர்.சி.பி. இராமசாமி அய்யர், சத்திய மூர்த்தி போன்ற பிற்போக்குத் தலைவர்கள் சுயமரியாதை இயக்கத்தையும், அதன் சீர்திருத்தக் கொள்கைகளையும், தீவிரமாக எதிர்க்க ஆரம்பித்தார்கள். சென்னையில் நடைபெற்ற ஒரு ஆத்திக மாநாட்டில் சுய மரியாதை இயக்கத்தின் கலப்பு மண இலட்சியங்களையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும் எதிர்த்து டி.ஆர். வெங்கட்டராம சாஸ்திரி பேசியிருந்தார். அதில் பழமைக் கருத்துக்கள் நாட்டில் இருக்க வேண்டும் என்றும், புதுமைக் கருத்துக்கள் என்ற பெயரால், சீர்திருத்தம் என்ற பெயரால் மதத்திற்கும் சாதிக்கும் விரோதமாகச் செல்லுகின்ற போக்கைத் தடை செய்ய வேண்டுமெனவும் பேசியிருந்தார். இதைப் பார்த்ததும் தந்தை பெரியார் அவர்களுக்கு அளவிட முடியாத கோபம். உடன் பதிலிறுத்தாக வேண்டும்என்ற முறையில் பெரியார் கட்டுரை எழுத ஆரம்பித்தார்.

அச்சுக் கோர்க்கும் பிரிவிலிருந்து அண்ணு ஒரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளார் என்று பெரியாரிடம் கூறி அவர் கையில் அவர் கட்டுரையைக் கொடுத்தார்கள். அந்தக் கட்டுரையில் பேரறிஞர் அண்ணு அவர்கள் வெங்கட்டராம சாஸ்திரிக்கு பதில் கூறும் வகையில் பழமையைச் சாடி, மதம், சாதி என்ற பெயரால், வருணசலம், தருணிகள் செய்துவரும் பித்தலாட்டங்களை விரிவான முறையில் ஆதாரங்களோடு விளக்கியிருந்தார்.

அத்தோடு, அதே கட்டுரையில் வெங்கட்டராம சாஸ்திரியாரைப் பார்த்து, சில கேள்விகள் கேட்டிருந்தார்.

''சீர்திருத்தக் கொள்கைகள், கலப்பு மணங்கள், சுய மரியாதை இலட்சியங்கள் இவைகளைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கும் சாஸ்திரியாரே, உங்கள் வீட்டில் சுயமரியாதை இலட்சியங்கள், கலப்புமணக் கொள்கைகள் புகுந்திருக்கின்றனவே, அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?'' ''சனாதன தர்மமும், வைதிக மனப்பான்மையுடைய உங்களது மகன் இராமமூர்த்தி பார்ப்பனர்அல்லாத இனத்தைச் சார்ந்த நல்லமுத்து அம்மாள் என்ற டாக்டர் முத்து லட்சுமி அம்மையாரின் சகோரியாரை கலப்புமணம் செய்து கொண்டு சுயமரியாதைக் கொள்கைகளை உங்கள வீட்டிலேயே புகச் செய்துவிட்டாரே.

மக்கள் இன்று சீர்திருத்த பாதையினில்தான் செல்கிறார்கள். அதைத் தடுக்க முடியாது'' என அறிஞர் அண்ணு எழுதியிருந்தார்கள். இதைப் படித்ததும். தந்தை பெரியார் டெரும் ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

தந்தை பெரியார் என்ன எழுத வேண்டுமென நினைத்திருந்தாரோ, அதனை அழகான முறையில், ஆணித்தரமான வாதங்களால், சரித்திரச் சான்றுகளால் அண்ணு அவர்கள் தனக்கே உரித்தான பாணியில் எழுதியிருந்தார். பெரியார் அவர்கள் அண்ணு அவர்களை கட்டிப் பிடித்துத் தம்முடைய மகிழ்ச்சியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

கண்ணனும் அண்ணனும்



பாரதக் கதையில் திரௌபதி துரியோதனனால் மானபங்கப் படுத்தப்பட்ட போது இரு கைகளையும் தூக்கி கண்ணு! கண்ணு! என்று கண்ணீர் விட்டு அலறினாள் – கண்ணன் காப்பாற்றினான் என்று கூறுவார்கள்.

அது போல காங்கிரஸ் அரசாங்கம் ஏற்படுத்திய பஞ்சத்தால் – கொடுமையால் – மக்கள் "அண்ணு – அண்ணு" என்று கண்ணீர் விட்டு அலறினர்கள் அண்ணு ஆட்சிக்கு வந்தார் துயர்படும் மக்களைக் காப்பாற்றினர்.

மூக்கையாத் தேவர்
பார்வர்டு பிளாக் தலைவர்



அண்ணை கேட்கிறார்

கி.வீரமணி

பகுத்தறிவு மாமேதை பேரறிஞர் அண்ணாவின் சிந்தனைகள் எப்போதும் சமுதாயப் புரட்சி என்பதையே மய்யமாக வைத்துச் சுழன்ற ஒன்றாகும். பச்சையப்பன் கல்லூரியில் இருந்து கொண்டு, பச்சை அட்டைக் 'குடி அரசி'னை பாட நூல்களோடு, தனி விருப்பம் கொண்ட விருப்பப் பாட நூலாக்கிக்கொண்டே தமிழ்ச் சமுதாயத்தின் சமூகப் புரட்சிக் கர்த்தாவாம் தந்தை பெரியார் அவர்கள் பால் ஈர்க்கப்பட்டவராக அண்ணா அன்று ஆன நிலையிலிருந்து இறுதி மூச்சடங்கும் வரையில் அவர் இந்த லட்சியத்தினின்று ஒரு அணு அளவில் கூடப் பிறழ்ந்ததே இல்லை!

இன்று சமுதாயச் சீர்திருத்தம் பேசுவது எளிது. ஏன் சிலருக்கு லாபமானதுங் கூட. ஆனால் அன்று....?

வீட்டிலிருந்து நாட்டுக் கோடி வரை எங்கும் எதிர்ப்பு, ஏளனம் என்ற நிலைமைதானே இருந்தது?

வளமை அறியா ஒரு குடும்பத்தில், தலையெடுத்து, கல்லூரி சென்று படித்துப்பட்டம் பெற்ற நிலையில், பதவியும், உத்தியோகமும் மிகவும் 'சல்லீசாக'க் கிடைக்கும் நிலை இருந்த அக்காலத்தில் அதனைக் கவனியாது, லட்சியம் செய்யாது, வீட்டோருக்கு ஆற்ற வேண்டிய பணியை விட நலிந்த நம் நாட்டோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஏராளம் என்பதை யறிந்து, கசப்பு மருந்து தருவதானாலும், மக்களின் எதிர்ப்பை மலையெனப் பெறுபவர் ஆனாலும் தந்தை பெரியார் தான் தனது ஒரே தலைவர் என்று சென்றவர் அவர்தம் சமூகப் புரட்சிஉணர்வால் அன்றி வேறு என்ன?

அரசியலோ, பதவியோ அவருக்குத் தேவையென அந்த நாட்களில் அவர் கருதியிருந்திருப்பாரேயானால், அவர் ஒரு கதர் அணிந்த தேசியத்தின் பிரச்சார பீரங்கியாக, சுயராஜ்யத்தின் சொகுசினைத் தீட்டிக் காட்டிடும் பேனா மன்னராக அல்லவா ஆகியிருப்பார்!

அவருக்கு அதனால் ஆதாயம் மட்டுமல்ல; அகில உலகமும் உடனே கண்டு வியக்கும் அளவுக்கு அபார விளம்பரமும் கூடக் கிட்டியிருக்கும் என்பதில் யாருக்கும் அய்யமிருக்கிறதோ! இலுப்பைப் பூக்கள் சர்க்கரையாக இனிக்கையில், உண்மையான சர்க்கரையின் மதிப்புப் பெருகியிருக்கும் என்பதில் எவர்தான் இரண்டு கருத்தினைக் கூற முடியும்?

என்றாலும் அண்ணா அரசியல் பக்கம் செல்ல மனமில்லாமல், மற்றவர் நுழைய அஞ்சும், புலிவாயில் தலையை விடும் சர்க்கஸ் வித்தைக்காரரின் சீடகோடியாகச் சேர்வதிலேயே தனித்த ஒரு இன்பங் கண்டார்!

வற்றாத அவர்தம் சிந்தனை ஊற்று, இந்தப் பணிக்காகவே அவரது ஆற்றல்களை அத்தனையையும் தொகுத்துத் தருவதாக அமைந்துவிட்டது!

அண்ணாவின் இறுதி நாட்களில் அவர் விருப்பத்திற்கும், இயல்புக்கும் மாறான வகையில் அவர் அரசியலில் முழு ஈடுபாடு காட்ட வேண்டியவரானார் என்பது உண்மைதான் என்றாலும் அவர் தாம் கொண்ட சமுதாயப் புரட்சிக் கொள்கைகளை, லட்சியக் கனவை செயலாக்க -அதற்கு முன்னர் அவர் நாடகத்தை திரைப்படத்தைப் பயன்படுத்தியது போலவே, -அரசியலையும் (ஆட்சியையும்) பயன்படுத்தினார் என்று சொன்னால் அது மிகையாகாது.

சில சந்தர்ப்பங்களில் சமூக சீர்திருத்தம் பேசும் அரசியல் வாதிகளையே கண்டு பழக்கப்பட்ட நம் நாட்டுச் சரித்திரம், பேரறிஞர் அண்ணாவின், அவர் தம் தம்பிமார்களின் (பரம்பரை) மூலம் புதியதோர் ரகத்தினைக் கண்டு வியந்து வருகிறது!

சமூக சீர்திருத்தத்திற்காக அரசியலுக்குச் சென்று வெடித்திடும் இரட்டைக் குழல்களில் ஒன்று அந்தக் குழல் என்பதை இதயகீதமாகக் கொண்ட



''தாய் மொழியாக இந்தியைக் கற்றுக் கொண்டவனிடம் பள்ளியில் மட்டும் படிக்கும் நாம் போட்டி போட முடியாது! தாய்ப் பாலைக் குடித்த குழந்தைக்கும் — புட்டிப் பால் குடித்த குழந்தைக்கும் உள்ள வேற்றுமைதான் இந்திக்காரனுக்கும் நமக்கும் உள்ள வேற்றுமை.

குழந்தை எலும்பும் தோலுமாய் மாறத் தொடங்கினால் என்ன புட்டிப் பாலா என்று கேட்கிறோம்.

ஊருக்கு வந்தவன் இளைத்திருந்தால் — 'என்ன ஓட்டல் சாப்பாடா?' என்கிறோம்.

அதுபோல் — பள்ளியில் இந்தி மொழி படிப்பவன் போட்டியில் இளைத்தேகாணப் படுவான்! இதை உணர்ந்து கொள்ளாமல் இந்திக்கு ஆதரவு தந்தால் கண்ணிருந்தும் குருடர்களாய் — வாயிருந்தும் ஊமைகளாய்ப் போய் விடுவோம்!''

— அறிஞர் அண்ணா

வர்கள் அண்ணாவும்! அவர் வழிவந்தோரும்!

ஆட்சி இவர்களது இலட்சியமல்ல; லட்சியங்களை நிறைவேற்ற அது ஒரு சக்திவாய்ந்த கருவி என்றே நினைத்து அரசியலை அணுகுபவர்கள்.

அண்ணாவைப்பற்றி, கலைஞரைப்பற்றி, தி. மு. க.வைப் பற்றி மதிப்பீடு செய்யும் எவரும் - இந்த அம்சத்தை மறந்துவிட்டாலோ, அல்லது மறைத்துவிட்டாலோ எந்தப் பயனும் விளையாது.

சட்ட மன்றத்தில் அண்ணா பேசியபோதெல்லாம் சமூகப் புரட்சிக் கருத்துக்கள் 'நயாகரா' நீர்வீழ்ச்சியாகத்தான் வீழ்ந்தது! இத் தி. மு. க. அமைச்சரவையே பெரியாருக்கு அளிக்கப்பட்ட காணிக்கை என்பதன் தத்துவமே சமுதாயப் புரட்சி வீரர்கள் தான் நாங்கள் என்பதை அறிவித்து, தனி சரித்திரக் குறிப்பைப் படைத்ததல்லாமல் வேறு என்ன?

இன்றைக்கு 25 ஆண்டு கட்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்தம் வலிவும் பொலிவும் வாய்ந்த சிந்தனைச் சோலையான 'திராவிட நாடு' ஏட்டில் எழுதியதொரு கட்டுரையில், பகுத்தறிவுக் கருத்தை எவ்வளவு மடை திறந்தாற் போல் காட்டியிருக்கிறார் என்பது மிகவும் சுவையானது என்பதால் அதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்ணாவின் பகுத்தறிவு அருவி எவ்வளவு அருமையாக பாய்கிறது என்பதைப் பார்ப்போம்.

25 ஆண்டுகட்கு முன்பு எழுதிய எழுத்துக்கள் தான் என்றாலும் இன்று கூட அது தேவை அற்ற ஒன்றாக ஆகிவிடவில்லை!

அண்ணா அந்த கட்டுரைக்குத் தந்த தலைப்பு ''எண்ணிப்பார்.. கோபியாமல்!'' என்பதாகும்!

கட்டுரை துவங்குகிறது! (அவர் எழுதிய முறைப்படி அப்படியே கீழே தரப்படுகிறது.)

''எலக்ட்ரிக்
ரயில்வே
மோட்டார்
கப்பல்
நீர்மூழ்கிக் கப்பல்
அதைக் கண்டுபிடிக்கும் கருவி.
டார்பீடோ
அதனின்றும் தப்பும் கருவி.
விஷப்புகை
அதைத் தடுக்கும் முகமூடி.
இன்ஜக்ஷன் ஊசி.
இனாகுலேஷன் ஊசி.
இவைகளுக்கான மருந்து.
ஆப்ரேஷன் ஆயுதங்கள்.
தூரதிருஷ்டிக் கண்ணாடி.
ரேடியோ.
கிராமபோன்.
டெலிபோன்.
தந்தி.
கம்பியில்லாத் தந்தி.
போட்டோ மெஷின்.
விமானம்.
ஆளில்லா விமானம்.
டைப் மெஷின்.
அச்சு யந்திரம்
ரசாயன சாமான்.
புதிய உரம்
புதிய விவசாயக் கருவி.
சுரங்கத்துக்குள் போகக் கருவி.
மலை உச்சி ஏற மெஷின்.
சந்திர மண்டலம் வரை போக விமானம்.
அணுவைப் பிளக்கும் மெஷின்.

இன்னும், எண்ணற்ற, புதிய, பயன்தரும், மனிதனின் கற்பனைக்கே எட்டாதிருந்த, மனிதனின் உழைப்பைக் குறைக்கும் முறைகள், கருவிகள், பொருள்கள், ஆகியவைகளைக் கண்டு பிடித்தவர்கள், எல்லாம், இன்னமும், கண்டு பிடிக்கும் வேலையிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் எல்லாம்,

சரஸ்வதி பூசை
ஆயுத பூசை.
கொண்டாடதவர்கள்!!

அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ், இந்தியாவுக்கு வழிகண்டு பிடித்த



வெற்றி பெறுக என அண்ணனுக்கு நெற்றித் திலகம் இடுகிறது தாய்க்குலம்

வாஸ்கோடிகாமா, இந்தியாவை ஆதியில் ஜெயித்த அலெக்சாண்டர், இவர்களெல்லாம்,

ஆயுதபூசை

செய்தவர்களல்ல! நவராத்திரி கொண்டாடினவர்களல்ல!

நூற்றுக்கு நூறுபேர் என்ற அளவில் படித்துள்ள மேலைட்டிலே

சரஸ்வதி பூசை இல்லை!

ஓலைக் குடிசையும், கலப்பையும், ஏரும், மண்வெட்டியும், அரிவாளும் இரட்டை வண்டியும், மண்குடமும் உனக்குத் தெரிந்த கண்டுபிடிப்புகள்!

தீக்குச்சிப் பெட்டிகூட நீ செய்ததில்லை.

கற்பூரம் கூட நீ செய்ததில்லை.

கடவுட் படங்களுக்கு அலங்காரத்துக்குப் போடும் கண்ணாடி கூட, சரஸ்வதி பூசை அறியாதவன் கொடுத்தது தான். நீ, கொண்டாடுகிறாய்

சரஸ்வதி பூசை

ஆயுத பூசை

ஏனப்பா, கொஞ்சம் யோசிக்கக் கூடாதா?

மேலைட்டான், கண்டுபிடித்துத் தந்த அச்சுயந்திரத்தின் உதவி கொண்டு, உன் பஞ்சாங்கத்தை அச்சடித்துப் படித்து, அகமகிழ்கிறாயே!

அவன் கண்டுபிடித்த ரயிலில் ஏறிக்கொண்டு, உன், பழைய, அற்புதம் நடைபெற்ற திருத்தலம் போகிறாயே!

அவன் கண்டுபிடித்துக் கொடுத்த ரேடியோவிலே, உன் பழைய பஜனைப் பாட்டைப் பாட வைத்து மகிழ்கிறாயே!!

ஒரு கணமாவது யோசித்தாயா, இவ்வளவு பூசைகள் செய்து வந்த, நாம், நமது மக்கள், இதுவரை, என்ன, புதிய, அதிசயப் பொருளைப் பயனுள்ள பொருளைக் கண்டுபிடித்தோம், உலகுக்குத் தந்தோம், என்று யோசித்துப் பாரப்பா! கோபப்படாதே! உண்மை, அப்படித்தான், கொஞ்சம் நெஞ்சை உறுத்தும். மிரளாமல், யோசி - உன்னையு மறியாமல் நீயே சிரிப்பாய்.

(திராவிடநாடு 26-10-1947)

—அண்ணாவின் பகுத்தறிவு அம்புகள் மூட நம்பிக்கையைத் துளைத்து துவளச் செய்ய சரமாரியாகக் கிளம்பிவிட்டன!

ஆம், அண்ணா இன்றும் கேட்கிறார்! நாளையும் கேட்பார்; இனிச் சமுதாயம் மாறும் வரைக் கேட்டுக் கொண்டேதான் இருப்பார்!

இதற்கு விடை காணுவது தான் இன்றைய தலைமுறையின் தலையாயப் பணி!

வாழ்க அண்ணா!
வளர்க பகுத்தறிவு!

Trichy Distilleries & Chemicals Limited

17/4, NUNGAMBAKKAM HIGH ROAD,

POST BOX No. 3327 MADRAS 34.

Manufacturers of:

INDUSTRIAL ALCOHOL

AND

CO^2 GAS.

Factory at:

SENTHANNIPURAM, TIRUCHIRAPALLI-4.

Telephone: 86001
Telegrams: "FINESUGAR" | **MADRAS.**

தமிழ்நாடு அரசு
தொழில் வணிகத்துறை

உங்கள் இல்லம் கவின்மிகு கலை எழிலுடன் திகழ தமிழ்நாட்டு கைவினைஞர்களின் திறன்மிக்க படைப்புகள் உதவுகின்றன

கவர்ச்சிமிக்க வெண்கல குத்துவிளக்குகள், கவின்மிகு வெண்கல கலைப் பொருள்கள், விக்கிரகங்கள்—கற்சிலைகள், மர, தந்த, நுட்ப கைவினைப் பொருட்கள், ஜப்பானிய மாதிரி அழகு பொம்மைகள், கண்கவர் கலைப்பொருட்கள், நெட்டி, கோயில் உருவகங்கள், தஞ்சாவூர் கலைத் தட்டுகள், இசைக் கருவிகள், கற்றுழை, சடம்புநார்—விரிப்புகள், முடிச்சு விரிப்புகள், அவனியில் சிறந்த பத்தமடை உயர்ரக பாய்கள் சிமை வெண் களிமண் பொருட்கள்மற்றும் எண்ணற்ற கைவண்ணப் பொருட்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன. உங்கள் கலை உணர்வு உங்கள் இல்லத்தில் மிளிர தமிழ் நாட்டு கைவினைப் பொருட்களை வாங்குங்கள்

வருகை தருக :

குடிசைப் பொருட்கள் விற்பனை நிலையம்,
தொழில் வணிகத்துறை,
166,—ஏ, அண்ணாசாலை,
சென்னை—2. தொலைபேசி: 84821.

இறைவன்



வங்கக் கடலே தாலாட்டு—தமிழ்
வண்ணம் உறங்க தாலாட்டு
எங்கள் தலைவனைச் சீராட்டு—தங்க
எழில் நிலவே நீ தாலாட்டு—நீல
(வங்கக்கடலே)

வையம் வாழ்த்திய நாவலனை—நாட்டை
வாழவைத்த எங்கள் காவலனை
ஐயம் அகற்றி வைத்தஅறிஞனை—எவரும்
அண்ணலென அழைக்கும் அரசனை—தங்க
(வங்கக் கடலே)

கடமை கண்ணியம்–கட்டுப்பாடு— வகுத்த
கலைஞனைக் கவிதையில் தினம்பாடு
மடமை கள் மாய வேபோர் தொடுத்தான்
—அந்த
மயக்கத்திலேவந்துதான்படுத்தான்–அதனால்
(வங்கக்கடலே)

தம்பிகள் கோடிபடைகொண்டான்—முதல்
தமிழ்மகன் இவனே செயங் கொண்டான்
அமுதாய் கோடிசலை தந்தான்—அந்த
அயர்விலே தானம்மாஉறங்கவந்தான்–நல்ல
(வங்கக் கடலே)

புகழில் மயங்கா தலை வனம்மா—சொற்
போருக்கு அஞ்சாத புல வனம்மா
சுகத்தைத் துறந்த அண்ணனம்மா–எங்கள்
சுகமெலாம் அவன்தந்த வண்ணமம்மா —
—கோல
(வங்கக்கடலே)

சிறைகள் அவனுக்குச்சோலையம்மா-கொடும்
சிக்கலிலும் சிரிக்கும் ஏழையம்மா
மறைகள் அவனுக்கு மருந்தம்மா—மக்கள்
மலர்ச்சிரிப்பேநல்ல விருந்தம்மா—அன்பு
(வங்கக் கடலே)

வணங்கா முடியையும் வணங்க வைத்தான்
—திட்டம்
வாழ்ந்திட ஏழைக்கே தீட்டி வைத்தான்
இணங்காதவரையும் இணங்கவைத்தான்
—எங்கள்
இறைவனும் இவன்போல்தானி ருப்பான்—
—தாயே
(வங்கக்கடலே)

-வேங்கடதாசன்.

வருமான வரி விலக்கு

எங்கள் கூட்டுறவு சங்கத்தில் நிரந்தர டிபாசிட் திட்டத்தின் கீழ் உங்கள் பணத்தை சேமித்தால் வருடத்திற்கு வட்டி மூலமாக ரூ 3,000/= வரை வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

உங்கள் பணத்தை **டி. யு. சி. எஸ்.** ஸின் நிரந்தர டிபாசிட்டில் சேமியுங்கள்

1 வருடத்திற்கு	7%
2 வருடங்களுக்கு	7½%
3 வருடங்களும் அதற்கு மேலும்	8%

வட்டி ஆறு மாதத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படுகிறது

விபரங்கட்கு அணுகுங்கள்:

செயலாளர்

டி. யூ. சி. எஸ்.

ESTD. 1964

109, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

தொலை பேசி : 86077-82085

எஸ். வி. வேலு. எம்.சி.
தலைவர்

எம். கோபால கிருஷ்ணன்.
செயலாளர் பொறுப்பு

peruma



நெஞ்சம் ஒன்று நினைவுகள் நான்கு

கே.ஏ.கிருஷ்ணசாமி. எம்.பி.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயர் உச்சரிக்கப்படும் போதெல்லாம் நெஞ்சில் ஆர்த்தெழும் நினைவுகளும் உணர்வுகளும் ஆயிரமாயிரம். ஒய்வென்பதே அறியாக் கடலலைகளென அவை ஒன்றன் பின் ஒன்றாய் வந்து கொண்டே யிருக்கின்றன; வந்து வந்து மோதி நெஞ்சகம் முழுவதையும் நெகிழ்ந்து போய்விடச் செய்கின்றன.

எவ்வளவோ எழுதத்தான் நினைக்கின்றேன் எதை எழுதுவது, எதை விடுவது என மலைப்புத் தட்டுகிறது. ஒரு சில நினைவுகள் — அண்ணா என்னுள் விளைவித்த சிலிர்ப்புகளை வெளிப்படுத்தும் ஒரு சில நினைவுகளைப் பதிவு செய்தால் போதும். அதுதான் சாத்தியமும் கூட. அண்ணா எனும் மகத்தான சக்தியின் உயரிய வடிவங்கள் சிலவற்றைக் காட்ட அவையே போதுமானவை என எனக்கு நானே ஆறுதல் கூறிக்கொள்கிறேன்.

நம்மில் ஒவ்வொருவரின் நிலையும் இதுதானே!

நினைவு ஒன்று

1965—ம் ஆண்டு ஜனவரி 25—ம் நாள்...

'பதினைந்து ஆண்டுகளோடு ஆங்கிலத்திற்கு ஆட்சி மொழி எனும் அந்தஸ்து தீர்ந்துவிட வேண்டும்; அதன் பிறகு இந்தி அந்த இடத்தில் அமர்த்தி வைக்கப்பட வேண்டும்' என்று அரசியல் சாசனம் குறித்த காலக்கெடு முற்றுப்பெற்ற நாள்; தமிழகம் முழுவதும் குமுறும் எரிமலையென உள்ளுர மனம் குமைந்து கொண்டிருந்தது. அடுத்து என்ன? என்ற கேள்விக்குறி மானமுள்ள தமிழராய்ப் பிறந்த அனைவர் நெஞ்சத்திலும் ஆவேசத்துடன் முளைத்தெழுந்து விட்டிருந்த நாள் அது...

எதையும் முதலில் உணர்வதும், எதற்கும் முதலில் ஆயத்தமாவதும் மாணவர் சமுதாயந்தானே.

அரசியல் சாசனத்தின் அதிகாரப்பூர்வமான ஆசியோடும், சட்ட சம்மதம் பெற்றும் இந்தி அனைத்து இந்தியாவின் ஆட்சி மொழியாக அரசுக் கட்டிலில் ஏறி அமரும் அநீதிக்கு எதிர்ப்புக் காட்டிட பொழுது புலர்ந்தது. வரவிருக்கும் குடியரசுத் திருநாளைத் துக்க நாளாகக் கடைபிடிக்குமாறு கழகம் கட்டளை பிறப்பித்து விட்டிருக்கிறது. கழகத் தோழர்கள் அனைவரும் அவரவர் இல்லத்தில் கறுப்புக் கொடியினை ஏற்றிட வேண்டும் என்று அண்ணா ஆணையிட்டு விட்டிருக்கிறார்.

குடியரசு நாளை துக்க நாளாகக் கருத வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது ஏன் என்பதை அன்று மாலை மேடை ஏறிப் பிரகடனம் புரியவும் முடிவெடுத்திருக்கிறார் அண்ணா...

ஆனால் எப்போதுமேமுதல் பாதிப்பிற்குள்ளாகும் மாணவர் சமுதாயம் கட்சி வேறுபாடுகளையெல்லாம் களைந்தெறிந்து மொழிப் போர்க்களம் புகப் புறப்பட்டு விட்டது!

சென்னை நேப்பியர் பூங்காவில் கட்சி பேதமின்றி அனைத்து மாணவர்களும் மொழி உணர்வு எனும்ஒரே சக்தியால் கட்டுண்டு இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடுவது குறித்துக் கூடிப் பேசுகிறார்கள்.

அந்த நேரம் பார்த்து தொலைபேசி என்னை அழைக்கிறது.

பரபரப்புடன் ரிசீவரை எடுத்து செவியிலும் வாயிலுமாகப் பொருத்திக் கொள்கிறேன்.

''கிட்டுதானே?'' — கரகரப்பான குரல் கனிவோடும் சிறிது கவலையோடும் விசாரிக்கிறது.

அண்ணா!

அண்ணனின் பாசக் குரல்

அது! நான் மேலும் பரபரப் படைகிறேன்.

''ஆமாம் அண்ணு'' என் கிறேன்.

''தம்பீ நேப்பியர் பூங்கா வில் மாணவர்கள் கூடிப் பேசுகிறார்களாம். தெரியுமல் லவா?''

''ஆமாம். அண்ணு, கட்சி வேறுபாடுகளை எல்லாம் கூட மறந்து ஓர் இன உணர்வு டன் ஒன்றுகூடிப் பேசுகிறார் கள்.''

''அவர்கள் உணர்ச்சிவசப் பட்டிருக்கிறார்கள். அவர்க ளுக்கோ அவர்களால் மற்ற வர்களுக்கோ எவ்வித ஊறும் ஏற்பட்டு விடக் கூடாது. விரும்பத்தகாத நிகழ்ச்சி எது வும் நடந்து விடலாகாது.''

நான் பதிலிறுக்கவில்லை. அண்ணுவே தொடர்ந்துபேசி னார்:

மாணவர்கள் எத்தகைய மனநிலையுடன் இருக்கிறார் கள். எந்தவிதமான முடி வுக்கு வருகிறார்கள் என்ப தெல்லாம் உடனுக்குடன் நமக்குத் தெரிந்தாகவேண் டும். அப்படித் தெரிந்தால் தான் அதற்கேற்ப அணை போட முடியும். தடம்புரண்டு விடாமல் வழி நடத்திக் கொண்டு போகவும் இயலும். நீ உடனே நேப்பியர் பூங் காவுக்குப் புறப்பட்டுப்போய் அங்கு நடப்பதைக் கவனி. மாணவர் கூட்டத்தின் போக் கையும் அவ்வப்போது, ஏற் படும் திருப்பத்தையும் எடுக் கப்படும் முடிவுகளையும் ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை தொலைபேசிமூலம் எனக்குத் தெரிவித்துக் கொண்டிரு மாணவர்கள் அவசரப்பட்டு எந்தவிதமான இன்னலுக்கும் தங்களை ஆட்படுத்திக்கொண்டு விடக்கூடாது உணர்ச்சி வேக தில் பொங்கியெழுந்து நிற் கும் மாணவர் சமுதாயத்தை ஒரு கட்டுக்குள் நிலைநிறுத்த நாம் வழி கண்டாகவேண்டும் புரிகிறதா கிட்டு?''

''புரிகிறது அண்ணு - சரி'' நான் விரைந்து புறப்படுகி றேன். என்னோடு தோழர் ராஜாவும் வருகிறார். ஆம், இப்போது பவானி சட்ட மன்றத் தொகுதி உறுப்பின ராக இருக்கிறாரே அந்த ஏ. எம். ராஜா எம்.எல்.ஏ. தான்.

அண்ணுவின் கட்டளைக் கிணங்க நேப்பியர் பூங்கா விற்குச் சென்று மாணவர் கூட் டத்தின் போக்கையும் நிலைமை களையும் ஒரு மணி நேரத் திற்கு ஒரு முறை அண்ணு வுக்கு அறிவித்துக்கொண்டி ருந்தேன்.

அடையாறில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அவர் களின் இல்லத்தில் இருந்த வாறு என்னிடமிருந்து தக வல்களை உடனுக்குடன் கேட் டறிந்து கொண்டிருந்தார் அண்ணு!

இளைய தலைமுறையின் நல னில் - நாட்டின் வருங்காலப் படைப்பாளிகளின் வாழ்வு வளமாக அமைய வேண்டுமே என்பதில் - நம் அண்ணுவுக்கு இருக்கும் கவலைதான எத் துணை பெரிது என உள்ளூற வியந்தவாறே தகவல்களை அண்ணுவுக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன் நான்!

அன்றைய தினமே நெஞ் சைப் பதறவைக்கும் பயங் கரச் செய்தியொன்றும் எங் களுக்குக் கிடைத்தது.

அண்ணுவின்பால் பேரன் பும், பெருமதிப்பும், கழகத் தலைவர்கள் நலனில் நாட்ட மும் கொண்ட போலீஸ் அதி காரி ஒருவர்தான் அந்தச் செய்தியினை அறிவித்தார்.

கழகம் கடைப்பிடிக்கவிருக் கும் துக்கநாளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு 'சுதந் திரம் காக்கும் படை' என்ற பெயரில் காங்கிரசைச்சேர்ந்த குண்டர்கள் கும்பலொன்று அண்ணு பேசவிருக்கும் கூட் டத்தில் கலவரம் விளைவிக்கத் திட்டமிட்டிருக்கிறதாம். அண்ணுவின் மீது அக்கினித்

அண்ணு சொன்னார்

''மாற்றான் தோட்டத்து மல் லிகை எனபதால் மணக்காது என எண்ணுபவனல்ல நான்,'' என்றும், ''தான் பெற்றெடுத்த குழந்தையை முத்தமிடவோ சீராட்டவோ, பாராட் டவோ எனக்குத்தான் உரிமை உண்டு; மற்றவர்களுக்கு உரிமை இல்லை என்று ஒரு தாய் சொல்லு வாளானால் அந்தக் குழந்தை நோஞ் சானாகத்தான் போகுமே தவிர, சிறப்பாக இராது. அதை உணர்த் தும் வகையில்தான் வள்ளுவர் தன் குறளில் எடுத்துக் கூறியுள்ளார்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்
தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்''
—குறள்



திராவகத்தை வீசுவது என்ற அளவுக்கு அந்தக் கும்பல் வன்முறைக்குத் துணிந்து விட்டிருக்கிறதாம்....

கொடியோரின் சதித் திட்டம் நிறைவேற எள்ளளவும் இடந் தரலாகாது என்ப தற்காக அண்ணாவும் மற்ற வர்களும் முன் கூட்டியே கைதாகி போலீசாரின் வலுக் கட்டாயமான பாதுகாப்பிற் குரியவர்களாகி விட வேண் டும் என்று கேட்டுக் கொண் டார் அந்த அதிகாரி.

அண்ணாவிடம் இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது. அண்ணா உடனடியாகத்தமது எண்ணத்தைத் தெரிவித்து விடவில்லை. நிலைமைகளுக்கு ஏற்ப முடிவெடுப்பதாகக்கூறி விட்டார்.

மாறுநாள் அண்ணா கை தானார்.

அண்ணா கைதானதை யொட்டி கழகத் தலைவர்க ளும் முன்னணியினரும் கூடக் கைது செய்யப்பட்டனர். நானும் கைது செய்யப்பட் டேன்.

அண்ணாவும் நாங்களும் பத்து நாட்கள் சிறை வைக் கப்பட்டிருந்தோம். அண்ணா வுடன் சிறையிலிருக்கும் பெரும்பேறு எனக்குக் கிடைத்தது.

அண்ணாவுக்கு அந்தப் பத்து நாட்களும் நிம்மதியற்ற நாட்களாய்க் கழிந்ததை நேரில் கண்டேன். மக்கள் பூச்சி புழுக்களைப்போல் புற் றீசல்களைப்போல் செத்து மடியும் அவலத்தை செய்தித் தாள்களின் வாயிலாகப் படித்தறிந்து மனம் பொருமி னர் அண்ணா வாடி வதங்கி வேதனையில் உழன்றார்.

அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டதால் பக்தவத் சலம் அரசு அனைவரது வெறுப்புக்கும் உள்ளாகியது. பொதுமக்கள் அனைவருமே பக்தவத்சலனரைப் பகை யாளியாகக் கருதும் நிலை யினை உருவாக்கிவிட்டது மொழிப் போர்.

''எப்படியாவது துப்பாக் கிச் சூடு நடத்தித் தீரவேண் டும் என்ற நிலைமையினை உரு வாக்கிவிட வேண்டும். பத்து பிணங்கள்விழுந்தால் போதும் இன்றைய ஆளுங் கட்சி யினர் பதவியிழந்து நாம் ஆட்சிக்கு வந்துவிடலாம்'' என்க் கருதும் எதிர்க்கட்சித் தலைவர்களை இன்று பார்க் கிறோம்.

ஆனால் எதிர்க் கட்சித் தலை வராக அன்று இருந்த அண் ணனே சாவுச் செய்தி கேட்ட போதெல்லாம் துடிதுடித்துப் போனார். 'துப்பாக்கிச் சூடு களால் ஆளுங்கட்சி வீழ்ச்சி யுறுகின்றது. அதனால் நமக்கு ஆதாயம் என்று லாப நஷ் டக் கணக்குப்போடும் அர சியல் வியாபாரியாக நமது அண்ணன் இருக்கவில்லை. ஓர் உயிர் பறிபோயினும் மனம் பதறும் மனிதாபிமானியாக விளங்கியவர் அண்ணா.

ஓ, அப்படித்தான அவ ரால் இருக்க முடியும்! ஏனெ னில் அவர் அண்ணா!

நினைவு இரண்டு

நினைவுகள் கணித வாய்ப் பாடுகள் அல்ல. ஒரே சீராக முன்னது பின்னது என முறைப்படி அவை வருவ தில்லை.

இதோ, மொழிப்போருக்கு முந்தைய சம்பவம் ஒன்று. கழக வரலாற்றில் முக்கிய திருப்பமாக அமைந்துவிட்ட சம்பவம்!

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் லாயிட்ஸ் சாலை இல்லத்தில் அண்ணா தங்கியிருக்கிறார். கழகத் தலை வர்களையும், முன்னணியின ரையும், நாடாளு மன்ற —சட்டமன்ற உறுப்பினர்களை யும், பொதுக்குழு——செயற் குழு உறுப்பினர்களையும் நிர் வாகிகள் அல்லாதவர்களை யும் கூட அண்ணா அழைத் துப் பேசுகிறார். அவர்களுடன் விவாதிக்கிறார். அனைவரின் எண்ணங்களையும் உள்ளுணர் வுகளையும் பொறுமையோடும் கவனமாகவும் கேட்டுத் தெரிந்துகொள்கிறார். இவ் வளவுக்கும் அவர் தமக்குள் ளாகவே ஒரு முடிவுக்கு வந் தான பிறகுதான் இப்படி யொரு கருத்தரங்கினை நடத் துகிறார்.

தமது முடிவினை ஓர் அறி விப்பாக வெளியிட்டு அனை வரும் அதற்குக் கட்டுப்படும் படி அவரால் செய்திருக்க முடி யும். அந்த அளவுக்கு அவ ருக்கு அதிகாரமும் உரிமை யும் ஒருமனதான பேராதர வும் இருந்தன. ஆனால் அண்ணா அப்படிச் செய்து விடவில்லை. தமது முடிவினை எவர் மீதும் அவர் திணிக்க வில்லை. தக்க நியாயங்களை எடுத்துக் கூறி அனைவரும் தாமாகவே அந்த முடிவினை மனமுவந்து ஏற்குமாறு செய் தார் அண்ணா.

நாட்டுப் பிரிவினைக் கோரிக் கையைக்கழகம் கைவிடவேண் டும்' என்பதுதான் அந்த முடிவு!

'ஜனநாயக மரபுதான் நாகரிகமான பண்பு - எந்த வொரு அமைப்பிற்கும் அது தான் ஆரோக்கியமானஅணுகு முறை' என்ற உணர்வு கழ கத்தவரிடையே ஆழப்பதிந்து நீடித்து நிலைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் தான் அண்ணாவை இப்படி நடந்து கொள்ளச் செய்தது!

அமைதியான முறையில் அனைவரும் ஒருமனதான முடி வுக்குவரும் (Consensus)என்ற ஜனநாயகப் பாடத்தை அன் றே நமக்குக் கற்றுத் தந் தார் அண்ணா!

நினைவு மூன்று

அவசரக்காரர்கள் சிலர் இடையிலே விலகிச் சென்ற நேரத்திலும் அவர்களை இழந் துவிட அண்ணா எளிதில் சம்மதிக்கவில்லை. தாமாக நழுவிச் சென்ற அவர்களை மீட்டு வர வேண்டுமென வெகுவாக முயன்றவர் அண்ணா.

'நூறு ஆடுகளை மேய்ச்ச லுக்கு ஓட்டிச் சென்ற மேய்ப்பன் தொண்ணூற் றொன்பது ஆடுகள் கொட்டி

லுக்குத் திரும்பினால் அதற்காக மகிழ்ந்து கொண்டிராமல் காணுமற் போன ஓர் ஆட்டையே கவலையுடன் தேடிக் கொண்டிருப்பான் - அந்தஒருஆட்டின்நினைவாகவே எப்போதும் இருப்பான்' என்று நீதிக்கதை சொன்னார். ஏசுநாதர். தம்மையும் அது போன்ற மேய்ப்பனாக ஏசு நாதர் கூறிக்கொண்டார்.

அண்ணாவும் அத்தகைய தொரு மேய்ப்பனாக இருந்தவர்தான்!

நினைவு நான்கு

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தேறி முடிவுகளும் வெளியாகிவிட்டன. 'கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கவேண்டும்' என்று மக்கள் தீர்ப்பளித்தாகிவிட்டது.

57-ல் முதல் தடவையாகத் தேர்தல் களத்தில் இறங்கி பதினைந்தே இடங்களைப்பெற்ற கழகம் மிகக் குறுகிய கால இடைவெளியில் மிக மிகப் பெரும்பான்மை பலம் வாய்ந்த ஆளும் கட்சியாக வளர்ச்சியுறும் மகத்தான சாதனை. சாதனையைப் புரிந்திருக்கிறார் அண்ணா. அனைத்துலகமும் அது கண்டு வியந்து நிற்கிறது.

ஆனால் அண்ணாவோ அவரிடம் எப்போதுமுள்ள அடக்கத்திற்கு சிறிதளவும் குறைபாடின்றிக் காணப்படுகிறார். முன் எப்போதும் இல்லாத அச்ச உணர்வுங்கூட அவரது முகத்திலே தென்படுகிறது.

''நான் எதிர்பார்த்தையும் விட சிறிது சீக்கிரமாகவே மக்கள் கழகத்தின் கரத்தில் பொறுப்பை ஒப்படைத்துவிட்டிருக்கிறார்கள்' என்று பெருந்தன்மையுடன் கூறுகிறார் அண்ணா. அது மட்டுமா அன்றுவரை தூற்றித் திரிந்தவர்களையும், அலட்சியம் புரிந்தோரையும் வீடு தேடிச் சென்று ஒத்துழைப்புத் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொண்டு திரும்புகிறார்- சட்டமன்றத்தில் எவரையும் பொருட்படுத்தத் தேவையில்லை' என்ற அளவுக்கு தமது கட்சிக்கு மிகப் பெரும் பான்மை பலம் கிடைத்து விட்டிருக்கிறது என்ற போதிலும்கூட!

''பொறுப்பினை மக்கள் நம்மிடம் ஒப்படைத்துவிட்டார்கள். இந்தப் பொறுப்பை சரிவர நிறைவேற்றியாக வேண்டும்' என்ற அச்ச



உணர்வுடன் பதவியினை ஏற்பதாகக் கூறுகிறார், அண்ணா!

ஆளுங்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அண்ணா வெற்றி பெற்ற சட்டமன்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசுகிறார். அதனைக் கேட்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்துள்ளது.

தலைசிறந்த ஆங்கில எழுத்தாளர் சாமர்செட் மாமின் வாசகங்களை அண்ணா குறிப்பிடுகிறார்!

'Beauty of life is nothing but this - each should act in conformity with its nature and business'

'வாழ்க்கையின் அழகென்பது ஒவ்வொன்றும் அதனதன் இயல்புக்கும் பொறுப்பிற்கும் சிறிதளவும் மாறுபடாது இசைவாகச் செயல்படுவதுதானே தவிர வேறு எதுவுமல்ல....

எவ்வளவு உன்னதமான தத்துவத்தை உள்ளடக்கிய வாசகங்கள்! அதைத்தான் அண்ணா தம்பிமார்களுக்கு போதிக்கிறார்.

'உறுதி குலையாத கட்டுப்பாடுதான் எதற்கும் அடிப்படை. அந்தக் கட்டுப்பாட்டுடன் கண்ணியம் தவறாது கடமையாற்றுவதுதான் கழகத்தவர்க்கு அழகு' என்கிறார் அண்ணா!

'நமது இலட்சியப் பயணத்தில் ஆட்சிப்பொறுப்பினை ஏற்கும் வாய்ப்பினைப் பெறுவது ஒரு கட்டம்தான். அதுவே இறுதிநிலை - முடிவு-அல்ல சொல்லப்போனால் தொடக்கமே இதுதான். இதை நாம் மறந்துவிடக் கூடாது. முன்பைவிட இனிமேல்தான் நாம் மிகுந்த எச்சரிக்கையோடும், பொறுப்புணர்வோடும் பணி புரிந்தாகவேண்டும் என்கிறார் அண்ணா.

அண்ணா தமது அறிவுரைப் படியே நடந்தும் காட்டினார். ஒரு சரித்திர மாணவரான அவர் ஓர் ஆட்சி வீழ்வதும், நூலாத்து நீடிப்பதும் எதனால் என்பதை நன்கு உணர்ந்திருக்தார். கழக ஆட்சி எவ்விதக் குறைபாடுமின்றி மக்களின் பேராதரவுடன் தமிழகத்தில் நீடித்து நிலைப்பதற்கான தற்காப்பு திறப்புகளை (Safety Valves) அவர் உருவாக்கி வைத்தார். அவற்றின் பயனாக கழக ஆட்சி மேலும் வலிவோடும் பொலிவோடும் நீடிக்கிறது. இனியும் நீடித்து நிலவும்!



சென்னை
தேவிபாரடைஸ் 70M.M
(ஏர்கண்டிஷண்ட்)
அகஸ்தியா
ராக்ஸி மற்றும்
தென்னாடெங்கும்
நஹாதா அளிக்கும்
அவள்! A
ஈஸ்ட்மென்கலர்
டைரக்ஷன்
A.C.திருலோக்சந்தர்
A.L.நாராயணன்/சங்கர்கணேஷ்/வாலி
MOULIS

தந்தி: "TAICOBANK" P. B. No. 4503.

போன்: 88414.

தமிழ்நாடு மாநில தொழிற் கூட்டுறவு வங்கி லிமிடெட்.,

தெ. IND594.

3-144, அண்ணாசாலை சென்னை—6

தலைவர்: S. ராஜரத்தினம் எம்.ஏ., ஏ.ஐ.ஐ.பி.

இவ்வங்கி பிக்சட் டெபாசிட்டுகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களை வழங்குகிறது. ஓராண்டு மற்றும் அதற்கு மேல் கால வரையுள்ள பிக்சட் டெப்பாசிட்டுக்கும், வட்டிக்கும் தமிழ்நாடு அரசு நிபந்தனையின்றி உத்திரவாதமளித்துள்ளது.

தற்போதுள்ள வட்டி விகிதங்கள்

காலம்	வட்டி விகிதம் வருடம்	ஒன்றிற்கு
ஓராண்டு மற்றும் அதற்கு மேல்	,,	6½%
2 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	,,	7%
3 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	,,	7½%
5 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	,,	7¾%
7 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	,,	8%

கல்வி நிறுவனம், சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களால் செலுத்தப்படும் டெப்பாசிட்டுகளுக்கு வட்டி விகிதங்களுக்கு மேல் ½% வழங்கப்படும்.

- ரூ. 10,000—மற்றும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கு மாதந்தோறும் வட்டி அளிக்கப்படும்.
- ரூ. 100—குறைந்த டெப்பாசிட் அளவாக ஏற்றுக் கொள்ளப்படும்.
- வருமான வரி, சொத்து வரிகளில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.
- நாக்பூர், கல்கத்தா, டெல்லி, பம்பாய், ஆந்திரா, மைசூர், கேரளா, மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இந்திய மாநில வங்கியில் (ஸ்டேட் பாங்கு) தனிக் கட்டணம் ஏதுமின்றி தொகைகளை செலுத்தலாம்.

Our fixed Deposits are trustee securities within the Meaning of section 20 of the Indian trusts ACT, 1882.

அரசாங்கத்தால் அதிகப்படியானவர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெருக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு தொழில் சொஸைட்டிகளுக்கு இவ்வங்கி குறைந்த வட்டி விகிதத்தில் முதலீடு செய்யும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க—

ஏ. ஜெ. சீனிவாசன், எம்.ஏ., எச்.டி.சி.,
ஏஜண்ட்.

A வாங்கி மகிழ்ந்திடுவீர்! வாழ்வில் உயர்ந்திடுவீர்!

உங்களின் அன்றுட வாழ்க்கைக்குத் தேவையான

- எல்லாவகை புஷ் ரேடியோக்கள்
- டிரான்ஸிஸ்டர்கள்
- எச்.எம்.வி ரேடியோக்கள்
- கைக் கடிகாரம்
- இஸ்திரிப்பெட்டி
- பிரஷர் குக்கர்
- ரெக்கார்டு பிளேயர்
- வாட்டர் ஹீட்டர்
- தையல்மிஷின்
- சைக்கிள்கள்
- சுவர்க் கடிகாரம்
- மின்விசிறிகள்
- ஸ்டீல் கப் போர்டு
- ஸ்டீல் பர்னிச்சர்
- சோபா-கம்-பெட்
- அலாரம் டைம்பீஸ்
- வெட் கிரைண்டர்
- யூ-ஃபோம் மெத்தை
- இசைத்தட்டுகள்

ஆகியவை

எளிய தவணைகளில் எங்களிடம் கிடைக்கும்

A அருள் & கோ

45, ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை
சென்னை-15. போன்: 441524. 446175.

கிளைகள்:
70, திருச்சி மெயின் ரோடு, சேலம்-1. போன்: 5033, 5516
15, டவுன்ஹால் ரோடு, கும்பகோணம். போன்: 938
60, ஜவாஹர் ரோடு, விழுப்புரம்.
போன்: 238

சேலத்திலும், கும்பகோணத்திலும் ஏர்கண்டிஷன் வசதியுடன்

எல்லா மொழிகளிலும் இசைத் தட்டுகள், கிடைக்கும்

ARIES

ஓர் முதல் தரமான சந்தர்ப்பம்

உங்கள் சிறு தொழிலைத் தொடங்க
டி ஐ ஐ சி நிதியுதவி

விபரங்களுக்கு உடனே அணுகவும்.

டி ஐ ஐ சி
இதயபூர்வமான
நிதியுதவி

தமிழ்நாடு இண்டஸ்டிரியல்
இன்வெஸ்ட்மென்ட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்

எல். எல். ஏ. பில்டிங்ஸ்,
150-ஏ, மவுண்ட் ரோடு, சென்னை-2.

டிஐஐசி
இதயபூர்வமான நிதியுதவி

கிளைகள்: 1231, தெற்கு மெயின்தெரு, தஞ்சாவூர்;
247, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.
பால் நிலையம், 6-37, ரேஸ்கோர்ஸ்ரோடு,
கோயம்புத்தூர்-18.

கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்

திரு. ஏ. எப். இராசா எம்.ஏ., எம்.எல் ஏ.,
பெருந்தலைவர்

அஞ்சல் பெட்டி எண். 1398.
கோயமுத்தூர்-18.

எங்களது வங்கியில் பிக்சட் டிபாசிட்டுகளுக்கு கீழ்க்கண்ட விகிதப்படி வட்டிஅளிக்கப்படும்.

ரூ. 1 000/-மும் அதற்கு மேலும்:

15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்கள் முடிய 2.25% வருடத்திற்கு
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்கள் முடிய 3.25%வருடத்திற்கு

ரூ. 100/-ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும்

91	நாட்களுக்கும்	6	மாதங்களுக்குள்ளும்	5.00%	,,
6	மாதங்களுக்கும்	12	மாதங்களுக்குள்ளும்	5.50%	,,
12	மாதங்களுக்கும்	24	மாதங்களுக்குள்ளும்	6.50%	,,
24	மாதங்களுக்கும்	36	மாதங்களுக்குள்ளும்	7.00%	,,
36	மாதங்களுக்கும்	60	மாதங்களுக்குள்ளும்	7.50%	,,
60	மாதங்களுக்கும்	அதற்கு மேலும்		7.75%	,,

குறிப்பு:— தர்ம ஸ்தாபனங்கள் அல்லது மத ஸ்தாபனங்கள் (Charitable or Regious Institutions) கல்வி நிறுவனங்கள் பிக்சட் டிபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதத்திற்கு மேல் ½%வட்டி சேர்த்து கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

36 மாதங்களும், அதற்கு மேலும் உள்ள பிக்சட் டிபாசிட்டுகளின் அசலுக்கும், வட்டிக்கும் (கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தவிர) அரசாங்க உத்திரவாதம் உண்டு.

சேவிங்ஸ் டிபாசிட்டுகள்:—
1.4.72 முதல் 4½% வட்டி வழங்கப்படுகிறது.

எம். பழனிசாமி, பி.காம்., எச்'டி.சி.
செயலாளர்.

அற்புத அலுமினியம் உற்பத்தி உயர
தீவிர திட்டம் தீட்டி அதை ஆவன செய்ய.....

மதரூஸ் அலுமினியம் கம்பெனி இப்பொழுது ஈடுபட்டுள்ளது. தனது தற்போதைய ஆண்டொன்றுக்கு உற்பத்தித் திறன் 2500 டன்களா கும். இதை 25000 டன்களென படிப்படியாக உயர்த்த ஏற்பாடு செய்து வருகிறது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த மிகவும் பிரபல கம்பெனியான மாண்டி காடினி எடிஸன் ஒத்துழைப்புடன் இயங்கி வரும் இந்த நிறுவனம் தனியார் துறையில் மாபெரும் ஸ்தாபனமாக தென்னகத்தே விளங்கி வருகிறது. மேலும் சீக்கிரமே தகடுகள் தயாரிக்கும் உருட்டாலை முதலியன ஸ்தாபிக்கவும் ஏற்பாடு செய்து வருகின்றது. இக்கம்பெனி நமது நாட்டின் அந்நிய செலாவணியை பெருமளவு மிச்சப்படுத்துவது டன் அதன் சீரமைப்புப் பணியிலும் பெரும் பங்கு கொண்டுள்ளது.

MALCO

மதரூஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்,

பதிவு காரியாலயம்: கோயமுத்தூர்.

தொழிற்சாலை: மேட்டூர் அணை.



Regd. No. M. 7436 MURASOLI (Anna Malar 1972)
(Suppliment to Murasoli Issue dt. 15—9—1972)

சேலம் கூட்டுறவு மத்திய வங்கி, எண். 151.

சேலம்-1.

தொலைபேசி எண். 2402.

கிளைகள்: நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம், சிறப் பங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

கால் டெபாசிட்டுகள்:

ரூ. 5,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	3¼%
ரூ. 10,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	3½%

சேமன் டெபாசிட்டுகள்:

ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும்	4 %
31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும்	4½%

பிக்சட் டெபாசிட்டுகள்:

ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு:

91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள்	5½%
6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள்	6 %
12 மாதத்திற்கும் அதற்கு மேல் 24 மாதத்திற்குள்	6¾%
24 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள்	7¼%
36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள்	7½%
5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள்	7¾%
6 வருடங்களுக்கும் அதற்கு மேலும்	8 %
நடப்பு கணக்கு ½%	சேமிப்பு கணக்கு 4½%

அறநிலையங்களுக்கான பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு ½% மேற்கொண்டு கூடுதலாகக் கொடுக்கப்படும். ரூ. 5,000க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதியுண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.
தலைவர்

வை. இராமலிங்கம்,
செயலாளர்.

நி. இராஜமாணிக்கம்,
நிர்வாக அலுவலர்.

அஞ்சுகம் பதிப்பகத்திற்காக முரசொலி அச்சகத்தில் ஆசிரியர் மாறனால் அச்சிடப்பட்டு 4—128 அண்ணாசாலை, சென்னை-6 லிருந்து வெளியிடப்படுகிறது.